விலை: 30.00
பக்கங்கள் : இருபத்து நான்கு
website : www.valampurii.lk
Viber : 076 636 3378

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக்கட்டணம்
1000/= + 300/= மட்டுமே

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

சங்கு 20 வள்ளுவர் ஆண்டு 2050 கார்த்திகை 18 புதன்கிழமை (04.12.2019) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 350

## அச்சுறுத்தலுக்குள்ளான சுவிஸ் தூதரகப் பெண் நாட்டை விட்டு வெளியேற நீதிமன்றம் தடை

### குற்றப்புலனாய்வுத் திணைக்களத்திடம் வாக்குமூலம் வழங்கவும் உத்தரவு

(கொழும்பு)

தடுத்து வைத்து அச்சுறுத்தப்பட்டதாகக் கூறப்படும் இலங்கைக்கான சுவிட்சர்லாந்து தூதரக அதிகாரியான காலியா பெரிஸ்ட் பிரான சிஸ் எதிர்வரும் 9ஆம் திகதி வரை வெளிநாடு செல்ல நீதிமன்றம் தடை உத்தரவு பிறப்பித்துள்ளது.

கொழும்பு பிரதம நீதவான் லங்கா ஜயரத்ன இந்த உத்தரவை பிறப்பித்துள்ளார்.

இதேவேளை, குறித்த சுவிட்சர்லாந்து தூதரக அதிகாரியை எதிர்வரும் 9ஆம் திகதிக்கு முன்னர் குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தில் வாக்குமூலம் வழங்குமாறு நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

சுவிஸ் தூதரகத்துடன் தொடர்புடைய தகவல்களை வெளிப்படுத்தக்கோரியே, 23

## இரணைமடுவின் நீர்மட்டம்

### 26 அடியாக உயர்வு

(யாழ்ப்பாணம்)

தொடர்ச்சியாக பெய்து வரும் கன மழை காரணமாக கிளிநொச்சி இரணைமடுக்குளத்தின் நீர்மட்டம் 26.8 அடியாக உயர் வடைந்துள்ளது. 23

## பொதுமக்கள் முறைப்பாடு

### அலுவலகம் திறப்பு

(கொழும்பு)

அமைச்சுக்கள் மற்றும் அரச நிறுவனங்களுடன் தொடர்பான முறைப்பாடுகள் இருப்பின் அதை பிரதமரின் பொதுஜன தொடர்புகள் பிரிவில் 23

## அல்வாய் வடக்கில் கோஷ்டி மோதல்

### மூவருக்கு கத்திக்குத்து

(கரணவாய்)

வடமராட்சி அல்வாய் பகுதியில் இடம்பெற்ற கோஷ்டி மோதல் சம்பவம் ஒன்றில் கத்திக்குத்துக்கு இலக்கான மூவர் படுகாயம் அடைந்த நிலையில் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் 23

### வலிகாமம் வடக்கு தையிட்டியில்


# தனியார் காணியை ஆக்கிரமித்து விகாரை கட்டும் இராணுவம்

### ஆட்சி மாற்றத்தின் பின் மும்முரமாக கட்டுமாணப் பணிகள்

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் வடக்கு தையிட்டியில் தனியார் காணியை ஆக்கிரமித்து விகாரை கட்டும் பணியில் இராணுவம் ஈடுபட்டுள்ளது.

ஆட்சி மாற்றத்தின் பின் விகாரை அமைக்கும் பணி மும்முரமாக இடம்பெற்று வருகின்றது. (23ஆம் பக்கம் பார்க்க)



## நாடு முழுவதும் சீரற்ற வானிலையால்

### 14, 164 பேர் பாதிப்பு, மழை தொடரும் மீனவர்களுக்கு எச்சரிக்கை, காற்றின் வேகம் அதிகரிக்கும்

(கொழும்பு)

சீரற்ற வானிலை காரணமாக 4153 குடும்பங்களைச் சேர்ந்த 14,164 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையத்தின் பிரதிப் பணிப்பாளர் பிலதிப் கொடிபிலி தெரிவித்துள்ளார்.

சீரற்ற வானிலை காரணமாக இதுவரை 6 வீடுகள் முழுமையாகவும் 859 வீடுகள் பகுதியளவிலும் சேதமடைந்துள்ளதாக அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

யாழ்ப்பாணம், மன்னார், கிளிநொச்சி மற்றும் வவுனியா ஆகிய இடங்களிலும் 75 முதல் 100 மில்லி மீற்றர் 23

## தமிழீழ விடுதலைப் புலிகள் குற்றவியல் அமைப்பு இல்லை

### சுவிஸ் உயர்நீதிமன்றம் தீர்ப்பு

(பேர்ன்)

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பு ஒரு குற்றவியல் அமைப்பு இல்லை என சுவிட்சர்லாந்து நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியுள்ளது.

அத்துடன், 12 தமிழர்களுக்கு எதிராக அந்த நாட்டின் சட்டமா அதிபர் திணைக்களம் சுமத்தியிருந்த குற்றச்சாட்டுகளில் இருந்து அவர்களை நீதிமன்றம் விடுதலை செய்துள்ளது.

இது குறித்து நேற்று 23

## விசாரணைக்குட்படுத்த முடியாத நிலையில் தூதரக பணியாளர்

### சுவிஸ் இராஜாங்க செயலாளர் நேற்றும் தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கையில் கடத்தப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்ட தமது தூதரக பெண் பணியாளரின் உடல்நிலை காரணமாக அவரை இப்போது விசாரணைக்கு உட்படுத்த முடியாத நிலை உள்ளதாக சுவிட்சர்லாந்தின் இராஜாங்க செயலாளர் பாஸ்கல் பெரிஸ்வில் நேற்று தெரிவித்துள்ளார்.

ஜேர்மனிக்கும் சுவிட சர்லாந்திற்குமான இலங 23

## 297 கிலோ பீடி சுற்றும் இலைகள்

### மன்னாரில் மீட்பு

(மன்னார்)

மன்னாரில் கடற்படையினரால் மேற்கொள்ளப்பட்ட சோதனை நடவடிக்கையில் 297 கிலோ பீடி சுற்றும் இலைகள் மீட்கப் பட்டுள்ளன. 23

## ஈரோஸ் அருளர் காலமானார்



(யாழ்ப்பாணம்)

தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் முன்னோடிகளில் ஒருவரான ஈரோஸ் அருளர் எனப்படும் இ.அருள்பிரகாசம் நேற்றுக் காலமானார்.

ஈரோஸ் அமைப்பை உரு வாக்கியவர்களில் ஒருவர் அருளர் என்பது குறிப்பிடத் தக்கது.

சிறிது காலம் நோய்வாய்ப்பட்டிருந்த அவர் யாழ் போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று 23

### கடல் அட்டைகளுடன்

## மன்னாரில் 6 பேர் கைது

(மன்னார்)

சட்டவிரோதமாக பிடிக்கப்பட்ட கடல் அட்டைகளுடன் 6 பேரை கடற்படை நேற்று செய் 23

### இலங்கை பௌத்த நாடாகும்

# அரசு அதனை அடிப்படையாக வைத்தே ஆட்சியை முன்னெடுக்கும்

### உயர்கல்வி அமைச்சர் பந்துல குணவர்த்தன

(கொழும்பு)

இலங்கை பௌத்த நாடு. இந்த அரசு அதனை அடிப்படையாக வைத்தே ஆட்சியை முன்னெடுக்கும் என்று உயர்கல்வி அமைச்சரும் அமைச் 23

### இந்தியாவின் அழைப்புக்கு

## காத்திருக்கிறோம்

### – கூட்டமைப்பு

(யாழ்ப்பாணம்)

இலங்கையில் ஏற்பட்டிருக்கின்ற ஆட்சி மாற்றத்தின் பின்னர், இந்தியாவின் அழைப்புக்காக காத்திருப்பதாக, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு 23

## வகுப்புக்கள்

- இரசாயனவியல்
- உயிரியல்
- தரம் 06-O/Lவரை சகல பாடமும் வீடு வந்து கற்பிக்கப்படும்.
- தரம் 06-O/L வரை குழுக்களாக மாத்திரம் கற்பிக்கப்படும்.

**T.P.No : 076 793 7121** (1369)



**வலம்புரி**
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532


## வட மாகாண முன்பள்ளி ஆசிரியர் சங்கத்தின் பொதுச்சபைக் கூட்டம்

வட மாகாண முன்பள்ளி ஆசிரியர் சங்கத்தின் பொதுச்சபைக் கூட்டம் இல. 51, வைமன் வீதியில் அமைந்துள்ள ஆறுதல் நிறுவன மண்டபத்தில் 21.12.2019 அன்று காலை 10.00 மணிக்கு தலைவி திருமதி **யோ.கேமநளினி** அவர்களின் தலைமையில் இடம்பெறவுள்ளது. அக் கூட்டத்திற்கு அனைவரையும் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம். அத்துடன் நீங்கள் பின்வரும் பதவிகளில் ஏதாவது ஒன்றில் பதவி யேற்க விரும்பினால் பொதுச்சபைக் கூட்டம் நடைபெறும் திகதிக்கு 10 நாட்கள் முன்னராக எப்பதவியில் போட்டியிட விரும்புகின்றீர்கள் என்பதை எழுத்து மூலமாக அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**போட்டியிடும் பதவி -** தலைவர், உபதலைவர், செயலாளர், உபசெயலாளர், நிதிச் செயலாளர்.

**அனுப்பி வைக்கவேண்டிய முகவரி**
**இல.51, வைமன் வீதி, யாழ்ப்பாணம்.**

(1367)

## 3ஆம் ஆண்டு நினைவுகளில்...

## அமரர் நாகலிங்கம் புவனேந்திரன்

*திதி : பூர்வபக்க அட்டமி*



தோற்றம் : 25.02.1950
மறைவு : 07.12.2016

அன்பின் உருவமாய்
பண்பின் சிகரமாய் உயர்ந்து
ஆலமர விருட்சமாய் நிழல் தந்து
பாசமுடன் எமையெல்லாம் வளர்த்து
கூடியிருந்த நாட்கள் ஒவ்வொன்றும்
குதூகலமாய் இருந்து விட்டு
எமையெல்லாம் பரிதவிக்கவிட்டு
எங்கு சென்றீர் மூன்றாண்டு
கடந்து சென்றதப்பா நீர் சென்று
ஆறுமோ எம் துயர்
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

**முருகமூர்த்தி வீதி, நெல்லியடி.** **மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள். பெறாமக்கள்**

(1358)

## தசாக குருஹயக்ஞ அழைப்பு

நிகழும் விகாரி வருஷம் கார்த்திகை மாதம் 10ஆம் நாள்
26.11.2019 செவ்வாய்க்கிழமையன்று சிவபதமடைந்த
எமது குடும்பத்தலைவர் அமரர்

## சிவஸ்ரீ சாமி கனகசபாபதிக் குருக்கள்



அவர்களின் ஆத்ம சாந்திக் கிரியைகள் பின்வரும் தினங்களில் நடைபெறும்.

| | | | |
|---|---|---|---|
| 05.12.2019 | வியாழக்கிழமை | பகல் 10.00 மணி | தசாகம் |
| 06.12.2019 | வெள்ளிக்கிழமை | பகல் 10.00 மணி | ஏகோதிஷ்டம், மாசிகம் |
| 07.12.2019 | சனிக்கிழமை | பகல் 10.00 மணி | சபிண்டீகணம் |
| 08.12.2019 | ஞாயிற்றுக்கிழமை | மதியம் 12.00 மணி | கிருஹயக்ஞும், சமாராதனை, மதியபோசனம் |

உற்றார், உறவினர், நண்பர்கள், அன்பர்கள் அனைவரையும் அன்னாரின் ஆத்ம சாந்தி கிரிகைகளிலும் பிரார்த்தனைகளிலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் வேண்டிக்கொள்கின்றோம்.

**ஸ்ரீ சந்திரசேகர வீரபத்திரசுவாமி**
**கோவிலடி, உடுப்பிட்டி.**

**குடும்பத்தினர்**
**தொ.பே.இல - 077 693 0849**

(C-8426)

காரைநகர் பிரதேச சபைக்குச் சொந்தமான கசூரினா சுற்றுலாமையத்தில் அமைந்துள்ள அரைநிரந்தரக்கடைக்கான

## கேள்வி அறிவித்தல் 2020

01.01.2020-31.12.2020 ஆம் திகதி வரை கீழ் குறிப்பிடப்படும் மாதாந்த வாடகையின் அடிப்படையில் அரைநிரந்தரக்கடை , விற்பனைக்கூடத்திற்கான கேள்விகள் கோரப்படுகின்றன.

**கேள்விகள் வழங்கப்படும் திகதி : 04.12.2019 - 16.12.2019 பி.ப.1.00 வரை**
**கேள்விகள் ஏற்றுக்கொள்ளும் திகதி : 17.12.2019 பி.ப 1.00 மணி வரை**
**கேள்விகள் திறக்கப்படும் திகதி : 17.12.2019 பி.ப. 1..30 மணிக்கு**

கேள்விப் பத்திரங்கள் இரு பிரதிகளில் தயாரிக்கப்பட்டு மூலப்பிரதியை தவிசாளர், காரைநகர் பிரதேச சபை என்ற முகவரிக்கு முத்திரையிட்டு தபால் உறையின் இடதுபக்க மேல்மூலையில் கேள்வியின் பெயர் தெளிவாக எழுதப்பட்டு பதிவுத்தபால் மூலம் அனுப்புதல் வேண்டும். அல்லது அதற்கென அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப்பெட்டியில் உரிய நேரத்திற்கு முன் இடப்படல் வேண்டும். இரண்டாவது பிரதியை பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், யாழ்ப்பாணம் எனும் முகவரியிட்டு பதிவுத்தபால் மூலம் அனுப்பி வைத்தல் வேண்டும்.

**நியந்தனைகள்**

01. கேள்விப் பத்திரங்களைப் பெறவிரும்புபவர்கள் தொடர்ச்சியாக 05 வருடங்கள் யாழ். மாவட்டத்தில் வசிப்பவர் என்பதற்கான கிராமசேவையாளரின் சான்றிதழுடன் தமது தேசிய அடையாள அட்டை மற்றும் அதன் நிழற்படப்பிரதியுடன் விண்ணப்பதாரி நேரடியாக சமுகமளித்தல் வேண்டும்.

02. கேள்விப் பத்திரங்கள் கீழ்க் குறிப்பிடப்பட்ட மீளளிக்கப்படாத படிவக் கட்டணங்கள், மீளளிக்கப் படும் வைப்புப் பணமும் செலுத்தி மேற்குறித்த காலத்திற்குள் பெற்றுக்கொள்ள வேண்டும்.

03. கேள்விகள் திறக்கப்படும் நேரத்தில் கேள்வியாளரோ அல்லது அவரது பிரதிநிதி ஒருவரோ சமுகமளிக்கலாம்.

04. உள்ளூராட்சி மன்றங்களினால் தவறுனராக கணிக்கப்பட்ட எவருக்கும் கேள் விப்படிவங்கள் வழங்கப்படமாட்டாது. எனினும் தவறுதலாக வழங்கப்பட்டால் அது நிரா கரிக்கப்படுவதுடன் இது தொடர்பான வைப்புக்கள் மீளளிக்கப்படமாட்டாது.

05. சித்தி பெறாத கேள்விதாரர்களின் பிணைப்பணம் ஒப்பந்தம் பூர்த்தியான பின்னர் மீளளிக்கப்படும்.

06. தெரிவு செய்யப்பட்ட கேள்விக்காரர் அவரது கேள்வி ஏற்றுக்கொள்ளப்பட்டது பற்றி அறிவிக்கும் கடிதம் கிடைத்து 7 நாட்களுக்குள் கேள்வித் (உரிமைத்) தொகையின் முழுத் தொகையையும் ஒரே தடவையில் செலுத்தி.01 வருடங்களிற்கான உடன்படிக்கை செய்து கடையைப் பொறுப்பேற்காது விடின் அவரது கேள்வி இரத்துச் செய்யப்படுவதுடன் கேள்விப் பிணைப்பணமும் மீளளிக்கப்படமாட்டாது.

07. கேள்வி தொடர்பாக மேலதிக விபரங்கள் காரைநகர் பிரதேச சபையில் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

குறிப்பு – குறித்த் அரைநிரந்தரக்கடை சுற்றுலாப்பயணிகளின் ஓய்வு மண்டபத்திற்கு (திறந்த) அருகில் இடம் நகர்த்தப்படவுள்ளது.

| இல | | விபரம் | மாதாந்த வாடகை | கேள்விப் படிவக்கட்டணம்(மீளளிக்க முடியாதது) | கேள்வி வைப்பு கட்டணம் (மீளளிக்க கூடியது) | ஆரம்பக் கேள்வித் தொகை |
|---|---|---|---|---|---|---|
| 01 | | அரைநிரந்தரக்கடை | ரூபா 1000.00 | ரூபா 250.00 | ரூபா 2000.00 | ரூபா 22800.00 |

**தவிசாளர், பிரதேசசபை, காரைநகர்.**

(C-8423)

## காரைநகர் பிரதேச சபை
## மீன் சந்தைகளுக்கான கேள்வி அறிவித்தல் - 2020

01.01.2020 முதல் 31.12.2020 வரை காரைநகர் பிரதேச சபையின் அதிகார எல்லைக்குட் பட்ட கீழ்க்காணும் சந்தைகள் குத்தகைக்கு விடுவதற்கான பகிரங்க கேள்வி அறிவித்தல்.

- கேள்விப் பத்திரம் வழங்கப்படும் திகதி :- 04.12.2019 - 16.12.2019 பி.ப.1.00 வரை
- கேள்விப் பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித்திகதி :- 17.12.2019 பி.ப 1.00 மணி
- கேள்விப்பத்திரம் திறக்கப்படும் திகதி :- 17.12.2019 பி.ப 2.00 மணி

கேள்விப் பத்திரங்கள் இரு பிரதிகளில் தயாரிக்கப்பட்டு மூலப்பிரதியை தவிசாளர், காரைநகர் பிரதேச சபை என்ற முகவரிக்கு முத்திரையிட்டு தபால் உறையின் இடதுபக்க மேல்மூலையில் கேள்வியின் பெயர் தெளிவாக எழுதப்பட்டு பதிவுத்தபால் மூலம் அனுப்புதல் வேண்டும். அல்லது அதற்கென அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப்பெட்டியில் உரிய நேரத்திற்கு முன் இடப்படல் வேண்டும். இரண்டாவது பிரதியை பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம் யாழ்ப்பாணம் எனும் முகவரியிட்டு பதிவுத்தபால் மூலம் அனுப்பி வைத்தல் வேண்டும்.

- கேள்விப்பத்திரத்தினை பெறவிரும்புவோர் விண்ணப்பப்படிவத்துடன் தேசிய அடையாள அட்டையினையும் அதன் நிழற்படப் பிரதியையும் கொண்டுவருவதுடன் தமது வதிவிடச்சான்றி தழையும் சமர்ப்பித்தல் வேண்டும்.
- ஆகக்குறைந்த கேள்வித்தொகையிலும் குறைந்த கேள்வி கோருபவர்களின் கேள்வி நிராகரிக்கப்படுவதுடன் கேள்வி வைப்புப் பணமும் மீளளிக்கப்படமாட்டாது.
- கேள்வி நிபந்தனைகள், அறிவுறுத்தல்களுக்கு அமையாத கேள்விக் கோரிக்கைகளை நிராகரிக்கவும் எந்தவொரு கேள்வியையும் காரணம் காட்டாது ஏற்கவோ நிராகரிக்கவோ தவிசாளருக்கு பூரண அதிகாரம் உண்டு.
- தெரிவு செய்யப்படும் கேள்விதாரர் கேள்வித்தொகையின் 1/3 பகுதியை 24.12.2019 ஆம் திகதிக்கு முன்னர் செலுத்தி சபையுடன் ஒப்பந்தம் ஒன்றினை செய்து கொள்ளல் வேண்டும்.
- கேள்விகள் திறக்கப்படும் நேரத்தில் கேள்வியாளரோ அல்லது அவரது பிரதநிதி ஒருவரோ சமுகமளிக்கலாம்.
- சந்தைகளை குத்தகைக்கு எடுப்பவர்கள் வியாபாரநோக்கத்திற்கு கொண்டு வரும் மீன் உட்பட கடலுணவு வகைகளிற்கு கிலோ ஒன்றிற்கு ரூபா 5.00 உம் வியாபாரிகளுக்கான இடவரி தொடர்பில் (மீன் சந்தை, மீன் வெட்டும் இடம்) கூடு ஒன்றிற்கு ரூபா 30.00 உம் துவிச்சக்கர வண்டி பாதுகாப்புக்கட்டணம் ரூபா 5.00 உம் மோட்டார் சைக்கிள் பாதுகாப்புக் கட்டணம் ரூபா 10.00 இனையும் அறவிடலாம். மேலதிகமாக எவ் விதக்கட்டணங்களும் அறவிடமுடியாது.
- சந்தை சுற்றாடலில் இருந்து 500m சுற்றுவட்டாரத்தில் மீன் விற்பனை செய்வது தடை செய்யப்பட்டுள்ளது.
- சந்தையை குத்தகைக்கு பெறுபவர்கள் துவிச்சக்கரவண்டி, மோட்டார் சைக்கிள் பாது காப்புக்கட்டணம் என்ற சிட்டையை கொடுத்து அதற்குரிய பணத்தை அறவிடமுடியும். சந்தைக்கு வெளியே எந்த ஒரு கட்டணத்தையும் அறவிடமுடியாது.
- மேலதிக விபரங்களை தலைமை அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

| தொகை இல | சந்தைகள் | ஆகக்குறைந்த கேள்வித்தொகை | கேள்விப் பிணைப் பணம் மீளளிக்கக் கூடியது | மீளளிக்கப்படாத கேள்விப் படிவக்கட்டணம் |
|---|---|---|---|---|
| 01 | ஆலடி மீன் சந்தை | ரூபா 231.781.00 | ரூபா 2000.00 | ரூபா 250.00 |
| 02 | வலந்தலை மீன்சந்தை | ரூபா 34.200.00 | ரூபா 1000.00 | ரூபா 250.00 |

**தவிசாளர், பிரதேசசபை, காரைநகர்.**

(C-8421)

# பிக்குமாருக்கு தேர்தலில் போட்டியிடும் வாய்ப்பை யாரும் வழங்க வேண்டாம்

## சிரேஷ்ட பிக்குமார் கோரிக்கை

(கொழும்பு)

எதிர்வரும் பொதுத் தேர்தலில் பௌத்த பிக்குமார் எவருக்கும் போட்டியிடும் வாய்ப்பை யாரும் வழங்க வேண்டாம் என பௌத்த பீடங்களை சேர்ந்த சிரேஷ்ட பிக்குமார், அரசியல் கட்சிகளின் தலைவர்களிடம் கோரிக்கை விடுக்க தீர்மானித்தனர்.

இதன் முதற் கட்டமாக சிரேஷ்ட பிக்குகள் சிலர் பிரதமர் மகிந்த ராஜபக்ஷவுக்கு இது குறித்து தெரியப்படுத்தினர்.

பௌத்த பிக்குமார் நாடாளுமன்ற உறுப்பினர்களாகவும் மாகாண சபை உறுப்பினர்களாகவும் பிரதேச சபை உறுப்பினர்களாகவும் பதவி வகிப்பது பௌத்த சாசனத்திற்கு பாதிப்பை ஏற்படுத்தும்.

பிக்குமார் ஆலோசகர்களாக இருக்க வேண்டும் என்பதால், அரசியல் பதவிகளை வகிப்பது அதற்கு தடையாக உள்ளது எனவும் சிரேஷ்ட பிக்குமார், பிரதமரிடம் சுட்டிக்காட்டினர்.

அத்துடன் கடந்த காலங்களில் நாடாளுமன்ற உறுப்பினர்களாக பதவி வகித்த போது கிடைத்த அனுபவங்கள் மற்றும் நடந்த சம்பவங்கள் ஆகியவற்றை கவனத்தில் கொண்டு எதிர்காலத்தில் பிக்குகள் எவருக்கும் நாடாளுமன்ற உறுப்பினர் பதவிகளை வழங்க வேண்டாம் எனவும் சிரேஷ்ட பிக்குமார் கோரினர்.

சிரேஷ்ட பிக்குமாரின் இந்த கோரிக்கை தொடர்பாக கவனம் செலுத்துவதாக பிரதமர் மகிந்த ராஜபக்ஷ, பிக்குமாரிடம் கூறினார்.

இந்த கோரிக்கையை ஜனாதிபதிக்கு தெரியப்படுத்த எதிர்பார்த்துள்ளதாகவும் சிரேஷ்ட பிக்குமார், பிரதமரிடம் தெரிவித்தனர்.

பொதுத் தேர்தலுக்கு முன்னதாக இந்தக் கோரிக்கையை அனைத்துக் கட்சிகளின் தலைவர்களிடமும் விடுக்க சிரேஷ்ட பிக்குமார் தீர்மானித்தனர். (இ-7)

## யாழில் சீரற்ற காலநிலை இடிந்து வீழ்ந்த ஆலய மடம்



(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டில் பெய்துவரும் அடைமழை காரணமாக கோண்டாவில் ஆசிமட அரசடி விநாயகர் ஆலயத்தின் முன்பாக இருந்த பழைமை வாய்ந்த மடம் இடிந்து வீழ்ந்தது.

நேற்று முன்தினம் இரவு பெய்த மழை காரணமாகவே குறித்த மடம் இடிந்து வீழ்ந்ததாக ஆலய நிர்வாகத்தினர் தெரிவித்தனர்.

இந்த மடத்தை ஆலய நிர்வாகம் தொடர்ந்து உரிய முறையில் பராமரித்து வந்திருந்த போதும் குடாநாட்டில் கடந்த சில நாட்களாக பெய்துவரும் தொடர்ச்சியான மழையால் இடிந்து வீழ்ந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7-10)

## வார்த்தைகளில் மட்டுமே ஐக்கியம் சமத்துவம்; நம்பிக்கை தரும் பிரதிபலிப்புக்கள் அறவேயில்லை

### புதிய அரசாங்கம் குறித்து முன்னாள் முதலமைச்சர் நஷீர் அதிருப்தி

(ஏறாவூர்)

ஐக்கியம் சமத்துவம் ஒன்றிணைவு என வார்த்தைகள் மூலமாக அழைப்புக்களும் எதிர்வு கூறல்களும் முன் வைக்கப்பட்டாலும் அணுகுமுறைகளிலும் செயல் வடிவங்களிலும் அவற்றைப் பிரதிபலிக்கக்கூடிய, நம்பிக்கைதரக் கூடிய அம்சங்களை சமகால அரசியலில் காணமுடியவில்லை.



எனவே முஸ்லிம் மக்கள் மிக நிதானமாக இக்கால கட்டத்தை கையாள வேண்டியவர்களாக இருக்கின்றனர். எமது ஒற்றுமையை திடகாத்திரமாகக் கட்டியெழுப்புவதன் ஊடாக இதனை நாம் வெற்றி கொள்ள முடியும் என ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பிரதித்தலைவரும் கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சருமான நஷீர் அஹமட் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் விடுத்துள்ள ஊடக அறிக்கையில்,

நாட்டில் ஏற்பட்டுள்ள ஆட்சி மாற்றத்தின் பின்னர் ஐக்கியம் சமத்துவம் ஒன்றிணைவு குறித்து அவ்வப்போது அழைப்புகள் விடுக்கப்படுவதுடன் கருத்துகளும் முன்வைக்கப்படுகின்றன.

எனினும் இந்த அம்சங்களில் நம்பிக்கையை ஏற்படுத்தக்கூடிய நடைமுறைகள் இல்லாது இருக்கின்றமை கவலையை ஏற்படுத்துகின்றன. உதாரணமாக தற்போது ஏற்படுத்தப்பட்டுள்ள காபந்து அரசாங்கத்தில் முஸ்லிம் ஒருவர்கூட அமைச்சராகவோ இராஜாங்க அமைச்சராகவோ பிரதி அமைச்சராகவோ நியமனம் பெறாத நிலைமை உள்ளதைப் பார்க்கிறோம்.

எதிர்காலத்தில் இத்தகைய நிலை ஏற்படுவதை நாம் அனுமதிக்க முடியாது. எனவே எமது சமூக ஒன்றுமையுடன் இந்த நிலைமையை மாற்றி அமைப்பதற்கான நடவடிக்கைகளை நாம் இப்போதே எடுத்தாக வேண்டும்.

எமது அபிலாஷைகளை, தேவைகளை நாம் நிறைவேற்றிக் கொள்ள வேண்டுமாயின் எமது அரசியல் சக்தியை நாம் பலப்படுத்தி திடப்படுத்த வேண்டியது முக்கியமானதாகும்.

இதேநேரம் எமது சமூகத்துக்கான அரசியல் குரலை நசுக்கி அதனை சிதைக்கும் நோக்கில் பிரித்தாளும் தந்திரங்கள் முன்னெடுக்கப்படுவதற்கும் நாம் இடமளித்து விடக்கூடாது. இதற்கான வழிநடத்தல்களை பிரித்தாளும் எண்ணம் கொண்டோர் செய்ய முடியாத வண்ணம் எமது மக்கள் சக்தியை நாம் கட்டியெழுப்ப வேண்டும்.

இதற்காக ஜனநாயக முறைமையில் எமது ஒண்றிணைந்த சக்தியை நாம் பறைசாற்ற வேண்டியது காலத்தின் தேவையாகவுள்ளது.

எனவே இவற்றைக் கருத்தில் கொண்டு முஸ்லிம் மக்கள் தமது அரசியல் குரலை ஜனநாயக வழியில் ஸ்திரப்படுத்திக் கொள்ள வேண்டும். அதற்கான சந்தர்ப்பம் விரைவில் வரவிருக்கின்றது. அதனை நாம் கட்சிதமாக பயன்படுத்திக் கொள்ள இப்போதே தயாராகவேண்டியது அவசியமானது என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

## எதிர்காலம் தொடர்பான ஏக்கத்துடன் வடக்கில் 20ஆயிரம் மாற்றுத்திறனாளிகள்

### தமிழ் மாற்றுத்திறனாளிகள் அமைப்பு சுட்டிக்காட்டு

(யாழ்ப்பாணம்)

வடக்கில் பல்வேறு சவால்களுக்கு மத்தியில் 20 ஆயிரத்து 11 மாற்றுத்திறனாளிகள் சமூகத்துடன் பயணிப்பதாக தமிழ் மாற்றுத் திறனாளிகள் அமைப்பு (டேற்றா) தெரிவித்தது.

யுத்தத்தால் பாதிக்கப்பட்ட வடக்கு மாகாணத்திலுள்ள மாற்றுத்திறனாளிகள் நேற்று உலக மாற்றுத்திறனாளிகளோடு இணைந்து மாற்றுத் திறனாளிகள் நாளை கொண்டாடினர்.

மாற்றுத்திறனாளிகள் அன்றாட வாழ்க்கையில் எதிர்கொள்ளும் பிரச்சினைகளுக்கு தீர்வு காணப்படாத நிலையில் வடக்கு, கிழக்கில் 38 ஆயிரத்து 12 மாற்றுத் திறனாளிகள் எதிர்காலம் குறித்த ஏக்கத்துடன் வாழ்கின்றனர்.


மாற்றுத்திறனாளிகளையும், பாதிக்கப்பட்டோரையும் இணைத்து அவர்களின் தேவைகளையும் எதிர்பார்ப்புக்களையும் நிறைவேற்றுவதற்காகத் தமிழ் மாற்றுத் திறனாளிகள் அமைப்பு பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது.

மாற்றுத் திறனாளிகள் குறித்த கொள்கையில் அவர்கள் பிறரிடம் தங்கி வாழும் நிலையிலிருந்து விடுபடுதல், பொது இடங்கள் மற்றும் அலுவலகங்களை அணுகும் வசதி, மாதாந்தம் 10 ஆயிரம் ரூபாவிற்குக் குறையாத கொடுப்பனவு, சுய தொழில் முயற்சி, அரச வேலை வாய்ப்பில் 3 வீதம் உயர்த்தப்படுத்தல் மற்றும் அனைத்து வசதிகளுடனான பராமரிப்பு இல்லங்கள் ஏற்படுத்தப்படல் வேண்டும்.

மேலும் மாற்றுத்திறனாளிகள் தொடர்பில் நிலையான சட்ட ஒழுங்கமைப்புக்கள், விசேட கல்வித் திட்டங்கள் மற்றும் சர்வதேச ரீதியில் பங்குபற்றக் கூடிய விளையாட்டு வசதிகள் ஏற்படுத்தப்பட வேண்டும்.

இவ்வாறான நிலையில் உலக மாற்றுத் திறனாளிகள் தினமான நேற்றிலிருந்து எமது மாற்றுத் திறனாளிகள் தாம் வாழும் சமூகத்தில் நிலையான ஓர் அபிவிருத்தியை அடைய அனைவரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டுமென தமிழ் மாற்றுத்திறனாளிகள் அமைப்பு மேலும் கோரிக்கை விடுத்தது. (இ-10)

## பாகிஸ்தான் பிரதமர் விடுத்த அழைப்பை ஏற்றார் மகிந்த



(கொழும்பு)

பாகிஸ்தானுக்கு விஜயம் செய்யுமாறு அந்நாட்டு பிரதமர் விடுத்த அழைப்பை பிரதமர் மகிந்த ராஜபக்ஷ ஏற்றுக்கொண்டார். இலங்கைக்கு விஜயம் செய்துள்ள பாகிஸ்தான் வெளிவிவகார அமைச்சர் ஷாட் மஹ் மூத் குரைஸி, பிரதமர் மகிந்த ராஜபக்ஷவை நேற்று முன்தினம் திங்கட்கிழமை சந்தித்தார்.

அலரிமாளிகையில் நேற்று முன்தினம் மாலை இந்தச் சந்திப்பு இடம்பெற்றது. இதன்போதே பிரதமர் மகிந்தவிடம் அவர் இந்த அழைப்பினை விடுத்தார். மேலும் இதன்போது பாகிஸ்தான் வெளிவிவகார அமைச்சர் அந்நாட்டு பிரதமர் இம்ரான் கானின் விசேட கடிதம் ஒன்றையும் பிரதமரிடம் வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# இலங்கை கிரிக்கெட் வீரர்களுக்கு விருது வழங்கிக் கௌரவிப்பு

கடந்த ஆண்டு உள்ளூர் மற்றும் சர்வதேச கிரிக்கெட் துறைகளில் திறமையை வெளிப்படுத்திய இலங்கை கிரிக்கெட் வீரர்களுக்கு விருது வழங்கும் விழா நேற்று இடம்பெற்றது.

இந் நிகழ்வானது நேற்றிரவு 7.00 மணிக்கு கொழும்பு பத்தரமுல்லையில் அமைந்துள்ள Waters Edge ஹோட்டலில் இடம்பெற்றது.

இலங்கை கிரிக்கெட் நிறுவனம் ஏற்பாடு செய்த இந் நிகழ்வில், இந்த ஆண்டு கிரிக்கெட் விருதுகளில் மொத்தம் 45 விருதுகள் வழங்கப்பட்டன. அதில் சர்வதேச போட்டிகளில் திறமையை வெளிப்படுத்தியோருக்காக 17 விருதுகளும், உள்ளூர் போட்டிகளில் திறமையை வெளிப்படுத்தியோருக்காக 33 விருதுகளும் வழங்கப்பட்டன.

## கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

எதிர்வரும் 22 மற்றும் 23 ஆம் திகதிகளில் நடைபெறும் இலங்கை உயர் தொழில்நுட்பவியல் நிறுவன 16வது பட்டமளிப்பு வைபவத்தில் HNDA, HNDM, HNDE, HNDIT, HNDTHM, HND.ENG. பட்டம் பெறும் யாழ்ப்பாண உயர் தொழில்நுட்பவியல் நிறுவன மாணவர்களுடன் கலந்துரையாடல் எதிர்வரும் 08ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு யாழ்ப்பாண உயர்தொழில்நுட்ப நிறுவனத்தில் பழைய மாணவர் சங்கத் தலைவர் செ.செல்வரதன் தலைமையில் நடைபெறவுள்ளதால் குறித்த நேரத்திற்கு பட்டம் பெறும் சகல மாணவர்களும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். (ம-3)

## தரம் ஒன்று அனுமதி பட்டியல் வெளியாகியது

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் இந்து ஆரம்பப் பாடசாலை, கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலை, யாழ்ப்பாணம் ஜோன்.பொஸ்கோ வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளில் 2020 ஆம் ஆண்டுக்கு, தரம் ஒன்றுக்காக விண்ணப்பித்தவர்களில் தெரிவு செய்யப்பட்ட மாணவர்களின் பெயர்ப்பட்டியல் அந்தந்தப் பாடசாலைகளில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது.

இவர்களுக்கான அனுமதிகளை யாழ் கல்வி வலயம் உறுதிப்படுத்தியுள்ளது. (ம)

### இரண்டாவது டெஸ்ட் சமநிலை

# இங்கிலாந்துக்கெதிரான தொடரை கைப்பற்றியது நியூசிலாந்து அணி



நியூசிலாந்து- இங்கிலாந்து அணிகள் மோதிய 2-வது மற்றும் கடைசி டெஸ்ட் போட்டி சமநிலையானதன் மூலம் நியூசிலாந்து அணி டெஸ்ட் தொடரை 1-0 என்ற கணக்கில் கைப்பற்றியது.

நியூசிலாந்து- இங்கிலாந்து அணிகள் மோதிய 2-வது மற்றும் கடைசி டெஸ்ட் கிரிக்கெட் போட்டி ஹேமில்டனில் நடந்தது.

நியூசிலாந்து அணி முதல் இன்னிங்சில் 375 ரன் எடுத்தது. இதற்கு இங்கிலாந்து பதிலடி கொடுத்தது. அந்த அணி முதல் இன்னிங்சில் 476 ரன் குவித்தது.

101 ரன்கள் பின்தங்கிய நிலையில் 2-வது இன்னிங்சை விளையாடிய நியூசிலாந்து 4-வது நாள் ஆட்டத்தின் முடிவில் 2 விக்கெட் இழப்புக்கு 96 ரன் எடுத்து இருந்தது. கேப்டன் வில்லியம்சன் 37 ரன்னும், முன்னாள் கேப்டன் டெய்லர் 31 ரன்னும் எடுத்து ஆட்டம் இழக்காமல் இருந்தனர்.

நேற்று 5-வது மற்றும் கடைசி நாள் ஆட்டம் நடந்தது. நியூசிலாந்து அணி தொடர்ந்து ஆடியது.

வில்லியம்சனும் டெய்லரும் அபாரமாக விளையாடி சதம் அடித்தனர். முதலில் வில்லியம்சன் 231 பந்துகளில் 11 பவுண்டரியுடன் 100 ரன்னை தொட்டார். 76-வது டெஸ்டில் விளையாடும் அவருக்கு இது 21-வது சதம் ஆகும்.

அதைத் தொடர்ந்து டெய்லர் 184 பந்துகளில் 100 ரன்னை எடுத்தார். இதில் 11 பவுண்டரியும், 2 சிக்சர்களும் அடங்கும். சிக்சர் மூலம் அவர் சதத்தை தொட்டார். 96-வது டெஸ்டில் விளையாடும் டெய்லருக்கு 19-வது சதம் ஆகும். டெஸ்டில் அதிக சதம் அடித்த நியூசிலாந்து வீரர்களில் முதல் 2 இடங்களில் அவர்கள் உள்ளனர்.

நியூசிலாந்து அணி 2 விக்கெட் இழப்புக்கு 241 ரன் எடுத்திருந்த போது மழையால் ஆட்டம் பாதிக்கப்பட்டது. அதோடு போட்டி முடிந்து டெஸ்ட் சமநிலை ஆனது. வில்லியம்சன் 104 ரன்னிலும், டெய்லர் 105 ரன்னிலும் ஆட்டம் இழக்காமல் இருந்தனர்.

இந்தடெஸ்டில் மொத்தம் 5 சதம் அடிக்கப்பட்டது. நியூசிலாந்து தரப்பில் லாதம், வில்லியம்சன், டெய்லர் ஆகியோரும், இங்கிலாந்து தரப்பில் பர்னஸ், ஜோரூட் ஆகியோரும் சதம் அடித்தனர்.

இங்கிலாந்து கேப்டன் ஜோரூட் இரட்டை சதம் அடித்தார். அந்த அணி ஒரு இன்னிங்ஸ் மட்டுமே ஆடியது.

இந்த டெஸ்ட் சமநிலை ஆனதன் மூலம் நியூசிலாந்து அணி டெஸ்ட் தொடரை 1-0 என்ற கணக்கில் கைப்பற்றியது.

காரைநகர் பிரதேச சபைக்குச் சொந்தமான கசூரினா சுற்றுலாமையத்தில் அமைந்துள்ள பாரம்பரிய உணவகத்திற்கான

## கேள்வி அறிவித்தல் 2020

யாழ்.மாவட்ட எல்லைக்குட்பட்ட பிரதேசங்களில் நிரந்தர வதிவிடத்தைக் கொண்ட பொதுமக்களிடமிருந்து 01.01.2020-31.12.2020 ஆம் திகதி வரை கீழ் குறிப்பிடப்படும் குத்தகை அடிப்படையில் பாரம்பரிய உணவகத்தினை வழங்குவதற்கு ஏதுவாக கேள்விகள் கோரப்படுகின்றன.

கேள்விகள் வழங்கப்படும் திகதி : 04.12.2019 - 17.12.2019 வரை
கேள்விகள் ஏற்றுக்கொள்ளும் திகதி,நேரம் : 18.12.2019 பி.ப. 1.00 மணி வரை
கேள்விகள் திறந்து பரிசீலிக்கப்படும் திகதி,நேரம் : 18.12.2019 பி.ப. 2.30 மணி

கேள்விப் பத்திரங்கள் இரு பிரதிகளில் தயாரிக்கப்பட்டு மூலப்பிரதியை தவிசாளா, காரைநகர் பிரதேச சபை என்ற முகவரிக்கு முத்திரையிட்டு தபால் உறையின் இடதுபக்க மேல்மூலையில் கேள்வியின் பெயர் தெளிவாக எழுதப்பட்டு பதிவுத்தபால் மூலம் அனுப்புதல் வேண்டும். அல்லது அதற்கென அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப்பெட்டியில் உரிய நேரத்திற்கு முன் இடப்படல் வேண்டும். இரண்டாவது பிரதியை பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், யாழ்ப்பாணம் எனும் முகவரியிட்டு பதிவுத்தபால் மூலம் அனுப்பி வைத்தல் வேண்டும்.

நிபந்தனைகள்

01. கேள்விப் பத்திரங்களைப் பெறவிரும்புபவர்கள் தொடர்ச்சியாக 05 வருடங்கள் யாழ்.மாவட்டத்தில் வசிப்பவர் என்பதற்கான கிராமசேவையாளரின் சான்றிதழுடன் தமது தேசிய அடையாள அட்டை மற்றும் அதன் நிழற்படப்பிரதியுடன் விண்ணப்பதாரி நேரடியாக சமுகமளித்தல் வேண்டும்.

02. கேள்விப் பத்திரங்கள் கீழ்க் குறிப்பிடப்பட்ட மீளளிக்கப்படாத படிவக் கட்டணங்கள், மீளளிக்கப்படும் வைப்புப் பணமும் செலுத்தி மேற்குறித்த காலத்திற்குள் பெற்றுக்கொள்ள வேண்டும்.

03. தெரிவு செய்யப்பட்ட கேள்விக்காரர் அவரது கேள்வி ஏற்றுக்கொள்ளப்பட்டது பற்றி அறிவிக்கும் கடிதம் கிடைத்து 7 நாட்களுக்குள் உரிமத் தொகையின் முழுத் தொகையையும் ஒரே தடவையில் செலுத்தி.03 வருடங்களிற்கான உடன்படிக்கை செய்து பாரம்பரிய உணவகத்தை பொறுப்பேற்காது விடின் அவரது கேள்வி இரத்துச் செய்யப்படுவதுடன் கேள்விப் பிணைப்பணமும் மீளளிக்கப்படமாட்டாது.

04. கேள்விகள் திறக்கப்படும் நேரத்தில் கேள்வியாளரோ அல்லது அவரது பிரதிநிதி ஒருவரோ சமுகமளிக்கலாம்.

05. உள்ளூராட்சி மன்றங்களினால் தவறுனராக கணிக்கப்பட்ட எவருக்கும் கேள்விப்படிவங்கள் வழங்கப்படமாட்டாது. எனினும் தவறுதலாக வழங்கப்பட்டால் அது நிராகரிக்கப்படுவதுடன் இது தொடர்பான வைப்புக்கள் மீளளிக்கப்படமாட்டாது.

06. சித்தி பெறாத கேள்விதாரர்களின் பிணைப்பணம் ஒப்பந்தம் பூர்த்தியான பின்னர் மீளளிக்கப்படும்.

07. கேள்வி தொடர்பாக மேலதிக விபரங்கள்ள காரைநகர் பிரதேச சபையின் தலைமையலுவலகத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ள முடியும்.

குறிப்பு - மாதர்சங்கம், கிராமிய மட்ட அபிவிருத்திச்சங்கங்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

| இல | விபரம் | கேள்விப் படிவக்கட்டணம் (மீளளிக்க முடியாதது) | மாதாந்த வாடகை | கேள்விவைப்பு கட்டணம் (மீளளிக்க கூடியது) | ஆரம்பக் கேள்வித் தொகை |
|---|---|---|---|---|---|
| 01 | கசூரினா சுற்றுலா மைய பாரம்பரிய உணவகத்திற்கான கேள்வி கோரல் | ரூபா 250.00 | ரூபா 3000.00 | ரூபா 1000.00 | ரூபா 48,000.00 |

தவிசாளர்,
பிரதேசசபை
காரைநகர்.

(C-8422)

AAA AND CO
*Accounting *Auditing *Advising
Accounting Trainees needed
A/L Commerce /AAT Students
(1374)
Arumugum Lane, Kalviyankadu
T.P:- 0775178387

## கண்ணீர் அஞ்சலி

திருமதி நித்தியமங்களாதேவி விவேகானந்தன்



எமது சங்கத்தின் அங்கத்தவரும், சித்த ஆதார வைத்தியசாலை பம்பைமடு, வவுனியா வைத்திய அதிகாரியுமான கிருத்திகா அவர்களின் அன்புத் தாயார் திருமதி நித்தியமங்களாதேவி விவேகானந்தன் அவர்களின் பிரிவுத் துயரில் பங்கெடுப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

(1373)

அரச சித்த வைத்திய அதிகாரிகள் சங்கம், இலங்கை

## திருத்தம்

23.11.2019 ஆம் திகதி பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட கரைச்சி பிரதேச சபையின் ஆளுகைக்குட்பட்ட பகுதிகளில் அமைந்துள்ள சந்தைகள், இறைச்சிக் கடைகள் உள்ளிட்ட குத்தகை நிலையங்களை 2020.01.01 - 2020.12.31 வரையான காலப் பகுதிக்கு குத்தகைக்கு விடுவதற்கான பகிரங்க கேள்வி அறிவித்தலில் குறிப்பிடப்பட்ட மீளளிக்கக் கூடிய கேள்வி வைப்புப் பணம் ஏற்றுக்கொள்ளக் கூடிய கேள்வித் தொகையின் 2% ஆக மாற்றப்படுகின்றது. ஏனைய நடைமுறைகளில் எவ்வித மாற்றமும் இல்லை என்பதனை அறியத் தருகின்றேன்.

தவிசாளர்,
கரைச்சிபிரதேசசபை,
கிளிநொச்சி.

(C-8420)

# திருத்தம்

## பூநகரிப் பிரதேச சபை, பொதுச் சந்தைகள், கருவாட்டுக் கடைகள், இறைச்சிக்கடைகள் குத்தகைக்கு வழங்குவதற்கான மீள்கேள்வி அறிவித்தல் - 2020

வலம்புரி பத்திரிகையில் 27.11.2019 ஆம் திகதி பிரசுரிக்கப்பட்ட குறித்த விளம்பரத்தில் முதலாவது பந்தியில் மீள் கேள்விப்பத்திரம் வழங்கப்படும் திகதி 27.11.2019 தொடக்கம் 12.12.2019 வரை, காலம் மு.ப.8.30-பி.ப. 3.30 வரை குறிப்பிடப்பட்டுள்ளது. இவ்விபரம் **"மீள் கேள்விப்பத்திரம் வழங்கப்படும் திகதி 27.11.2019 தொடக்கம் 10.12.2019 வரை காலம் மு.ப. 8.30 - பி.ப. 3.30 வரை"** என திருத்தியமைக்கப்பட்டுள்ளது என்பதுடன் குறித்த மீள் கேள்வி அறிவித்தலுடன் சேர்த்து வாசிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

அருணாசலம் ஐயம்பிள்ளை,
தவிசாளர்,
பிரதேசசபை,பூநகரி.

(C-8417)



# வாடகை ஒப்பந்த கேள்வி அறிவித்தல் யாழ்ப்பாண வலயக் கல்வி அலுவலகத்தில் இயங்கும் சிற்றுண்டிச்சாலை

யாழ்ப்பாண வலயக் கல்வி அலுவலகத்தில் இயங்குகின்ற சிற்றுண்டிச்சாலையினை 01.01.2020- 31.12.2020 வரையான காலப்பகுதிக்கு வாடகை ஒப்பந்த அடிப்படையில் வழங்குவதற்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**படிவக் கட்டணம்-ரூபா 500.00**

**கேள்வி வைப்பு - ரூபா 10,000,00**

**படிவ விநியோகம் - 04.12.2019-24.12.2019 திகதி வரை**

(அலுவலக நாட்களில் 9.00 மணி முதல் 15.00 மணிவரை)

விண்ணப்ப முடிவு-27.12.2019 ஆம் திகதி 15.00 மணி

மேலதிக விபரங்களை அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

(தொலைபேசி இல.021 222 2647)

திரு.எஸ்.சந்திரராஜா,
வலயக்கல்விப் பணிப்பாளர்,
யாழ்ப்பாண வலயக்கல்வி அலுவலகம்.

(C-8419)



வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603,
021 567 1532



# வலிகாமம் தெற்கு பிரதேச சபை,சுன்னாகம் வழங்குநர்களைப் பதிவு செய்தல் - 2020

வலிகாமம் தெற்கு பிரதேச சபையானது 2020 ஆம் ஆண்டுக்கான கீழ் குறிப்பிடப்பட்ட பொருட்கள், வேலைகள், சேவைகளை வழங்குவதற்கு தம்மை பதிவு செய்துகொள்ள விரும்பும் வழங்குநர்களிடமிருந்து விண்ணப்பங்களைக் கோருகின்றது.

| தொகுதி A | பொருட்கள் |
|---|---|
| A - 01 | காகிதாதிகள், எழுதுபொருட்கள்,உபகரணங்கள் |
| A - 02 | தளபாடங்களும் அலுவலக உபகரணங்களும் |
| A - 03 | கணனி, இலத்திரனியல் பொருட்கள், நிழல் பிரதியாக்கல் இயந்திரம், தொலைநகல் இயந்திரம் இவற்றுடன் தொடர்புடைய பொருட்கள் |
| A - 04 | திரைச்சீலைகள், சீருடை மற்றும் துணி வகைகள் |
| A - 05 | குளியலறை பொருத்திகள், மாபிள்கல் வகைகள், நீர்வழங்கலுக்கான பொருட்கள் மற்றும் அதனோடிணைந்த பொருட்கள் |
| A - 06 | கட்டட, இரும்புப்பொருட்கள், பெயின்ட் வாணிஸ் மற்றும் அதனோடிணைந்த பொருட்கள் |
| A - 07 | மின்சாரப் பொருட்கள், அதன் உதிரிப்பாகங்கள், மின்னிணைப்புக்கான பொருட்கள் |
| A - 08 | தும்புத்தடி, விளக்குமாறு, கால்துடைப்பம், மொப்பர் மற்றும் ஏனைய பொருட்கள் |
| A - 09 | சுத்திகரிப்புப் பொருட்கள் மற்றும் கிருமிநாசினிகள் |
| A - 10 | வாகன உதிரிப்பாகங்கள், துணைப் பொருட்கள், |
| A - 11 | எரிபொருட்கள், உராய்வு நீக்கிகள் |
| A - 12 | நூலகங்களுக்கான நூல்கள் |
| A – 13 | கற்கள், மண் வகைகள் |
| A - 15 | தீராந்திகள், பலகைகள் |
| A - 17 | அலங்காரப் பொருட்கள் |
| **தொகுதி B** | **சேவைகள்** |
| B- 01 | உருக்கு, மரத்தளபாடங்கள் திருத்தம் |
| B - 02 | கணனி, பிரதியாக்கல் இயந்திரம், அதனுடன் இணைந்த பொருட்கள் திருத்தமும், பராமரிப்பு செய்தலும் |
| B - 03 | காற்று குளிராக்கி, மின்மோட்டார்கள், நீர் இறைக்கும் இயந்திரம், திருத்துதலும், மீள முறுக்குதலும், |
| B - 04 | அச்சிடுதல், புத்தகங்கள் கட்டுதல் |
| B - 05 | உள்ளக தொலைபேசி இணைப்பும் உள்ளக இணைய இணைப்பும், பராமரிப்பும் |
| B- 06 | இலத்திரனியல் சாதனங்கள் திருத்தல் |
| B- 07 | இறப்பர் முத்திரை தயாரித்தல் |
| B- 08 | சுத்திகரிப்பு சேவையும் பாதுகாப்பு சேவையும் |
| B- 09 | ஏற்றியிறக்கும் சேவை (தார் முதலான வீதி மூலப்பொருட்கள் மற்றும் கட்டட மூலப்பொருட்கள்) |
| B- 09 | சகலவிதமான வாகனத்திருத்தம் |
| B- 10 | சகலவிதமான வாகன சுத்திகரிப்பு |
| B- 11 | வாகனங்களுக்குரிய ரியூப் ஒட்டுதல், உலோக வேலைகள் |
| **தொகுதி C** | **ஒப்பந்த வேலைகள்** |
| C-01 | கட்டட நிர்மாணமும், திருத்தமும் |
| C-02 | வீதி நிர்மாணமும் திருத்தமும் |
| C-03 | கிணறு அமைத்தல் |

1. வழங்கல்கள் 2020 ஆம் ஆண்டிற்கு மட்டும் செல்லுபடியானதாகும்.
2. ஒவ்வொரு தொகுதியினதும் தொடர் இலக்கம் ஒவ்வொன்றிற்கும் தனித்தனி விண்ணப்பப்படிவங்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.
3. விண்ணப்பப்படிவங்களை ஒவ்வொரு விண்ணப்பத்திற்கும் எமது தலைமையலுவலகத்தில் பதிவுக்கட்டணம் ரூ. 1000.00 (VAT, NBT நீங்கலாக) செலுத்தி தலைமையலுவலத்தில் பெற்றுக்கொள்ளலாம்.
4. விண்ணப்பப்படிவங்கள் கடித உறையின் இடதுபக்கமேல் மூலையில் வழங்கல் சேவைக்கான விண்ணப்பம் -2020 எனக் குறிப்பிட்டு "தவிசாளர், வலிகாமம் தெற்கு பிரதேசசபை, கே.கே.எஸ்.வீதி, சுன்னாகம்" எனும் முகவரிக்கு26.12.2019 ஆம் திகதிக்கு முன்னர் பதிவுத்தபால் மூலமோ அல்லது நேரடியாகவோ சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.
5. மேலதிக விபரங்களை அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

க.தர்சன்
தவிசாளர், வலிகாமம் தெற்கு பிரதேச சபை, சுன்னாகம்.

(C-8418)


## யாழ்.பல்கலையில் புதிய பீடமாக துணை மருத்துவ விஞ்ஞான பீடம் பதில் பீடாதிபதியாக தெய்வி தபோதரன்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் பல்கலைக்கழ்கத்தின் துணை மருத்துவ விஞ்ஞான பீடத்திற்கு பதில் பீடாதிபதியாக தெய்வி தபோதரன் கடந்த வாரம் நியமனம் செய்யப்பட்டார்.

உடனடியாகச் செயற்பாட்டுக்கு வரும் வகையில் யாழ்ப்பாணப் 'பல்கலைக்கழக தகுதி வாய்ந்த அதிகாரி பேராசிரியர் க.கந்தசாமியால் இந்த நியமனம் வழங்கப்பட்டது.

இதுவரை காலமும் மருத்துவ பீடத்தின் கீழ் அலகாக இயங்கி வந்த துணை மருத்துவ விஞ்ஞான அலகு நகர திட்டமிடல், நீர் வழங்கல் மற்றும் உயர்கல்வி (முன்னாள்) அமைச்சர் ரவூப் ஹக்கீமால் சிறப்பு வர்த்தமானி மூலமாக கடந்த மாதம் முதல் துணை மருத்துவ விஞ்ஞான பீடமாகத் தரமுயர்த்தப்பட்டிருந்தது.

இதன்மூலம் யர்ழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் 18 ஆவது பீடமாக துணை மருத்துவ விஞ்ஞான பீடம் உருவாகியது. இந்நிலையில் குறித்த துணைப் பீடத்தின் பதில் பீடாதிபதியாக தெய்வி தபோதரன் நியமிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (இ-7-10)

## 26 சிறுவர்கள் உட்பட 66 பேருக்கு டெங்கு

(திருகோணமலை)

திருகோணமலை பொது வைத்தியசாலையில் 66 டெங்கு நோயாளர்கள் இனங்காணப்பட்டதாக திருகோணமலை பொது வைத்தியசாலையின் பணிப்பாளர் ஜகத் விக்ரமரத்ன தெரிவித்தார்.

வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நோயாளர்களில் இரத்தப் பரிசோதனையின் மூலம் 66 டெங்கு நோயாளர்கள் இனங்காணப்பட்டதுடன், இதில் 26 சிறார்களும் கர்ப்பிணித் தாயொருவரும் அடங்குவதாகவும் வைத்தியசாலையின் பணிப்பாளர் இதன்போது தெரிவித்தார். (இ-7)

## கௌரவிப்பு நிகழ்வும் பரிசளிப்பு விழாவும்

(யாழ்ப்பாணம்)

மக்கள் வங்கி சங்கானைக்கிளை நடத்தும் ஆண்டு 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்கான கௌரவிப்பு நிகழ்வும் பரிசளிப்பு விழாவும் இன்று புதன்கிழமை காலை 9 மணியளவில் சங்கானை கலாசார மண்டபத்தில் இடம்பெறும். (7)

# கனவுகளும் பலன்களும்

## கனவில் உலோகங்கள் வந்தால்...

பலவகையான உலோகங்கள் அல்லது உலோகப் பொருட்களைக் கனவில் காணும்போது அதற்கான பலன்கள் பற்றி விபரம் வருமாறு,

வீட்டிற்கு உள்ளேயோ அல்லது வெளியிலேயோ பெரிய இரும்பு ஆணி கிடப்பது போலக் கனவு கண்டால் உங்களுடைய குடும்பத்திலோ அல்லது நெருங்கிய உறவினர் குடும்பத்திலோ ஆண் குழந்தை பிறக்கும்.

இரும்பு ஊசியைக் கனவில் கண்டால் வாகன விபத்தில் சிக்க நேரிடும். இது போலக் கனவு கண்டவர்கள் பாதையில் எச்சரிக்கையாகப் பயணம் செய்து விபத்தை தவிர்க்கலாம். இரும்புப் பெட்டியைக் கனவில் கண்டால் எதிர்பாராத அதிர்ஷ்டங்கள் வரும். அதனால் கஷ்டங்கள் நீங்கும்.

வீட்டில் பெரிய செப்புப் பாத்திரம் இருப்பதுபோல கனவு கண்டால் பணம் வரும். இரும்புத் துண்டைக் கனவில் கண்டால் காரியங்கள் தாமதம் ஏற்படும். சமையல் பாத்திரங்கள் தவறி விழுந்து உடைவது போல கனவு கண்டால் நாட்டில் உணவுப் பஞ்சம் ஏற்படும். அல்லது குடும்பத்தில் உள்ள பெண்களுக்கு உடல்நலக் குறைவு ஏற்படும். அல்லது வெளியூர் பயணம் மேற்கொள்ள வேண்டியதிருக்கும்.

பாத்திரங்கள் அழகாக அடுக்கி வைக்கப்பட்டிருப்பது போல கனவு கண்டால் குடும்பத்தில் ஒற்றுமை ஏற்படும். பிரிந்த கணவன், மனைவி மீண்டும் இணைவர். திருமணமாகாத ஆண்களுக்கு விரைவில் திருமணம் நடக்கும். வீடு கிடைக்காமல் அவதிப்படுபவர்களுக்கு நல்ல வசதியான வீடு கிடைக்கும்.

மோதிரத்தைக் கனவில் கண்டால் எதிர்காலம் வளமாக இருக்கும். ஆனால் மோதிரத்தைத் தொலைத்து விட்டதாக கனவு கண்டால் திருமணம் நடப்பது கடினம். மணமானவராக இருந்தால் பிரிவு ஏற்படும்.

பொன், வெள்ளி போன்ற உலோகங்களைக் கனவில் கண்டாலும் அல்லது அவற்றை யாராவது கொடுப்பது போல கனவு கண்டாலும் நல்லது நடக்கும். ஆனால் ஒருவர் அவற்றைப் பிறருக்குக் கொடுப்பதாகவோ அல்லது பிறர் அவரிடமிருந்து பறித்துக் கொள்வதாகவோ அல்லது தொலைத்து விட்டதாகவோ கனவு கண்டால் தொழிலில் நட்டம் ஏற்படும். பலவித கஷ்ட நஷ்டங்கள் ஏற்படும்.

சாவிக் கொத்து தன்னிடம் இருப்பது போலக் கனவு கண்டால் குடும்பத்தில் உறவு அதிகரிக்கும். தொழிலில் மேன்மை ஏற்படும். பொருள் அதிகரிக்கும். சாவிக் கொத்துக் காணாமல் போனதாகக் கனவு கண்டால் பலவிதக் கஷ்ட நஷ்டங்களுக்கு ஆளாக நேரும். நம்பிக்கை மோசம் போவார்கள்.

ஈயம் கட்டியை உருக்குவது போலக் கனவு கண்டால் புதிய நகைகள் செய்யும் வாய்ப்பு ஏற்படும். வெறும் ஈயக்கட்டியைப் பார்த்தால் குடும்பத்தில் குழப்பமும் கலகமும் ஏற்படும். மணமானவர்கள் ஈயத்தைக் கனவில் கண்டால் பிரிவு ஏற்படும். செப்புத்தகடு, செப்புக்கட்டி, செப்புச் சிலை ஆகியவற்றைக் கனவில் கண்டால் பக்தி உண்டாகும். வாழ்க்கைப் பாதை சீர்படும்.

தங்கத்தை கனவில் கண்டால் நோய், நொடி உண்டாகும். வழக்குகள் ஏற்படும். சொத்துக்கள் களவு போகும். திகைக்க வைக்கும் சம்பவங்கள் நடக்கும். வியாபாரிகள் தங்கத்தைக் கனவில் கண்டால் முதலுக்கே மோசம் ஏற்படும்.

தங்கக் காசுகளைப் பிறருக்கு அளிப்பதாகக் கனவில் கண்டால் நண்பர்கள் அதிகமாவார்கள். பொற்காசுகளை வீசி எறிவதாகக் கனவு கண்டால் வீட்டில் களவு போகும். மண்ணோடு கலந்த பொன்னைக் கனவில் கண்டால் தரித்திர விமோசனம் ஏற்படும்.

வெள்ளியைக் கனவில் கண்டால் எடுத்த காரியம் வெற்றி அடையும். வெள்ளி நாணயங்களைக் கனவில் கண்டால் நல்லது நடக்கும். வெள்ளிப் பாத்திரங்களைக் கனவில் கண்டால் தரித்திரம் ஏற்படும்.வெண்கலப் பாத்திரத்தைக் கனவில் கண்டால் எடுத்த காரியங்கள் வெற்றி பெறும்.

# டெங்குக் கட்டுப்பாடு தொடர்பில் யாழில் விசேட கலந்துரையாடல்





(யாழ்ப்பாணம்)

டெங்கு கட்டுப்பாடு தொடர்பில் விசேட கலந்துரையாடல் ஒன்று வடக்கு மாகாண சுகாதார அமைச்சின் ஏற்பாட்டில் மாகாண சுகாதார அமைச்சின் கேட்போர் கூடத்தில் அண்மையில் இடம் பெற்றது. இவ் விசேட கலந்துரையாடலில் யாழ்.மாநகர முதல்வர் இ.ஆனல்ட் கலந்து கொண்டார்.

இக் கலந்துரையாடலில் டெங்கு நோயைக் கட்டுப்படுத்தல் தொடர்பாகவும், வைரஸ் தொற்று மற்றும் மலேரியா தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டதுடன், அவற்றிலிருந்து பொதுமக்கள் அனைவரையும் பாதுகாப்பதற்கான முன்னேற்பாடுகள் மற்றும் தொடர் நடவடிக்கைகள் தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டன.

மேற்படி கலந்துரையாடலில் வடக்கு மாகாண சுகாதார அமைச்சின் அதிகாரிகள், வடக்கு மாகாண சுகாதாரத் திணைக்கள அதிகாரிகள், யாழ்.மாநகர ஆணையாளர், சுகாதாரப் பிரிவினர், பொலிஸார், சிவில் சமூகப் பிரதிநிதிகள், சுகாதாரம் சார் நிறுவனங்களின் பிரதிநிதிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# யாழில் மிதிவெடி மீட்பு



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் சோமசுந்தரம் அவனியூ பகுதியிலுள்ள புகையிரதக் கடவைக்கு அருகாமையிலிருந்து மிதிவெடி ஒன்று யாழ்ப்பாணம் பொலிஸாரால் மீட்கப்பட்டது. நேற்றுக் காலை குறித்த பகுதியில் மிதிவெடி ஒன்று இருப்பதாக பொதுமக்களால் வழங்கப்பட்ட தகவல்களுக்கு அமைவாக அவ்விடத்திற்குச் சென்ற பொலிஸார் மிதிவெடியை மீட்டனர். (இ-101)

# இராசி பலன்

**மீனம்:** மனதில் இனம்புரியாத சஞ்சலங்கள் தோன்றி மறையும், எடுத்த காரிங்களை முடிப்பதில் சற்று அலைச்சல்கள் ஏற்படலாம், விரயங்கள் கூடும் நாள்.

**மேடம்:** குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம் பெறலாம், வருமானம் திருப்திதரும் வகையில் அமையும், பொது வாழ்வில் மிதிப்பும் மரியாதையும் உயரும் நாள், காரிய அனுகூலமுண்டு.

**இடபம்:** உறவினர்களும், நண்பர்களும் வலியவந்து உதவுவார்கள், தூர தேசத்திலிருந்து சுப செய்திகள் வந்து சேரலாம், எடுத்த காரியங்களில் அதிக பிரயாசை காட்டுவீர்கள்.

**மிதுனம்:** பெரிய மனிதர்களின் - சந்திப்புக்கள் இடம்பெறலாம், புதிய முயற்சிகளில் ஆர்வம் காட்டுவீர்கள், பயணங்களால் பலனுண்டு, ரோக பயமுண்டு, எடுத்த காரியத்தை முடிப்பதில் கூடிய அக்கறை காட்டுவீர்கள்.

**கும்பம்:** செய்தொழிலில் முன்னேற்றம் பெற பெரிதும் பாடுபடுவீர்கள், வழிபாட்டுச் சிந்தனை மேலோங்கும் நாள், அதிகாரிகளை அனுசரித்துச் செல்வது நல்லது, போசன சுகமுண்டு.

| | | | |
|---|---|---|---|
| | | | ராகு |
| சந் | இராசி பலன் | | |
| | கிரகநிலை சந்திராஷ்டமம் பூசம்,ஆயிலியம். | | |
| சனி,கேது குரு,சுக் | சூரி, புத | செவ் | |

04.12.2019

கார்த்திகை 18, புதன்கிழமை

சூரிய உதயம் காலை 6.15 மணிக்கு

அட்டமி பின்னிரவு 2.37 மணிவரை

சதயம் முன்னிரவு 6.35 மணிவரை

சுபநேரம் 4.45-6.15 மணிவரை

இராகுகாலம் 12-15-1.45 மணிவரை

வளவன்

**கடகம்:** உடல் நலனில் அக்கறை காட்டும் சூழ்நிலை ஏற்படலாம், எடுத்த காரியங்கள் உடனுக்குடன் முடியாமல் தாமதமாகலாம், பயணங்களின் போது விழிப்புணர்வு அவசியம்.

**மகரம்:** வார்த்தைகளில் நிதானம் தேவை, பணப்புழக்கம் அதிகரிக்கும் நாள், எடுத்த காரியங்களில் முழுமூச்சுடன் செயற்படுவீர்கள், உஷ்ண சம்பந்தமான ரோக பயமுண்டு.

**சிம்மம்:** சென்ற இடத்தில் செல்வாக்கு மேலோங்கும் நாள், பொருளாதார நிலையில் முன்னேற்றம் காண்பீர்கள், செய் தொழிலில் சிறப்புகள் வந்து சேரலாம், போசன சுகமுண்டு.

**தனுசு:** வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், முன்னேற்றம் பெற பெரிதும் பாடுபடுவீர்கள், உறவினர்கள் வழியில் ஒத்துழைப்புக்கள் கிடைக்கலாம், போசன சுகமுண்டு.

**விருச்சிகம்:** குடும்பத்தினருடன் மகிழ்ச்சி தரும் பயணங்கள் இடம் பெறலாம், நண்பர்கள் நம்பிக்கைக்குரியவர்களாக நடந்து கொள்வர், எடுத்த காரியங்களில் அதிக பிரயாசை காட்டுவீர்கள்.

**துலாம்:** வியாபாரத்தை விரிவுபடுத்தும் எண்ணம் உருவாகும், புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், பிள்ளைகளின் முன்னேற்றத்தில் அதிக அக்கறை காட்டுவீர்கள்.

**கன்னி:** கௌரவமான சம்பவங்கள் இடம்பெறலாம், தொழிலில் ஆர்வத்துடன் ஈடுபடுவீர்கள், காரிய அனுகூலமுண்டு, உங்களுக்கு போட்டியாக செயற்பட்டவர்கள் மனம் மாறுவர்.

# ‘பாவிகளை மன்னிப்பீராக!’




உள்ளம் வருந்த இக்கட்டுரையை எழுதத் தொடங்குகிறேன்.நாட்டினால் நான் ஒரு இலங்கையன்.இனத்தினால் நான் ஒரு ஈழத்தமிழன். ஊரினால் நான் ஒரு யாழ்ப்பாணத்தான். சமயத்தினால் நான் ஒரு இந்து.இவைதான் உலகில் என்னை அடையாளப்படுத்தும் விடயங்கள். மேற்சொன்ன வரிசையிலேயே என் அடையாளங்களை, நான் முக்கியப்படுத்துகிறேன். ஓர் இலங்கையனாக நான் எனது தேசத்தை நேசிக்கிறேன். ஒரு ஈழத்தமிழனாக நான் எனது மொழியை நேசிக்கிறேன். ஒரு யாழ்ப்பாணத்தவனாக நான் எனது ஊரை நேசிக்கிறேன். ஒரு இந்துவாக நான் எனது சமயத்தை நேசிக்கிறேன்.

இந்த அடையாளங்கள் எனக்கு மட்டும் உரியவை அல்ல நம் இலங்கை மண்ணில் வாழும் அனைவர்க்கும், இவை போன்ற அடையாளக்குறியீடுகள் உள்ளன. இந்த அழகான சிறு தீவுக்குள்,மேற்சொன்ன வேறுபட்ட அடையாளங்களால் பிரிவுபட்டும்,இவ் அடையாளங்களால் பேதமுறாமல் இலங்கையர் என ஒன்றுபட்டும் நாம் வாழும் வரை தான், நம் இலங்கைத்தேசம் இந்து சமுத்திரத்தின் முத்தாகத் திகழும் என்று அதில் மாறுபாடு உண்டாகிறதோ, அன்றே இத்தேசம் இந்து சமுத்திரத்தின் கண்ணீர்த்துளியாய் மாறிவிடும்.

மேற்சொன்ன ஒவ்வொரு அடையாளமும் என்னைப் பெருமைப்படுத்துவதாகவே நான் கருதுகிறேன்.அவ் அடையாளங்களுள் தலையாயதான, “இலங்கையன்” என்ற எனது முதல் அடையாளம், இந்நாட்டினுள் ஊராலும் மொழியாலும் மதத்தாலும் வேறுபட்டிருக்கும், பல்லாயிரக்கணக்கானவர்களை எனது சகோதரர்களாக்குகிறது. அதனாற்றான், “இலங்கையன்” என்ற அந்த எனது முதல் அடையாளத்தை, முக்கியமானதாக நான் கருதுகிறேன்.

கிழக்கு, மேற்கு, வடக்கு, தெற்கு என்ற திசைகளால்,நம் தேசத்தினுள் பிரிவுபட்டுக் கிடக்கும் பற்பல ஊர்களுள்,தமிழ், சிங்களம், ஆங்கிலம் போன்ற மொழிகளைப் பேசியும், பௌத்தம், இந்து, இஸ்லாம், கிறிஸ்தவம் எனும் மதங்களைப் பின்பற்றியும், பிரிவுபட்டு இருந்தாலும், “இலங்கையர்” என்ற அந்த ஒரு வார்த்தை, இத்தேசத்தவர் அனைவரையும் ஒருகுடைக் கீழ் கொணர்ந்துவிடுகிறது.

தலைவர்கள் என்று தம்மைத்தாம் சொல்லிக்கொண்டோர், இந்த அற்புதமான ஒருமைப்பாட்டை தமது அரசியல் இலாபம் கருதி,என்றைக்கு உடைக்கத் தலைப்பட்டனரோ, அன்றைக்கே, இத்தேசத்தின் உன்னதங்கள் எல்லாம் வீழத் தொடங்கின. இனங்களுக்கிடையில் பகை மூட்டி, பிரிவுகள் உண்டாக்கி, அப்பொய்மைத் தலைவர்கள் செலுத்திய புதுவிஷம், இத் தேசவிருட்சத்தின் வேர்வரை சென்று, இன்று அவ் அழகிய விருட்சத்தை வீழ்த்த முனைந்து நிற்கிறது.

உண்மைத் தேசப்பற்றுள்ளோர் அவ் விஷத்தை முறிக்க,படாதபாடுபட்டுவரும் இன்றைய நிலையில்,கொடுமையிலும் கொடுமையாக, அவ் அரசியல் தலைவர்களுக்குப் போட்டியாக முளைத்து, மதத்தலைவர்கள் சிலர் இன்று மதப்பிரிவுகளாலும் பேதங்களை உருவாக்கி, அதன் மூலம் இத்தேசத்துள் இன்னொரு விஷத்தையும் புகுத்த முயன்று வருவது. இம்மண்மீது பற்றுக்கொண்ட அனைவரையும் மருளச்செய்கிறது.

என் மத அடையாளம் இந்து என்று முன்னர் உரைத்தேன்.சரியாகச் சொல்லப்போனால் இந்து சமயத்தின் ஒரு கூறான, சைவசமயமே எனது உண்மைச் சமய அடையாளம்.நான் ஓர் இந்துவாகவோ அல்லது சைவனாகவோ என் சமயத்தின்மீது,எல்லையற்ற பற்றுதலையும், காதலையும் கொண்டிருக்கிறேன். என்சமயத்தின் மீது நான் கொண்டிருக்கும் பற்றுதல் என்பது, நிச்சயம் மற்றொரு சமயத்தின்மீதான பகையன்றாம்!இந்த விடயத்தில் என் அறிவு பூரண தெளிவு பெற்றிருக்கிறது.

இத்தெளிவையும் என் சமயமே எனக்கு ஊட்டிற்று.என் சமயத்தைச் சார்ந்த ஞானியருள் ஒருவரான திருமூலர் உரைத்த. “அன்பே சிவம்” என்ற மகுடவாசகமே என் சமயத்தின் அடிப்படைக் கொள்கையாம். அன்பையே கடவுளாக வழிபடும் என் சமயத்தவர்க்கு, மற்ற எந்தச்சமயத்தின்மீதும் பகையில்லை என்பது உறுதி. எனது சமயமான சைவம் சிறந்தது என்று நான் சொல்வதன் அர்த்தம், மற்றொரு சமயம் தாழ்ந்தது எனும் பொருளை உட்கொண்டதன்று. என்தாய் அழகி என்று நான் உரைப்பது,மற்றவரின் தாய் அழகில்லாதவள் எனும் ஒப்பீட்டில் விளைந்தன்றாம். அதனாற்றான் என் இந்து மதத்தைச் சார்ந்தவர்கள், எல்லா மதத்தவரையும் அணைத்து நின்றனர்.

சைவசமயத்தின் அனுபூதிமான்களின் வரலாற்றைத் தொகுத்துரைத்த,“பெரியபுராணம்” எனும், எங்கள் சமயத்தின் தலைமை இலக்கிய நூலில் உரைக்கப்பட்ட, அறுபத்துமூன்று அடியாருள், மாற்றுச் சமயத்தவரான சாக்கிய நாயனாருக்கும், இடம் கொடுத்து மகிழ்ந்தது என் சமயம். என் சமய முன்னோடிகளைத் தொழுது திருத்தொண்டர் தொகை பாடிய, எங்களின் தலைமைக் குருமார் நால்வருள் ஒருவரான சுந்தரர், அப்பாலும் அடிசார்ந்த அடியாருக்கும் அடியேன் என்று பாடி, மாற்று சமயத்தவரையும் மதிக்க எமக்குக் கற்றுத் தந்திருக்கிறார்.அதனாற்றான்,மதபேதம் காட்டி மனிதர்களுக்குள் பகையூட்டும் பழக்கம்,எங்கள் இந்துமதத்தில் என்றும் இருந்ததுவுமில்லை. எவரிடமும் அது இருந்தால், அதனை நாம் ஏற்பதுவும் இல்லை.

நான் வணங்கும் எனது கோயிலும்,நெற்றியில் பூசும் விபூதியும் கழுத்தில் அணியும் உருத்திராக்கமும், எனக்கு எவ்வளவு புனிதமானதோ, அதே அளவு புனிதமானதாய்த்தான், பௌத்தர்களின் விகாரையினையும், அவர்கள் போற்றும் தர்மசக்கரத்தினையும், கிறிஸ்தவர்களின் தேவாலயத்தையும், அவர்கள் போற்றும் சிலுவையையும்,இஸ்லாமியர்களின் பள்ளிவாசலையும், அவர்கள் போற்றும் பிறை வடிவையும், நான் கருதுகிறேன். நான் மட்டும் என்றில்லை பெரும்பான்மை இந்துக்களின் மனநிலையும் இதுவேயாம்.

நான் சொல்வது மிகை என்று நீங்கள் கருதினால்,கிறிஸ்தவ தேவாலயங்கள் பலவற்றில் போய்பாருங்கள், நெற்றியில் விபூதியோடும் குங்குமத்தோடும் கூடிய,இந்துப் பண்பாட்டு அடையாளங்களுடனேயே,எம்மவர் பலர் அவ்வாலயங்களில் வழிபடுதலை நீங்கள் காணலாம். அதுமட்டுமல்ல,கிறிஸ்தவர்களின் “கிறிஸ்மஸ்” பண்டிகையை நம் இந்துக்கள் பலர்,தமது இல்லங்களில் இயேசு பிரான் பிறந்தது போன்ற அலங்காரக் குடில் அமைத்து,அம்மதத்தார் போலவே கொண்டாடுவதையும் நீங்கள் வெளிப்படையாய்க் காணமுடியும்.

இந்த விடயத்தில் பௌத்தர்கள் இந்து மக்களோடு மிக நெருக்கமானவர்கள். இலங்கையில் பெரும்பான்மையாய் அமைந்துவிட்ட தமது சனத்தொகையை வைத்து, இந்நாட்டில் தமது பௌத்த மதத்திற்கே முதலிடம் என்று பிடிவாதம் பிடித்து நின்றாலும்,அவர்கள், தம்மையறியாமல் இந்துமதத்தோடு நெருங்கி நிற்பது யதார்த்த உண்மை. இந்து ஆலயங்கள் பலவற்றிலும், இன்று அவர்கள், நம்மவரைவிட அதிக பக்தியோடு வழிபட்டு வருகின்றனர்.எப்படி எமது இந்து மக்கள் கிறிஸ்தவ ஆலயத்திற்கும் செல்கிறார்களோ, அதுபோலவே பௌத்தர்கள் இந்து ஆலயத்திற்குச் செல்வதில் தயக்கம் காட்டுவதில்லை. அவர்களது விகாரைகள் பலவற்றிலும் கூடத் திருமால், முருகன், காளி, விநாயகர் என, பல இந்துத் தெய்வ சொரூபங்கள் ஸ்தாபிக்கப்பட்டே இருக்கின்றன. கதிர்காமத்தை அவர்கள் தம்வயப்படுத்தியிருந்தாலும், முருகனைத் தமது தெய்வமாய் உருகிப்போற்றுவதை,நாம் கண்கூடாகக் காணமுடிகிறது.

இந்த விடயத்தில் இஸ்லாமியர்களின் கட்டுப்பாடு உறுதியானது. அவர்கள் தமது சமய மார்க்கத்தை உறுதியாகப் பற்றி நிற்பதோடு, தமது வழிபாட்டினை பெரும்பாலும் முடித்துக் கொள்கின்றனர். அவர்கள் மாற்றுச் சமய ஆலயங்களுக்குப் போவதுமில்லை. அதுபோலவே மாற்றுச் சமயத்தவரும் அவர்களின் பள்ளிவாசலுக்கு அதிகம் செல்வதுமில்லை. நம்நாட்டைப் பொறுத்தவரை இஸ்லாமிய மத அமைப்புக்கள், மதமாற்றப் பிரசாரங்கள் செய்து மற்றைச் சமயத்தவரை, தமது மதத்தின்பக்கம் ஈர்ப்பதான செய்திகளை, நான் அதிகம் அறிந்ததில்லை. வேற்று மதத்தவர் பலர் தேவைகள் நோக்கி இஸ்லாமிய மதத்திற்கு மாறி வருவதை, பத்திரிகைகளில் வரும் பெயர் மாற்ற விளம்பரங்கள் உரைத்து வருவது உண்மையேயானாலும்,அம்மாற்றம் எவரது அழுத்தமுமின்றி அவரவர் விருப்பப்படி நடப்பதாகவே பெரும்பாலும் கருதப்படுகிறது.இதுதான் இலங்கைச் சமயங்களின் இன்றைய ஒருமைப்பாட்டு நிலை.


சம்பந்தா சம்பந்தமில்லாமல், இலங்கையின் மதநிலை பற்றியதான, இவ்வளவு நீண்ட ஓர் முன்னுரையினை, இங்கு நான் எழுதுவதன் காரணம் என்ன என்று, உங்களில் பலர் குழப்பமுறுவீர்கள். காரணத்தோடுதான் இந் நீண்ட முன்னுரையை எழுதினேன். இனி அக்காரணத்தை விபரிக்கத் தலைப்படுகிறேன்.

இந்துக்கள், பௌத்தர்கள், இஸ்லாமியர்கள் என்ற, இம்மதத்தவர்களிலிருந்து வேறுபட்டு, நம்நாட்டுக் கிறிஸ்தவர்கள் மட்டும், மதமாற்றப் பிரசாரத்தைப் பெரியளவில் முன்னெடுத்து, மற்றைய மதத்தவரை வெளிப்படையாய் விழுங்க முற்படுவதோடு, இத்தேசத்திற்கு ஆபத்தான மதவெறி என்ற விஷத்தை ஊட்டி, இனபேதம் போல மதபேதம் ஒன்றையும் உருவாக்கி, இந்நாட்டு மக்களைப் பிரிக்க முயல்வது, மிகுந்த மனவருத்தத்தினைத் தருகிறது. அதுபற்றியே இக்கட்டுரையில் விபரிக்கப்போகிறேன். (தொடரும்...)

கம்பவாரிதி இ.ஜெயராஜ்

# யாழ்.மாநகர சபைக்குட்பட்ட பகுதிகளில் நடைபாதை வியாபாரத்தை தடைசெய்யத்திட்டம்

## ❖சுமந்திரன் எம்.பி.தெரிவிப்பு
## ❖ஊடகவியலாளர்களுக்கு எச்சரிக்கை



(யாழ்ப்பாணம்)

எதிர்வரும் காலங்களில் யாழ்ப்பாண மாநகர சபைக்குட்பட்ட பகுதிகளில் பண்டிகைக் காலத்தின் போது நடைபாதை வியாபாரத்தை தடை செய்வதற்கான வேலைத்திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் வணிகர் கழக பிரதிநிதிகளுக்கும் தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராசா, எம்.ஏ.சுமந்திரன் மற்றும் மாநகரசபை முதல்வர் இ.ஆனல்ட் ஆகியோருக்கும் இடையிலான சந்திப்பொன்று நேற்று யாழ்.வணிகர் கழக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது. இச்சந்திப்பின் போது யாழ்.நகர வர்த்தகர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பில் தெரிவிக்கப்பட்டது.

முக்கியமாக இரண்டு விடயங்கள் குறித்து விரிவாக ஆராயப்பட்டன. நீண்டகாலமாக யாழ்ப்பாண மாநகர சபைக்குச் சொந்தமான நவீன சந்தை அங்காடியிலுள்ள கடை உரிமையாளர்களின் பெயர் மாற்றம் தொடர்பாக அனைவராலும் பேசப்பட்டு வரும் நிலையிலும் இன்றுவரை அதற்கு ஒரு முடிவு எடுக்கப்படவில்லை என்ற விடயம் சுட்டிக் காட்டப்பட்டது. இதற்குப் பதிலளித்த மாநகர முதல்வர் என்னால் குறித்த திட்டமானது முன்னெடுக்கப்பட்டது. எனினும் அது ஆளுநரின் கையொப்பத்திற்காக கிடப்பில் போடப்பட்டுள்ளது. எனவே புதிய ஆளுநர் வருகை தந்தவுடன் அதற்குரிய வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்படும் எனத் தெரிவித்தார்.

இதேவேளை பண்டிகைக் காலங்களில் நடைபாதை வியாபாரத்தை நிறுத்துமாறும் இதனால் தமக்கு பல நட்டங்கள் ஏற்படுவதாகவும் வர்த்தகர்களால் தெரிவிக்கப்பட்டது.

இந்த விடயம் தொடர்பான பிரேரணை ஒன்றை மாநகர சபையில் முதல்வர்தான் கொண்டு வரவுள்ளதாகவும் அந்தப் பிரேரணை நிறைவேற்றப்பட்ட பின்னர் எதிர்வரும் பண்டிகைக் காலங்களில் நடைபாதை வியாபாரத்திற்குத் தடை ஏற்படுத்தவுள்ளதாகவும் தெரிவித்தார்.

குறித்த சந்திப்பு தொடர்பில் செய்தி சேகரிக்கச் சென்ற ஊடகவியலாளர்களைச் செய்தி சேகரிக்க வேண்டாம் எனப் பாராளுமன்ற உறுப்பினர்கள் கடுமையாக எச்சரித்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-101)

# வரிச்சலுகை தேர்தலை மையப்படுத்தியதா?

## அரசாங்கத்திடம் ஆசுமாரசிங்க கேள்வி

(கொழும்பு)

அரசாங்கத்தின் வரிச்சலுகையானது எதிர்வரும் பொதுத் தேர்தல் வரை மாத்திரம் நடைமுறைப்படுத்துவதற்கு திட்டமிட்டிருக்கிறதா? என்பதைப் பகிரங்கப்படுத்த வேண்டும் என பாராளுமன்ற உறுப்பினர் ஆசுமாரசிங்க தெரிவித்தார்.



புதிய அரசாங்கத்தால் பெறுமதிசேர் வரி குறைக்கப்பட்டு வழங்கப்பட்ட சலுகை உண்மையில் வரவேற்பிற்குரியதாகும். அதனூடாக மக்கள் பயனடைவார்கள் என்று கருதுகின்றோம். ஆனால் இவ்வரிச்சலுகையால் ஏற்படத்தக்க ஏனைய சவால்களை அரசாங்கம் எவ்வாறு எதிர்கொள்வதற்குத் திட்டமிட்டிருக்கின்றது என்பதையும் தெளிவுபடுத்த வேண்டும்.

வெளிநாடுகளிடமிருந்து பெற்ற கடன்களில் பெருமளவான தொகையை அடுத்த வருடமே மீளச்செலுத்த வேண்டியுள்ளது. வரிக்குறைப்பையும் செய்த பின்னர் மீளச்செலுத்த வேண்டிய கடன் தொகையைத் திரட்டுவதற்கு அரசாங்கம் எத்தகைய திட்டங்களைக் கொண்டிருக்கிறது? மீண்டும் வெளிநாடுகளிடம் நிதியுதவிகளைப் பெறவுள்ளதா? அல்லது நாட்டின் தேசிய சொத்துக்களை விற்பனை செய்வதற்குத் திட்டமிட்டுள்ளதா? இல்லாவிட்டால் மிலேனியம் சவால்கள் ஒப்பந்தத்தில் கைச்சாத்திடப் போகின்றதா? இவை குறித்துத் தெளிவுபடுத்துவது அவசியமாகும் என்றும் அவர் தெரிவித்தார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையகமான சிறிகொத்தாவில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (இ-7)



மாவீரர் நாள் நினைவேந்தலை முன்னிட்டும் மாகாண மரநடுகை மாதத்தை முன்னிட்டும் விசேட மர நடுகை நிகழ்வு கடந்த 27 ஆம் திகதி இயக்கச்சி இயற்கை பண்ணை கிராமத்தில் (Reecha - Organic Farm) நடைபெற்றது. இந் நிகழ்வில் யாழ்.மாநகர முதல்வர் இ.ஆனல்ட் கலந்து கொண்டார்.

# பூஜித, ஹேமசிறிக்கு விளக்கமறியல் நீடிப்பு



(கொழும்பு)

முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் ஹேமசிறி பெர்னாண்டோ மற்றும் கட்டாயவிடுமுறையில் அனுப்பப்பட்ட பொலிஸ்மா அதிபர் பூஜித ஜெயசுந்தர ஆகியோரை எதிர்வரும் 17 ஆம் திகதி வரை தொடர்ந்து விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு மேலதிக நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டது.

இந்த வழக்கு நேற்றுச் செவ்வாய்க்கிழமை கொழும்பு மேலதிக நீதவான் பிரியந்த லியனகே முன்னிலையில் எடுக்கப்பட்ட போதே இவ்வாறு உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. (இ-7)

# மாவீரர் தினத்தில் மதிப்புறு நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

JCC OBA 96 ஏற்பாட்டில் யாழ். எய்ட் ஊடாக தேசத்திற்காக தம்மை அர்ப்பணித்த மாவீரர்களின் நினைவு தினமான கடந்த 27 ஆம் திகதி பிரத்தியேகமாக ஒழுங்குபடுத்தப்பட்ட இடங்களில் குடும்பத்தில் இரண்டும் இரண்டிற்கு மேற்பட்டும் பிள்ளைகள் மாவீரராகி தங்களைப் பார்க்க வேண்டிய பிள்ளைகள் இல்லாது பலராலும் புறக்கணிக்கப்பட்டு பெற்றோர்கள் ஏக்கத்திலும் வறுமையிலும் வாழும் குடும்பங்களில் பத்து குடும்பங்களைத் தேர்ந்தெடுத்து அவர்களுக்கு ஒவ்வொரு குடும்பத்திற்கும் தலா 25 ஆயிரம் ரூபாய் பணம் மற்றும் பெறுமதியான சேலை, வேட்டி, சாரம், தென்னம்பிள்ளை, கற்றல் உபகரணங்கள் போன்றவற்றை வழங்கி மாவீரர் தினத்தை உணர்வு பூர்வமாக அனுஷ்டித்தனர். (இ-7)








அல்லாரை அரசினர் தமிழ் வித்தியாலயத்தின் ஓய்வு பெற்றுச் செல்லும் ஆசிரியருக்கான மணிவிழா நிகழ்வும் புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தி பெற்ற மாணவனைக் கௌரவிக்கும் நிகழ்வும் பாடசாலையின் நுழைவாயில் திறப்பு விழாவும் பெயர்ப்பலகை திரைநீக்க நிகழ்வும் அண்மையில் இடம்பெற்றது. இந் நிகழ்வுகளில் விருந்தினர்களாக ஓய்வு பெற்றுச் செல்லும் திருமதி மங்கையற்கரசி இராசேந்திரன், தென்மராட்சி வலய விஞ்ஞான பாட உதவிக்கல்விப் பணிப்பாளர் அ.நிருபராணி, தென்மராட்சி வலயக்கல்வி அலுவலக ஆசிரிய ஆலோசகர் ந.திருவாசகன், சேவைக்கால தமிழ்ப்பாட ஆசிரிய ஆலோசகர் வே.உதயகுமார் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# டெங்கு ஒழிப்பு நடவடிக்கை




(கொடிகாமம்)

கொடிகாமம் ஜே/328 கிராம உத்தியோகத்தர் பிரிவில் டெங்குக் கட்டுப்பாட்டு நட்வடிக்கைகள் கடந்த 30 ஆம் திகதி இடம்பெற்றன.

இதன்போது கொடிகாமம் பொலிஸாரால் சாவகச்சேரி நீதிமன்றத்தில் 6 வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டன.

இந்தப் பகுதியிலுள்ள 66 வீடுகள் பார்வையிடப்பட்டன. அதில் 22 வீடுகள் நுளம்பு பெருகக்கூடிய சூழலை கொண்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. (இ-114)



# இரசாயனப் பகுப்பாய்வு அறிக்கைகளை தாமதிக்காமல் நீதிமன்றங்களுக்கு வழங்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்:-நிமால்



(கொழும்பு)

இரசாயனப் பகுப்பாய்வுத் திணைக்களத்தின் அறிக்கைகள் தாமதிக்கப்படுவதனால் நீதிமன்ற தீர்ப்புகள் தாமதிக்கப்படுகின்றன. அதனால் இரசாயனப் பகுப்பாய்வு அறிக்கைகளைத் தாமதிக்காமல் நீதிமன்றங்களுக்கு வழங்குவதற்கு முறையான நடவடிக்கையொன்றை மேற்கொள்ள வேண்டும் என நீதி, மனித உரிமைகள், சட்ட மறுசீரமைப்பு அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா தெரிவித்தார்.

அரச இரசாயனப் பகுப்பாய்வுத் திணைக்களத்துக்கு நேற்று முன்தினம் விஜயம் மேற்கொண்டு அங்கு இடம்பெறும் நடவடிக்கைகள் தொடர்பாக கண்காணித்த பின்னர், திணைக்கள அதிகாரிகளுடன் கலந்துரையாடும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

இரசாயனப் பகுப்பாய்வுத் திணைக்களத்தில் நவீன உபகரணங்கள் இருக்கின்றபோதும் நீதிமன்றத்தால் இரசாயனப் பகுப்பாய்வு அறிக்கைகள் கேட்டிருக்கும் அளவு கடந்த இரண்டு வருடங்களில் அதிகரித்திருக்கின்றன.

குறிப்பாக போதைப்பொருள் பிரிவில் நூற்றுக்கு 150அளவில் அறிக்கைகள் கோரி இருப்பதில் அதிகரிப்பு ஏற்பட்டிருக்கின்றது.

இந்தத் தாமதத்தை தடுப்பதற்காக இந்தத் திணைக்களத்தில் தற்போது இருக்கும்31பேர்கொண்ட ஆளணிக்கு மேலதிகமாக ஆட்களை உடனடியாக இணைத்துக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என செயலாளருக்கு ஆலோசனை வழங்கினார்.

எனவே இந்த வருடத்துக்கான இரசாயனப் பகுப்பாய்வுத் திணைக்களத்தின் அறிக்கையொன்றை டிசெம்பர் மாதம் முடிவடைவதற்குள் செயலாளருக்கு சமர்ப்பிக்கவும். அதன் பின்னர் ஒவ்வொரு மாதமும் இரசாயனப் பகுப்பாய்வு அறிக்கை சமர்ப்பிப்பதன் முன்னேற்றம் தொடர்பாக செயலாளர் கண்காணிக்க வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)





புங்குடுதீவு நலன்புரிச்சங்கம் நடத்திய மூத்தோர் கௌரவிப்பு விழாவும் மூத்தோர் ஓய்வூதியத் திட்ட அங்குரார்ப்பண நிகழ்வும் அண்மையில் இடம்பெற்றது. சமூகசேவை அமைப்பொன்று முதற்கட்டமாக 34 முதியோர்களுக்கு மாதாந்தம் 2000ரூபாய் வழங்க முன்வந்துள்ளது.

# வாசிப்பு மாத பரிசளிப்பு விழா

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் தெற்கு பிரதேச சபை பொது நூலகம் நடத்தும் தேசிய வாசிப்பு மாத பரிசளிப்பு விழா நாளை 05 ஆம் திகதி வியாழக்கிழமை பிற்பகல் 2.30 மணியளவில் வலிகாமம் தெற்கு பிரதேச சபை தலைமை அலுவலக மண்டபத்தில் நடைபெறும்.

வலி.தெற்கு பிரதேச சபை உப அலுவலக பொறுப்பதிகாரி க.உமாகரன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வலிகாமம் வலய தமிழ்த்துறை உதவிக் கல்விப் பணிப்பாளர் க.சந்திரலிங்கம், சிறப்பு விருந்தினர்களாக வலி.தெற்கு பிரதேச சபை தவிசாளர் க.தர்ஷன், உடுவில் பிரதேச செயலக கலாசார உத்தியோகத்தர் திருமதி ந.ரஜனி, வலி.தெற்கு பிரதேச சபை செயலாளர் திருமதி.உ.சாரதா, வலி.தெற்கு பிரதேச சபை சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி.த.மலர்மகள் ஆகியோர் கலந்து கொள்வர். (இ-2)



மிருசுவில் றோ.க.த.க. பாடசாலையின் தரம்-5 புலமைப்பரிசில் பரீட்சையில் 100 புள்ளிகளுக்கு மேல் பெற்று சித்தியடைந்த, சித்திபெற்ற மாணவர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு கடந்த 29 ஆம் திகதி அதிபர் க.சத்தியானந்தன் தலைமையில் பாடசாலை மண்டபத்தில் இடம்பெற்றது. இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக தென்மராட்சி வலய ஆரம்பக்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் சோ.திருக்குமரன், சிறப்பு விருந்தினராக அருட்பணி சி.அஜந்தன், அயற்பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

## மாற்றுத்திறனாளிகள் தினவிழா

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தில் சர்வதேச மாற்றுத்திறனாளிகள் தினத்தை முன்னிட்டு மாவட்ட மட்டத்திலான விளையாட்டுப் போட்டிகள், மாவட்ட மாற்றுத்திற னாளிகள் தினவிழா ஆகியவை எதிர்வரும் 6 ஆம் திகதியன்று நடைபெறவுள்ளது.

விளையாட்டுப் போட்டிகள் மாவட்ட கூட்டுறவாளர் மண்ட பத்திற்கு அருகாமையிலும், மாவ ட்ட விழா மாவட்ட சமூக சேவை கள் அலுவலக மண்டபத்திலும் நடைபெறவுள்ளது.


மாவட்ட சமூக சேவைகள் அலுவலர் வே.தபேந்திரன் தலை மையில் நடைபெறவுள்ள நிகழ் வில் முதன்மை விருந்தினராக ஓய்வுநிலை அதிபரும் சமூக சேவை யாளருமாகிய க.இராசேந்திரம் கலந்து கொள்ளவுள்ளார்.

மாற்றுத்திறனாளிகளுக்கான மாவட்ட மட்ட விளையாட்டுப் போட்டிகளில் முச்சக்கரவண்டி ஓட்டம், பலூன் ஊதி உடைத்தல், வேகநடை, 100 மீற்றர் ஓட்டம், நீர் நிரப்புதல் ஆகியவை ஆண், பெண் போட்டியாளர்களுக்கு நடைபெறவுள் ளது. மாற்றுத்திறன் தன்மைக்கேற்ப போட்டிகளின் வகைப்படுத்தல்கள் நடைபெற வுள்ளன. (9)

## வடக்கில் தொடரும் கனமழை

# மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிப்பு





(முறிகண்டி)

வடக்கில் கடந்த 5 நாட்கள் தொடர்ச் சியாக பெய்துவரும் பலத்த மழை கார ணமாக கிளிநொச்சி, மன்னார், முல்லைத் தீவு மற்றும் வவுனியா மாவட்டங்களில் மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப் பட்டுள்ளது. தொடர் மழை காரணமாக விவசாய நிலங்கள் மற்றும் வீதிகள், தாழ் நிலப் பகுதிகளில் வெள்ளம் தேங்கி நிற்பதால் பொதுமக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது.

அந்த வகையில் கிளிநொச்சி கண் டாவளை பிரதேசத்தில் நேற்றுக் காலை வரை 65 குடும்பங்களைச் சேர்ந்த 181 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக மாவட்ட இடர் முகாமைத்துவ நிலைய புள்ளி விபரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. கிளிநொச்சி பரந்தன், தர்மபுரம், கட்டைக்காடு, பிரமந் தனாறு ஆகிய பிரதேசங்களில் மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். இவர்களில் 2 குடும்பங்களை சேர்ந்த 8 பேர் கட்டைக் காடு அ.த.க. பாடசாலையில் தங்க வைக் கப்பட்டுள்ளதுடன் பாதிக்கப்பட்டவர்களில் ஏனையோர் உறவினர்கள் வீடுகளில் தங்கியுள்ளனர்.

மன்னார் மாவட்டம் முசலி பிரதே சத்தில் 47 குடும்பங்களைச் சேர்ந்த 165 பேரும், மடு பிரதேசத்தில் 56 குடும் பங்களைச் சேர்ந்த 163 பேரும், நானாட் டான் பிரதேசத்தில் 144 குடும்பங்களைச்



சேர்ந்த 451 பேரும் பாதிக்கப்பட்டுள்ளனர். மேலும் இப்பகுதிகளில் குளங்கள் சில உடைப்பெடுத்துள்ளதால் விவசாய நடவடிக்கை பாதிக்கப்பட்டுள்ளதுடன், வெள்ளப்பெருக்கால் கால்நடைகளும் பாதிக்கப் பட்டுள்ளன எனவும் இதனால் தமது வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ளதாக மக்கள் தெரிவிக்கின்றனர்.

(9-100-250-286-299-318)

# குறுநாடக பயிற்சிப்பட்டறை





(முரசுமோட்டை)

வடமாகாண இளைஞர் சேவை கள் மன்றத்தின் ஒழுங்கமைப் பில், வடக்கு இளைஞர் விவகார அமைச்சின் அனுசரணையுடன் வடமாகாண இளைஞர்,யுவதி களுக்கான குறு நாடக பயிற்சி பட்டறை கிளிநொச்சியில் இடம் பெற்றன.

கிளிநொச்சி கனகபுரத்தில் அமைந்துள்ள சோலைவனத்தில் கடந்த வாரம் இருநாட்களாக இடம்பெற்ற இந்தப் பயிற்சிப்பட் டறையில் நாடகம் சார்ந்த விரி வுரைகள் நிகழ்த்தப்பட்டதுடன் கலந்து கொண்டவர்களுக்கு சான்றிதழ்களும் வழங்கப்பட் டன. (9-318)





# போக்குவரத்துக்கு இடையூறு ஏற்படுத்திய 90 கட்டாக்காலி மாடுகள் மடக்கிப்பிடிப்பு

(குருமன்காடு)

வவுனியா நகரசபைக்குட்பட்ட பகுதிகளில் வீதிகளில் கட்டாக்காலி மாடுகளினால் நகரின் அழகு சீர்குலைந்ததுடன், விபத்துக்களும் ஏற்படுவதாக தெரிவிக்கப்பட்டு வந்த நிலையில் வவுனியா நகர சபையினால் நகரசபை 90 இற்கு மேற்பட்ட கட்டாக்காலி மாடுகள் பிடிக்கப்பட்டன.

வவுனியா நகரசபையினரால் வவுனியா நகர், பட்டானிச்சூர், வேப்பங்குளம் ஆகிய பகுதிகளில் நேற்று முன்தினம் இரவு 11.00 மணி முதல் நேற்று அதிகாலை 4.00 மணி வரை 90 கட்டாக் காலி மாடுகள் பிடிக்கப்பட்டுள் ளன.

இவ்வாறு பிடிக்கப்பட்ட கட் டாக்காலி மாடுகள் வவுனியா நகரசபை வளாகத்திலும் வேப் பங்குளம் பகுதியில் அமைந்



துள்ள நகரசபையின் கழிவகற்றல் நிலையத்திலும் அடைத்து வைக் கப்பட்டுள்ளன.

மாட்டின் உரிமையாளர்கள் பிடிகூலி 600 ரூபா, தண்டம் 1000 ரூபா, ஒரு நாள் பராமரிப்பு செலவு 300 ரூபா ஆகியவற் றினை செலுத்தி பெற்றுக்கொள்ள முடியுமெனவும் பராமரிப்பு செலவு நாளாந்தம் 300 ரூபா விதிக்கப்ப டுமென நகரசபையினர் தெரிவித் துள்ளனர்.


அண்மைக் காலமாக வவுனியா வில் இக் கட்டாக்காலி மாடுகளால் போக்குவரத்துக்கு பெரும் இடையூ றுகள் ஏற்பட்டதுடன், பல வீதி விபத்துக்களும் ஏற்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (9-250)

# தொடர் மழையால் மன்னாரில் நீரில் மூழ்கிய வயல் நிலங்கள்

(மன்னார்)

தொடர் மழை காரணமாக பெரிய, சிறிய, நடுத்தர குளங்கள் நிறைந்து வான் பாய்வதனால் குள நீர் அனைத்தும் விவசாய நிலங்கள் மற்றும் தோட்டக் காணி களுக்குள் நிறைந்துள்ளது. இத னால் பல இலட்சம் பெறுமதியான வயல் நிலங்கள் அழிவடைந் துள்ளதாக பாதிக்கப்பட்ட விவசா யிகள் தெரிவித்துள்ளனர்.

குறிப்பாக மாந்தை, நானாட் டான், மடு, முசலி பிரதேச செயலக பிரிவுக்கு உட்பட்ட பகுதிகளில் உள்ள பல ஏக்கர் விவசாய நிலங் கள் முற்றாக நீரில் மூழ்கிப் போயு ள்ளன. தொடர்ச்சியாக நீர் வடிந் தோட முடியாத நிலையில் வயல் நிலங்களுக்குள்ளே தேங்கிக் காணப்படுவதால் அனைத்து முளை



நிலையில் உள்ள பயிர்களும் அழிவடைந்துள்ளதாக விவசா யிகள் கவலை தெரிவித்துள்ள னர்.

சொந்தத் தேவைக்குக் கூட நெல் பெற்றுக் கொள்ள முடியாத நிலை உள்ளதாகவும் பல இலட்சம் செலவு செய்த நிலையில் தாங்கள் தற்போது அனைத்தையும் இழந்த நிலையில் இருப்பதாகவும் சம் பந்தப்பட்ட அதிகாரிகள் முன் வந்து பாதிக்கப்பட்ட விவசாயிக ளுக்கான நிவாரண உதவிகளை யாவது வழங்குமாறு பாதிக்கப் பட்ட விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

அதே நேரத்தில் நானாட்டான் பிரதேச சபைக்குட்பட்ட கட்டைக் காடு பகுதியை சேர்ந்த ஐந்து குடும் பங்கள் இடம் பெயர்ந்து தற்காலிக முகாம்களில் தங்கவைக்கப்பட்டுள் ளமை குறிப்பிடத்தக்கது. (9-285)



இளவாலை வருத்தப்படாத வாலிபர் சங்கத்தின் உயர்த்தும் கரங்கள் செயற்றிட்டத்தின்கீழ் முல்லைத்தீவு முத்தையன்கட்டு பகுதியை சேர்ந்த போரில் கணவனை இழந்த 4 பிள்ளைகளை கொண்ட பெண் தலைமைத்துவக் குடும்பத்திற்கு வாழ்வாதார உதவியாக நாளொன்றுக்கு 7 லீற்றர் பால் தரக்கூடிய பசுமாடு வழங்கப்பட்டது.

# வாய்க்கால்கள் சீரின்மையால் வெள்ளத்தில் மிதக்க வேண்டிய நிலை

## மாந்தை மேற்கு பிரதேச சபை தவிசாளர் தெரிவிப்பு



(மன்னார்)

மன்னார் மாந்தை மேற்கு பிரதேச சபைக்கு உட்பட்ட பகுதியிலுள்ள நீர்ப்பாசன வாய்க்கால்கள் சரியான முறையில் பேணப்படாத நிலையின் காரணமாகவே மக்கள் வெள்ளத்தில் மிதக்க வேண்டிய நிலை உருவாகியிருப்பதுடன் விவசாயங்களும் பாதிப்புக்கு உள்ளாகுவதாக மாந்தை மேற்கு பிரதேச சபை தவிசாளர் ஆசீர்வாதம் செல்லத்தம்பு தெரிவித்தார்.

தற்பொழுது மன்னார் பகுதியில் பெய்துவரும் மழை காரணமாக மன்னார் மாந்தை மேற்கு பிரதேச செயலகப் பிரிவில் பல இடங்கள் வெள்ளத்தால் மூழ்கிக் காணப்படுகின்றன. சில கிராமங்களிலுள்ள வீடுகள் அமைந்துள்ள இடங்கள் நீரில் மூழ்கியுள்ளதால் மக்கள் வீடுகளில் இருக்க முடியாத நிலையை காணக்கூடியதாக உள்ளது. பலரின் விவசாயங்கள் பாதிப்புக்குள்ளாகியுள்ள நிலைக்கு தள்ளப்பட்டுள்ளது.

தற்பொழுது கட்டுக்கரைக்குளத்தின் துருசுகள் பூட்டப்பட்டிருக்கின்ற போதும் இக்குளத்திலிருந்து 4 அங்குலம் நீர் வான்பாய்ந்து கொண்டிருக்கின்றது. இப்பகுதி மக்கள் விவசாயத்துடன் கால்நடை வளர்ப்பிலும் ஈடுபட்டு வருகின்றனர். வெள்ளத்தின் காரணமாக தங்கள் வாழ்வாதாரத்துக்கு ஈடுகொடுத்து வரும் கால்நடையை விட்டுச் செல்ல முடியாத நிலை. ஏனையவர்கள் கள்வர்களின் அச்சத்தால் வீட்டைவிட்டு செல்ல முடியாத நிலையில் இருக்கின்றனர்.

குறிப்பாக வாமதேவபுரம், அடம்பன், வேப்பம்குளம், வேட்டையார் முறிப்பு போன்ற பகுதிகளில் பெரும்வெள்ளம் காணப்படுகின்றது. பரப்புக் கடந்தான் மற்றும் சில பகுதிகளிலுள்ள விவசாய நிலங்கள் நீரினால் மூழ்கி செய்கைப்பண்ணப்பட்ட விவசாயம் பாதிப்புக்குள்ளாகிய நிலைக்கு தள்ளப்பட்டுள்ளது. இப் பகுதியில் சுமார் 12 ஆயிரம் ஏக்கர் விவசாயம் பாதிப்புக்குள்ளாகும் நிலை தற்பொழுது உருவாகியுள்ளது. இதனால் விவசாயிகள் பெரும் துன்பத்துக்கு ஆளாகியிருப்பதையும் காணக்கூடியதாக இருக்கின்றது.

நான் தற்பொழுது இந்த வெள்ளப் பெருக்கை கவனிக்கும்பொழுது சகல விவசாயப் பகுதிகளிலும் வடிகால் அமைப்பு சரியான முறையில் பேணப்படாத நிலையே காணப்படுகின்றது. இதனால் நீர்ப்பாசன திணைக்களம் கூடிய கவனம் செலுத்த வேண்டிய நிலைப்பாடு இங்கு இருக்கின்றது. இதனால் எமது சபை பெக்கோ மூலம் குறிப்பிட்ட இடங்களில் வாய்க்கால் துப்புரவு செய்யும் பணியை மேற்கொண்டு வருகின்றோம் என மேலும் தெரிவித்தார். (9)

# மாற்றுத்திறனாளிகள் உலகை மாற்றும் திறனாளிகள்

## மாவட்ட சமூகசேவை உத்தியோகத்தர் ஸ்ரீநிவாசன்



(நெளுக்குளம்)

மாற்றுத்திறனாளிகள் உலகை மாற்றும் திறனாளிகள் என வவுனியா மாவட்ட சமூக சேவை உத்தியோகத்தர் செ.ஸ்ரீநிவாசன் தெரிவித்துள்ளார்.

வவுனியா மாவட்ட மாற்றுத் திறனாளிகள் தினம் தொடர்பான விழிப்புணர்வு நிகழ்வு நேற்று முன்தினம் வவுனியாவில் இடம் பெற்றது.

அதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

மாற்றுத்திறனாளிகள் பிறரிடம் கையேந்தி வாழும் நிலைமாறி இன்று புலம்பெயர் உறவுகளின் துணையுடன் தமது சொந்தக்காலில்தாமே உழைத்து வாழும்நிலை வடக்கிலே பல இடங்களிலும் அரங்கேறி வருகின்றமை பாராட்டத்தக்கது. இன்று விளையாட்டு, கலை, தொழில்நுட்பம், அரசியல் எனப்பல துறைகளிலும் மற்றவர்களுக்கு முன்னுதாரணமாக மாறி வரும் இவர்கள் உண்மையில் மாற்றுத்திறனாளிகள் அல்ல. சமூகத்தையே மாற்றும் திறனாளிகள். அதுமட்டுமல்ல பல சந்தர்ப்பங்களில் தமது செயல்கள் மூலம் மாண்பு மிகு திறனாளிகளாகவும் மாறி வருகின்றனர்.

ஆகவே இவர்கள் மீது இரக்கம் கொள்வதை விடுத்து இவர்களுக்கான சலுகைகளை வழங்கும் மனோபாவத்தை விட்டு அவர்களின் உரிமைகளை வழங்கும் ஒட்டுமொத்த சமூகமாக நாம் மாறுவது இக்காலத்தின் அவசியமும் அவசரமும் ஆகும்.

இதன் மூலமே அவர்களுக்கு நாம் நன்மை செய்யமுடியும். இன்று இளந்தலைமுறையினர் மாற்றுத் திறனாளிகள் மீது நேசம் காட்டுவதும் பாடசாலை மாணவர்கள் இவர்களுக்கு உதவ முன்வரும் சந்தர்ப்பங்களும் அதிகரித்து வருவதைப் பார்க்கும் போது நல்ல உதவும் மனப்பாங்கு கொண்ட சிந்தனையுள்ள இளம் தலைமுறை வடபகுதி முழுவதும் உருவாகி வருவது மகிழ்ச்சி தருகிறது.

எனினும் பொது இடங்களில் இவர்கள் சவால்களை எதிர்நோக்கி வருவதை நாம் கண்டும் காணாது இருக்கமுடியாது. பல வைத்தியசாலைகளில் மாற்றுத் திறனாளிகள் சக்கர நாற்காலிகளுடன் வைத்தியசாலை வளாகத்தினுள் அனுமதிக்கப்படுவதில்லை. வைத்தியசாலை நோயாளர் விடுதிகளில் மாற்றுத்திறனாளிகளுக்கான மலசலகூட வசதிகள் உரிய முறையில் அமைக்கப்படாமை, பொது போக்குவரத்தில் மாற்றுத்திறனாளிகளை சில சாரதிகள் ஏற்றிச் செல்லமறுத்தல், பஸ்வண்டிகளில் பொதுமக்கள் தமக்கு இருக்கைகளை வழங்க தயங்குதல், பல பொது அரங்குகள் விளையாட்டு மைதானங்கள், கலைநிகழ்வுகள் நடக்கும் மேடைகள், பொருத்தமான அணுகுவசதிகளை கொண்டிராமை எனப்பல பிரச்சினைகளை மாண்புமிகு திறனாளிகள் எதிர்கொண்டு வருகின்றனர். இவை நாளும் எமக்கு கிடைக்கும் முறைப்பாடுகள்.

இவற்றை நிவர்த்தி செய்ய முழுச்சமூகமும் விருப்பம் கொள்ள வேண்டும். உள்ளூராட்சி மன்றங்கள் கட்டடத் திணைக்களம் என்பன கட்டடம் கட்ட அனுமதி வழங்கும் போது அணுகுவசதி தொடர்பில் 2014 ஆண்டு வர்த்தமானி அறிவித்தலை கவனத்தில் கொள்ள வேண்டும்.

இதன்மூலமே 2019 ஆம்ஆண்டு சர்வதேச மாற்றுத்திறனாளிகள் தின தொனிப் பொருளான "அனைவருக்கும் அணுகு வ்சதி கொண்ட எதிர்காலம்" என்ற இலக்கை நாம் தடையின்றி அடையமுடியும்" என மேலும் தெரிவித்தார். (9-299)

# ஓய்வூதியர் சங்கத்தினால் நிவாரணப்பொருட்கள் கையளிப்பு



(மன்னார்)

மன்னார் மாவட்ட ஓய்வூதியம் பெறுவோர் சங்கத்தின் ஏற்பாட்டில் 2019 ஆம் ஆண்டு பாலன் பிறப்பு மற்றும் 2020 ஆங்கில புது வருடத்தினை முன்னிட்டு மன்னார் பட்டித்தோட்டம் முதியோர் இல்லத்தில் வசிக்கும் முதியோர்களுக்கு தேவையான நிவாரணப் பொருட்கள் வழங்கி வைக்கப்பட்டது.

ஓய்வூதியம் பெறுவோர் சங்கத்தினால் சேகரிக்கப்பட்ட ஒரு தொகை பணத்தின் ஊடாக குறித்த முதியோர் இல்லத்தின் முதியோர்களுக்கு தேவையான அத்தியாவசியப் பொருட்கள் கையளிக்கப்பட்டுள்ளன.

குறித்த நிகழ்வில் மன்னார் மாவட்ட ஓய்வூதியம் பெறுவோர் சங்கத் தலைவர், செயலாளர் உட்பட அங்கத்தவர்கள் மற்றும் பட்டித்தோட்டம் முதியோர் இல்ல பொறுப்பாளர், அருட்சகோதரிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (9-285)




# வழக்கு ஒத்திவைப்பு

(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு மாவட்ட கடற்றொழில் நீரியல்வளத்துறைத் திணைக்களத்திற்கு சேதம் ஏற்படுத்தியமை தொடர்பில் முன்னாள் வட மாகாண சபை உறுப்பினர் துரைராசா ரவிகரன் உள்ளிட்ட ஏழு பேருக்கு எதிரான வழக்கு எதிர்வரும் 9ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு மாவட்ட கடற்றொழிலாளர்கள் ஒன்றிணைந்து கடந்த 2018.08.02 ஆம் திகதி கவனயீர்ப்புப் போராட்டத்தின் போது கடற்றொழில் நீரியல் வளத்துறை திணைக்கள அலுவலகம் சேதமாக்கப்பட்டது தொடர்பில் முல்லைத்தீவுப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டதுடன், இதில் முன்னாள் வடக்கு மாகாண சபை உறுப்பினர் து.ரவிகரன், உட்பட 7 பேர் கைது செய்யப்பட்டு முல்லைத்தீவு மாவட்ட நீதவான் நீதிமன்றத்தில் முன் னிலைப்படுத்தப்பட்டதைத் தொடர்ந்து பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டிருந்தது.

தொடர்ச்சியாக கடந்த ஒரு வருடத்திற்கு மேலாக இந்த வழக்கு விசாரணைகள் முல்லைத்தீவு நீதவான் நீதிமன்றில் இடம்பெற்று வரும் நிலையில், நேற்று முன்தினம் வழக்கு இடம்பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. (9-281)

# ஆறுமுகநாவலர் குருபூசை



(குருமன்காடு)

வவுனியா வேப்பம்குள ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலய் அறநெறிப் பாடசாலையில் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் குருபூசை தினம் கொண்டாடப்பட்டது.

நாவலரின் திருவுருவப் படத்திற்கு விசேட பூசைகள் இடம்பெற்றதோடு பஞ்சபுராணம்,நாவலர் பற்றி சிறப்புரைகள் இடம்பெற்றிருந்தன.

அதனைத்தொடர்ந்து மாணவர்களுக்கிடையே விநாடி வினா போட்டிகள் நடைபெற்று மாணவர்களுக்கான பரிசில்களும் வழங்கி வைக்கப்பட்டன.

இந்நிகழ்விற்கு சிறப்பு விருந்தினராக சர்வதேச இந்து இளைஞர் பேரவையின் ஒருங்கிணைப்பாளர் சிவ.கஜேந்திரகுமார் மற்றும் ஆலயத் தலைவர், பொருளாளர், அறநெறி ஆசிரியர், மாணவர்கள்கலந்து கொண்டனர்.(9-250)

# இலவச தொழிற்பயிற்சி கற்கை நெறிகளுக்கு விண்ணப்பம் கோரல்

(கிளிநொச்சி)


இலங்கை தொழிற்பயிற்சி அதிகார சபையானது கிளிநொச்சி மாவட்டத்தில் தற்கால வேலை வாய்ப்பினை மையமாக கொண்டு முழு நேர தொழிற்பயிற்சி கற்கை நெறிகளை நடத்தி வருகின்றது. 2020 ஆம் ஆண்டில் இக்கற்கை நெறிகள் முற்றிலும் இலவசமாக நடத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மாவட்ட தொழிற்பயிற்சி நிலையத்தில் முதல்முதலாக நீர்க்குழாய் பொருத்துநர் தேசிய தொழில் தகைமை மட்டம் 4 (NVQ 4) கற்கைநெறிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுவதோடு இவற்றுக்கான பதிவுகள் தற்போது நடைபெற்று வருகின்றன.

இக்கற்கைநெறிகள் கற்க விரும்புபவர்கள் தங்கள் பதிவுகளை அலுவலக நேரத்தில் மாவட்ட அலுவலகம், 155ஆம் கட்டை, ஏ9 வீதி, கிளிநொச்சி அல்லது தொ.இல 021 228 5686 இலக்கத்துடன் எதிர்வரும் 08.12.2019 ஆம் திகதிக்கு முன்னர் மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர். (9)

# பாரதம்

## பிரதமர் மோடி - சுவீடன் மன்னர் சந்திப்பு



(டில்லி)

இந்தியாவுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள சுவீடன் மன்னர் கார்ல் கஸ்தாஃப், டில்லியில் பிரதமர் நரேந்திர மோடியை சந்தித்து கலந்துரையாடினார்.

நேற்று முன்தினம் திங்கட்கிழமை இடம்பெற்ற இந்தச் சந்திப்பின்போது, இரு நாடுகளுக்கிடையேயான உறவை வலுப்படுத்துவது குறித்து கலந்தாலோசிக்கப்பட்டது.

ஐந்து நாட்கள், அரச முறை பயணமாக இந்தியா சென்றுள்ள சுவீடன் மன்னர் மற்றும் அரசி சில்வியாவுக்கு குடியரசுத் தலைவர் மாளிகையில் நேற்று காலை உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது. அதையடுத்து அவர்கள் பிரதமர் நரேந்திர மோடியை சந்தித்து கலந்துரையாடினர்.

அரசியல், வர்த்தகம், அறிவியல், கல்வி என அனைத்து துறைகளிலும் இருநாடுகளுக்கிடையே தகவல் பரிமாற்றம் ஏற்கனவே உள்ளன. இந்நிலையில் அதனை மேலும் வலிமைப்படுத்துவது தொடர்பாகவும் இந்த சந்திப்பில் கலந்துரையாடப்பட்டதாக கூறப்படுகின்றது.

இதேவேளை டில்லியில் மகாத்மா காந்தி சமாதியில் அஞ்சலி செலுத்திய சுவீடன் மன்னரும், அரசியும் பின்னர் ஜாமியா மசூதி, செங்கோட்டை உள்ளிட்ட இடங்களையும் பார்வையிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஜ-2)

## அயோத்தி வழக்கின் தீர்ப்புக்கு மிக முக்கிய காரணமாக இருந்த தொல்லியல் சான்றுகள்

(சென்னை)

அயோத்தி வழக்கில் இராமர் கோயிலுக்கு ஆதரவான தீர்ப்புக்கு தொல்லியல் ஆய்வுகள் மூலம் கிடைத்த சான்றுகளே முக்கிய காரணம் என இந்த வழக்கில் ஆஜராகி வாதிட்ட சிரேஷ்ட சட்டத்தரணி கே.பராசரன் தெரிவித்தார்.



உச்ச நீதிமன்றத்தில் நடைபெற்ற அயோத்தி வழக்கில் இராமருக்காக ஆஜரான 93 வயதான சிரேஷ்ட சட்டத்தரணி கே.பராசரனுக்கு தஞ்சாவூர் சாஸ்திரா பல்கலைக்கழகம் சார்பில் சென்னை தியாகராய நகர் வாணி மகாலில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை பாராட்டு விழா நடைபெற்றது.

அயோத்தி வழக்கு சிக்கலானது. உணர்வுபூர்வமானது. அயோத்தியில் தான் இராமர் பிறந்தார். அங்கு ஏற்கனவே கோயில் இருந்தது. முகலாயர் ஆட்சியில் இராமர் கோயில் இடிக்கப்பட்டு அந்த கட்டுமானத்தின் மீது தான் மசூதி கட்டப்பட்டது என்பதை நாங்கள் நிரூபித்தோம்.

அதற்கு தொல்லியல் ஆய்வுகள் மூலம் கிடைத்த சான்றுகள் மிகவும் துணையாக இருந்தன. இராமர் கோயில் கட்ட 5 நீதிபதிகள் கொண்ட உச்ச நீதிமன்றத்தின் அரசியல் சாசன அமர்வு தீர்ப்பளித்ததற்கு தொல்லியல் சான்றுகளே காரணம். அயோத்தி வழக்கில் 14 ஆயிரம் பக்கங்களுக்கு ஆவ்ணங்களை சமர்ப்பித்தோம்.

முஸ்லிம்களைப் பொறுத்தவரை அனைத்து மசூதிகளும் ஒன்றுதான். ஆனால், பிரச்சினைக்குரிய இடம் கோயில் மட்டுமல்ல. இராமர் பிறந்த இடமும் தான். எனவே அதனை இந்துக்கள் புனிதமாகப் பார்க்கிறார்கள். கோயில் இருந்த இடத்தை மாற்றலாம். ஆனால், இராமர் பிறந்த இடத்தை மாற்ற முடியாது.

இராமர் கோயிலுக்காக இந்துக்கள் நூற்றாண்டுகளாகப் போராடி வருகிறார்கள் என்பதை எடுத்துக் கூறினோம். கடவுளின் அருளால் வெற்றி கிடைத்தது" என பராசரன் தெரிவித்துள்ளார். (ஜ-2)

## வளைகுடா ஒத்துழைப்பு நாடுகளின் மாநாடு சவுதியில் இம்மாதம் ஆரம்பம்

(ரியாத்)

வளைகுடா ஒத்துழைப்பு நாடுகளின் மாநாடு இம்மாதம் (10) இல் சவுதி அரேபியாவின் தலைநகர் ரியாத்தில் நடைபெறவுள்ளது. பிராந்திய அரசியல், பொருளாதாரம், பாதுகாப்பு, சமூக விடயங்கள் தொடர்பில் இம்மாநாட்டில் கலந்துரையாடப்படும். பஹ்ரேய்ன், குவைத், ஓமான், கட்டார், சவுதி அரேபியா, ஐக்கிய அரபு இராச்சியம் ஆகிய ஏழு நாடுகள் அங்கம் வகிக்கும் இந்த அமைப்பு வளைகுடா பிராந்தியத்தில் மிகப் பலம் பொருந்திய அமைப்பாகக் காணப்படுகிறது.

இந்நாடுகளிலுள்ள எண்ணெய் வளங்களே இப்பலத்திற்கு முக்கிய பங்காற்றுகிறது. பிற நாடுகளின் சுரண்டல்களிலிருந்து எண்ணெய் வளங்களைப் பாதுகாத்து பொருளாதாரத்தைப் பலப்படுத்தல், பொதுவான எதிரிகளை அடையாளம் கண்டு அந்நாடுகளைத் தனிமைப்படுத்தல், அரேபியர்களின் தனித்துவம், கலாசாரத்தைப் பேணல் போன்ற முக்கிய நோக்கங்களில் இவ்வமைப்பு ஒன்றித்துச் செயற்படுகிறது.

ஏற்கனவே இம்மாநாட்டை ஐக்கிய அரபு இராச்சியத்தில் நடத்தத் தீர்மானிக்கப்பட்டிருந்தது. பின்னர் இதை சவுதியில் நடத்துவதென முடிவாகியுள்ள போதும் இதற்கான காரணங்களை, இவ்வமைப்பின் செயலாளரான அப்துல்லெத்தீப் அல்ஷியான் பகிரங்கமாக அறிவிக்கவில்லை. பாதுகாப்புக் காரணங்களுக்காக இது மாற்றப்பட்டிருக்கலாமெனவும் சிலர் சந்தேகம் வெளியிட்டுள்ளனர். மிக ஒற்றுமையாகச் செயற்பட்ட இந்த அமைப்பு கடந்த 2017 இல் கட்டாருடன் முரண்பட்டதால் பிராந்தியத்தில் பெரும் பதற்றம் நிலவியது. பயங்கரவாத அமைப்புகளுக்கு கட்டார் நிதியுதவியளிப்பதாக்ச் சந்தேகித்த இவ்வமைப்பிலுள்ள ஏனைய நாடுகள் கட்டார் மீது பொருளாதாரத் தடைகளை விதித்ததுடன் சகல தொடர்புகளையும் துண்டித்துக் கொண்டன. இந்தத் தடையால் வளைகுடா நாடுகளின் வர்த்தகம் பாரியளவில் பாதிக்கப்பட்டு.பாரிய ஏற்றுமதி, இறக்குமதியில் ஈடுபடும் சரக்குக் கப்பல்களின் வருகைகளும் கணிசமானளவில் குறைந்திருந்தன.


பின்னர் தற்போது நடைபெறும் "அரபியன் கல்ப்" கிண்ண உதைபந்தாட்டப் போட்டிகளை கட்டாரில் நடத்துவதற்கான ஏற்பாடுகளைச் செய்யும் பொருட்டு சவுதி அரேபியா, ஐக்கிய அரபு இராச்சியம், பஹ்ரேய்ன் ஆகிய நாடுகளின் தூதுவர்கள் கட்டாருக்குச் சென்று பேச்சுவார்த்தைகளை நடத்தியதால் நிலைமைகள் சுமுகமடைந்தன. மேலும் கடந்த ஆண்டிலும் சவுதி அரேபியாவின் தலைநகர் றியாத்தில் நடைபெற்ற வளைகுடா ஒத்துழைப்பு நாடுகளின் மாநாடும் இராஜதந்திர முறுகல்களுக்கான எந்தத் தீர்வும் எட்டப்படாமல் நிறைவடைந்தமை குறிப்பிடத்தக்கது. (2)

## நியூயோர்க்கில் கடு

✦ 7 மாவட்டங்களில் அவசர நி

✦ 700 இற்கும் மேற்பட்ட விமான

✦ 1000 இற்கும் அதிகமான வீதி









## ஜோர்தானில் பயங்கர 8 குழந்தைகள் உட்பட

(அம்மான்)



ஜோர்தானில் பாகிஸ்தானிய தொழிலாளர்கள் வசித்துவந்த தகர வீடொன்றில் இடம்பெற்ற தீவிபத்தில் பண்ணை தொழிலாளிகள் குடும்பத்தைச் சேர்ந்த 8 குழந்தைகள் உட்பட 13 பேர் உயிரிழந்தனர்.

மேலும், மூன்று பேர் தீக்காயங்களுக்கு உள்ளாகிய நிலையில், அவர்கள் அருகிலுள்ள வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

ஜோர்தான் தலைநகரான

## உயிரிழந்த திமிங்கிலத்தின் 220 பவுண்ட் குப்பைகள் மீட்






# வெளிநாடு

# டும் பனிப்பொழிவு

## நிலை பிரகடனம்
## மானங்கள் இரத்து
## வீதி விபத்துக்கள்





(நியூயோர்க்)

அமெரிக்காவின், நியூயோர்க் மாநிலத்தில் ஏற்பட்டுள்ள பனிப்பொழிவு காரணமாக சுமார் 700 இற்கும் மேற்பட்ட விமானங்கள் இரத்துச் செய்யப்பட்டுள்ளதாக ஊடகங்கள் செய்தி வெளியிடடன.


நியூயோர்கின் நியூ ஜெர்சி மற்றும் நியூ இங்கிலாந்து போன்ற இடங்களிலேயே இந்த பனிப்பொழிவு இடம்பெற்றுள்ளது.

இதன் காரணமாக நாடு முழுவதும் 700 இற்கும் மேற்பட்ட விமானங்கள் இரத்துச் செய்யப்பட்டுள்ளதுடன் மேலும் 5,200 இற்கும் மேற்பட்ட விமான சேவைகள் தாமதமடைந்தன.

அத்துடன் நியூயோர்க்கில் உள்ள ஏழு மாவட்டங்களில் அவசர நிலை பிரகடனப்படுத்தப்பட்டுள்ளதுடன், பாடசாலைகளுக்கும் விடுமுறை வழங்கப்பட்டுள்ளது.

இதேவளை பனிப்பொழிவு காரணமாக ஆயிரத்துக்கும் அதிகமான வீதி விபத்துக்கள் பதிவாகியுள்ளதுடன், அநாவசிய போக்குவரத்து நடவடிக்கையில் ஈடுபடுவதை தவிர்த்துக் கொள்ளுமாறும் அதிகாரிகள் அறிவுரை வழங்கியுள்ளனர். (ஜ-2)

# பதவி நீக்க விசாரணையில் ஆஜராக மறுப்பு
## அடிப்படை நேர்மை இல்லையென ட்ரம்ப் குற்றச்சாட்டு



(வோஷிங்டன்)

விசாரணை நடைமுறைகளில் அடிப்படை நேர்மையில்லை எனக் கூறி பதவி நீக்க விசாரணையில் ஆஜராக ட்ரம்ப் மறுத்துவிட்டார்.

அமெரிக்காவில் அடுத்த ஆண்டு நவம்பர் மாதம் நடைபெறும் ஜனாதிபதித் தேர்தலில் ட்ரமப்பை எதிர்த்து, ஜனநாயக கட்சியைச் சேர்ந்த முன்னாள் துணை ஜனா திபதி ஜோ பிடென் போட்டியிடுவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த சூழலில் உக்ரைன் நாட்டில் ஜோபிடென் மற்றும் அவரது மகன் ஹன்டார் நடத்தி வரும் தொழில் தொடர் பாக அவர்கள் மீது விசாரணை நடத்த அந்த நாட்டு ஜனாதிபதி விளாடிமிர் ஜெலென்ஸ்கிக்கு ஜனாதிபதி ட்ரம்ப் நெருக்கடி கொடுத்ததாக புகார் எழுந்தது.

இது பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியதை தொடர்ந்து, ட்ரம்ப் தனது பதவியை தவறாக பயன்படுத்தியதாகவும் இன்னொரு நாட்டுடன் இரகசிய பேரத்தில் ஈடுபட்டு தேச பாதுகாப்புக்கு ஆபத்தை ஏற்படுத்தியதாகவும் ஜனநாயக கட்சியினர் குற்றம் சாட்டினர்.

இதையடுத்து, இந்த விவகாரத்தில் ட்ரம்பை பதவி நீக்கம் செய்வதற்கான விசாரணையை ஜனநாயக கட்சி எம்.பிக்கள் தொடங்கினர். ஜனநாயக கட்சியினரின் குற்றச்சாட்டை ஆரம்பத்தில் இருந்து மறுத்து வரும் ட்ரம்ப், இந்த பதவி நீக்க விசாரணை எதிர்க்கட்சியினரின் சூனிய வேட்டை என விமர்சித்தார்.

ஆனாலும் நாடாளுமன்ற விசாரணைக்குழு இந்த பதவி நீக்க விசாரணையை தொடர்ந்து நடத்தி வருகிறது. ஆரம்பத்தில் இந்த விசாரணை மூடப்பட்ட அரங்கத்துக்குள் நடந்து வந்தது. அதன்பிறகு விசாரணையின் வெளிப்படை தன்மையை உணர்த்தும் வகையில் விசாரணை நடவடிக்கைகள் ரி.வியில் நேரலையில் ஒளிபரப்பு செய்யப்பட்டன. நேரலை விசாரணையில் ஆஜரான அமெரிக்க தூதர்கள் 2 பேர் ட்ரம்புக்கு எதிராகச் சாட்சியம் அளித்தனர்.

ஆனால் அவர்களின் சாட்சியத்தை ஏற்க மறுத்த ட்ரம்ப், தொடர்ந்து விசாரணை நடவடிக்கைகளை விமர்சித்து வந்தார். தற்போது இந்த பதவி நீக்க விசாரணை அடுத்த கட்டத்தை நோக்கி நகர்ந்துள்ளது. அதன்படி நேற்றுப் புதன்கிழமை நடைபெறும் விசாரணையில் ஜனாபதி ட்ரம்ப் நேரிலோ அல்லது சட்டத்தரணி மூலமாகவோ ஆஜராக வேண்டுமென நாடாளுமன்ற விசாரணைக் குழு அழைப்பு விடுத்திருந்தது.

இந்த நிலையில் விசாரணை நடைமுறைகளில் அடிப்படை நேர்மை இல்லாததால் ஜனாதிபதி ட்ரம்ப் மற்றும் அவரது சட்டத்தரணிகள் பதவி நீக்க விசாரணையில் ஆஜராகமாட்டார்கள் என வெள்ளை மாளிகை தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக வெள்ளை மாளிகையின் ஆலோசகர் பாட் சிபோலோன் நாடாளுமன்ற விசாரணைக்குழுவுக்கு கடிதம் அனுப்பியுள்ளார். அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டதாவது,

சாட்சிகள் இன்னும், பெயரிடப்படாத நிலையில், ஒரு விசாரணையில் நாங்கள் பங்கேற்போம் என்று எதிர்பார்க்க முடியாது. மேலும் கூடுதல் விசாரணைகள் மூலம் விசாரணைக் குழு ஜனாதிபதிக்கு ஒரு நியாயமான செயல்முறையை வழங்குமா? என்பது தெளிவாகத் தெரியவில்லை.

எனவே தற்போதைய சூழ்நிலையில் விசாரணையில் பங்கேற்க நாங்கள் விரும்பவில்லை. இவ்வாறு அந்த கடிதத்தில் குறிப்பிடப்பட்டது. (ஜ-2)

# பகர தீ விபத்து;
## டபட 13 பேர் உயிரிழப்பு



அம்மான் நகரில் இருந்து சுமார் 50 கிலோ மீற்றர் தூரத்தில், ஷுனே பகுதியிலேயே நேற்று முன்தினம் திங்கட்கிழமை அதிகாலை 2 மணியளவில் இந்த பயங்கர தீவிபத்து ஏற்பட்டது.

இப்பகுதியிலுள்ள ஒரு பண்ணையில் வேலை செய்துவந்த 2 பாகிஸ்தானிய குடும்பத்தை சேர்ந்த 13 பேரே, இவ்வாறு உயிரிழந்தனர்.

இந்தத் தீ விபத்துக்கான காரணம் இதுவரை கண்டறியப்படாத நிலையில், இதுகுறித்து அதிகாரிகள் விசாரணை நடத்தி வருகின்றனர். (ஜ-2)

# ரஷ்யா மற்றும் சீனாவுக்கு இடையே இயற்கை எரிவாயு குழாய் திட்டம்

(பீஜிங்)

ரஷ்யா மற்றும் சீனாவுக்கு இடையே இயற்கை எரிவாயு குழாய் ஒன்றை கொண்டு செல்லும் திட்டம் ஆரம்பிக்கப்பட்டது.

இத்திட்டமானது நேற்று முன்தினம் திங்கட்கிழமை ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின் மற்றும் சீன ஜனாதிபதி ஸி ஜின் பிங் ஆகியோர் இணைந்து தொடங்கி வைத்தனர்.

இந்த குழாய், சைபீரிய எரிவாயு வயலை வடகிழக்கு சீனாவில் உள்ள ஒரு நகரத்துடன் இணைக்கிறது.

சீனாவின் தேசிய பெற்றோலியம் கோர்ப் நிறுவனம், 2014 ஆம் ஆண்டு மே மாதத்தில் ரஷ்ய எரிசக்தி நிறுவனமான காஸ்ப்ரோமுடன் 400 பில்லியன் டொலர்கள் மதிப்புள்ள ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டது. இதன் பின்னர், குழாயின் ஆரம்ப கட்டம் ஐந்து ஆண்டுகளில் கட் டப்பட்டு திறந்து வைக்கப்பட்டது.

இதுகுறித்து சீன ஜனாதிபதி ஜீ ஜின் பிங் கூறுகையில், 'சீனாவும் ரஷ்யாவும் தங்கள் தேசிய வளர்ச்சியில் ஒரு முக்கி யமான கட்டத்தில் உள்ளன, எங்கள் உறவுகளும் ஒரு புதிய கட்டத்திற்குள் நுழைகின்றன' எனத் தெரிவித்தார். (ஜ-2)

# தின் வயிற்றினுள்
## மீட்பு




(எடின்பர்க்)

ஸ்கொட்லாந்து நாட்டின் வடகிழக்கில் அமைந்துள்ள கடற்கரை பகுதியொன்றில் இறந்த நிலையில் கரையொதுங்கிய திமிங்கிலத்தின் வயிற்றிலிருந்து 220 பவுண்ட் குப்பைகள் மீட்கப்பட்டுள்ளன.

குறித்த திமிங்கிலமானது உயிரிழந்த 48 மணி நேரத்தின் பின்னர் நேற்று முன்தினம் இவ்வாறு லஸ் கென்டைர் என்ற கடற்கரை பகுதியில் கரையொதுங்கியுள்ளதாக அந் நாட்டு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

திமிங்கிலத்தின் வயிற்றிலிருந்து மீட்கப்பட்ட 220 பவுண்ட் குப்பைகளுள் பிளாஸ்டிக் கோப்பைகளும் கையுறைகளும் பிளாஸ்ரிக் நாடாக்களும் குழாய்களும் கயிறு, வலைகள், மூட்டைகள் உள்ளிட்ட பெருந்திரளான பிளாஸ்ரிக் பொருட்கள் என்பனவும் அடங்குவதாக ஸ்காட்டிஷ் மரைன் வனவிலங்கு துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். இதேவேளை அண்மையில் தாய்லாந்தில் உயிரிழந்த நிலையில் மீட்கப்பட்ட மான் ஒன்றின் வயிற்றிலிருந்து 15 பவுண்ட் பிளாஸ்ரிக் பொருட்கள் அடங்கிய கழிவுகள் மீட்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது. (ஜ-2)

# ஜனாதிபதி மாளிகை அருகில் புகைக்குண்டுத் தாக்குதல்



(ஜகார்த்தா)

இந்தோனேஷியாவின் தலைநகர் ஜகார்த்தாவில் உள்ள ஜனாதிபதி மாளிகைக்கு அண்மையில் அமைந்துள்ள பூங்காவொன்றில் புகைக் குண்டுத் தாக்குதல் இடம்பெற்றது. இரு இராணுவ அதிகாரிகள் காயமடைந்த நிலையில் வைத்தியாசலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக ஜகார்த்தா பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த பூங்காவில் பயிற்சியில் ஈடுபட்டுக்கொண்டிருந்த இராணுவ அதிகாரிகளே இவ்வாறு காயமடைந்துள்ளனர்.

இந்த குண்டுவெடிப்பு தாக்குதலின்போது இந்தோனேஷிய ஜனாதிபதி ஜோகோ விடோடோ ஜனாதிபதி மாளிகையில் இல்லை என்று ஜனாதிபதி செய்தித் தொடர்பாளர் தெரிவித்தார்.

குண்டுவெடிப்பு ஒரு குறுங்குழுவாத தாக்குதலின் விளைவாக ஏற்பட்டதா? என்பது உடனடியாகத் தெரியவில்லை. உலகின் அதிக மக்கள் தொகை கொண்ட முஸ்லிம் பெரும்பான்மை நாடான இந்தோனேசியாவில் அண்மையில் உள்நாட்டு கலவரங்கள் மீண்டும் எழுச்சி அடைய ஆரம்பித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஜ-2)

## "இலங்கையின் இறையாண்மைக்கு மிலேனியம் பாதிப்பை ஏற்படுத்தும்"

# எமது நிலைப்பாட்டில் எந்த மாற்றமுமில்லை

## அமைச்சர் வாசு உறுதி

(கொழும்பு)

**மிலேனியம் சவால்கள் ஒப்பந்தம் இலங்கையின் இறையாண்மைக்கு பாதிப்பை ஏற்படுத்தக்கூடியதாகும் என்ற நிலைப்பாட்டில் எந்த மாற்றமும் இல்லை. அரசாங்கம் அதில் உறுதியாக இருக்கின்றது என நீர்வழங்கல் மற்றும் வசதிகள் இராஜாங்க அமைச்சர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்தார்.**



சோசலிச மக்கள் முன்னணி நேற்று முன்தினம் கொழும்பில் நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அத்துடன் அரசாங்கத்துக்கு எதிராக பல்வேறு சதித்திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. குறிப்பாக சுவிட்சர்லாந்து தூதரகத்தில் பணிபுரியும் பெண் ஊழியரை கடத்தியதாக தெரிவிக்கப்படும் குற்றச்சாட்டு தொடர்பாக தூதுவரே முறைப்பாடு தெரிவித்திருக்கின்றார்.

பாதிக்கப்பட்ட பெண் இதுவரை முறைப்பாடு செய்யவில்லை. அவரின் உதவி இல்லாததாலேயே விசாரணையை கொண்டு செல்ல முடியாமல் இருக்கின்றது.

மேலும் நடைபாதை வியாபாரிகளை அகற்றப்போவதாகவும் மக்கள் மத்தியில் பொய் பிரசாரங்கள் பரவி வருகின்றன. இது தொடர்பாகவும் அவதானமாக இருக்க வேண்டும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

---

# வீதியை விட்டு விலகி மரத்தில் மோதிய வான்

## 9 பேர் படுகாயம்

(பதுளை)

ஊவா மாகாணத்தின் எல்ல பொலிஸ் பிரிவுக்குட்பட்ட எல்ல வெல்லவாய பிரதான வீதியில் எல்ல பகுதியில் வான் ஒன்று வீதியை விட்டு விலகி மரத்தில் மோதி விபத்துக்குள்ளாகியதில் அதில் பயணம் செய்த 9 பேர் படுகாயங்களுக்குள்ளாகி பதுளை மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.


பண்டாரவளையிலிருந்து கல்முனை நோக்கிச் சென்று கொண்டிருந்த வான் ஒன்றே இவ்வாறு விபத்துக்குள்ளாகியுள்ளது.

இவ்விபத்தில் காயமடைந்தவர்கள் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு தொடர்ந்தும் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

வாகன சாரதிக்கு வாகனத்தை கட்டுப்படுத்த முடியாததன் காரணமாகவே இவ்விபத்து இடம்பெற்றதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இவ்விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை எல்ல பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (இ-7)





---

# இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## உடலும் உள்ளமும்

எங்களில் சில பேர் ரொம்ப தைரியமாக இருப்பார்கள். நாம் கூட சொல்லுறது உண்டு.... அந்த ஆளிடம் வருவதற்கு எமன் கூடப் பயப்படுவான் என்று.

தைரியசாலிகளை நெருங்கிறதுக்கு எமன் கூடப் பயப்படுவான் என்று சொல்கிறது உண்மைதான் சேர். அது பொய்யில்லை மன வலிமை மனிதனைக் காப்பாற்றும். இது மருத்துவ ரீதியான உண்மை.

உடல் கோளாறுகள் மன ஆரோக்கியத்தை பாதிக்கும். மன எழுச்சி, மனப் போராட்டம் இதெல்லாம் உடல் இயக்கத்திலே மாறுதலை உண்டாக்குது. சில வகையான நோய்களுக்கும் மனதுக்கும் இருக்கிற சம்பந்தம் என்பதைப் பற்றி எல்லாம் இப்ப ஆராய்ச்சி செய்கிறார்கள்.

ஆஸ்துமா, மூட்டுவலி, பெருங்குடல் அழற்சி, உயர் இரத்த அழுத்தம், சோரியாஸீஸ் என்கிற தோல் வியாதி, வயிற்றுப் புண், தைரொயிட், நச்சுத் தன்மை இது மாதிரி நோய்களை உண்டாக்கிறதில்லே மனதோட பங்கு என்ன என்பது பற்றியெல்லாம் ஆய்வு செய்து பார்த்திருக்கிறார்கள் எதுக்கெடுத்தாலும் சோர்ந்து போகிறது இப்படிப்பட்ட மனவாகு.

அதோட யாரும் நமக்கு உதவ முடியாது என்கிற மனோ பாவம் (Helplessness), கைவிடப்பட்ட மனநிலை (Hopelessness) இதெல்லாம் நோயின் தீவிரத்தை அதிகரிக்கச் செய்கிறதாம்.

இவர்கள் எல்லாம் கை, கால் வலிக்குது, உடம்பு அசதியாக இருக்கிறது, தூக்கம் வரவில்லை, முதுகு வலிக்குது, உடம்பிலே உணர்ச்சி குறைகிறது, கை ,கால், விரல் எல்லாம் மரத்துப் போகுது.

இப்படி ஏதாவது சொல்லிக் கொண்டு டாக்டர்களைத் தேடி வந்து கொண்டிருக்கிறார்களாம். நெஞ்சு வலி யாருக்கு வருகிறது தெரியுமா? பதற்றம், போட்டி மனப்பான்மை, அளவுக்கு அதிகமான வேகம், துடிப்பு, பேராசை. எதிலும் கட்டுப்பாடு, நேரம் தவறாமை இதெல்லாம் உள்ள மனவாகு உள்ளவர்கள் பெரும்பாலும் நெஞ்சு வலிக்கு ஆளாகி விடுகிறார்களாம்.

பிரீட்மேன் என்பவர் நிறைய ஆராய்ச்சி எல்லாம் செய்து அதை உறுதிப்படுத்தியிருக்கிறார். அவர் செய்த ஆராய்ச்சியிலே எதெல்லாம் தெரியவந்தது தெரியுமா?

பொறுப்பு அதிகம் உள்ளவர்களுக்கும் கண்டிப்பு உள்ளவர்களுக்கும் இரத்த அழுத்தம் அதிகரித்து இருந்ததாம். இரத்த அழுத்தம் தனக்கு அதிகமாக இருக்கு என்பதைத் தெரிந்து கொண்டவர்கள் தலைவலி, மயக்கம், அசதி மாதிரியான உணர்வுகளை பெறுகிறார்களாம்.

ஆனால் உண்மை என்ன தெரியுமா? இதெல்லாம் இரத்த அழுத்தத்தினாலே இல்லை! இரத்த அழுத்தம் கட்டுப்பாட்டுக்கே இருந்தால் கூட இவர்கள் அப்படி நினைக்கிறார்களாம் .

இதற்கு காரணம் மனதுதான் என்கிறார் அவர். சில பேர் எப்படி தெரியுமா? ஒருத்தர் மாரடைப்பால் இறந்தார் என்று கேள்விப்பட்டால் போதும் இறந்து போறதுக்கு காரணம் இதயம் தான் என்னும் பீதியாலே இதயத் தளர்ச்சி என்கிற மன நோயாலே பாதிக்கப்படுறார்கள்.

இவர்கள் அடிக்கடி தங்களுடைய இதயப் பகுதியைத் தொட்டுப் பார்த்துக் கொள்வார்கள். நாடியைப் பிடித்துப் பார்த்துக் கொள்வார்கள். அடிக்கடி மூச்சை உள்ளுக்கு இழுத்து வெளியே விட்டு வலி வருகிறதா? என்று பார்த்துக் கொள்வார்கள்.

வேறு எங்கேயாவது வலித்தால்கூட நெஞ்சை வலிக்கிறது என்று சொல்லிக் கொண்டிருப்பார்கள் .

ஆஸ்துமாவுக்கும் மனதுக்கும் சம்பந்தம் உண்டு. தீர்வு காண முடியாத மனப் போராட்டங்கள் எல்லாத்துக்கும் பிறரையே சார்ந்திருக்கின்ற மனநிலை இதையெல்லாம் ஆஸ்துமாவின் தீவிரத்தை அதிகப்படுத்தும்.

பயம் என்ன நடக்கமோ என்கிற பதற்றநிலை இதெல்லாம் சுவாசித்தலை அதிகரிக்கச் செய்கிறது இல்லையா? இதனாலே இரத்தத்தின் காரத்தன்மை அதிகமாகி நோயின் தீவிரம் அதிகமாகிறது.

மனப் போராட்டம், மனக்கவலை, மன இறுக்கம் தோல்வியாதியைக் கூட தாண்டி விடுதாம் இது மாதிரி இன்னும் எவ்வளவோ இருக்கு. அதனாலே இன்றைக்கு நமக்குத் தேவை மனவலிமை! மலர்ந்த முகம்.

இது இரண்டும் இருந்து விட்டால் பல விதமான நோய்கள் நம்மிடம் நெருங்கவே நெருங்காது. டாக்டர் என்னை நெருங்காமல் இருக்கிறதுக்கு நான் ஒரு காரியம் செய்கிறேன் என்றார் ஒருவர். என்ன என்று கேட்டேன். தினமும் ஒரு அப்பிள் பழம் சாப்பிடுகிறேன் (An apple a day keep doctors away) என்றார்.


என்னை யாருமே நெருங்காமல் இருப்பதற்கு நான் ஒரு காரியம் செய்கிறேன் என்றார் இன்னொருத்தர்.

அது என்ன என்று கேட்டேன்.

தினமும் ஒரு பூண்டு சாப்பிடுகிறேன் என்றார் அவர். "A garlic day keeps everybody away"

# வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை

# கருணைக்கிழங்கும் காட்டுக் கருணை அல்லது வீணாலைக்கிழங்கும்





டாக்டர் (திருமதி) விவியன் சத்தியசீலன்
M.D(Siddha)India
சிரேஷ்ட விரிவுரையாளர்
சித்தமருத்துவத்துறை
யாழ்.பல்கலைக்கழகம்

கருணைக்கிழங்கின்,

Botanical Name- Amorphephallus Campaniculatus

Family- Araceae

வீணாலைக்கிழங்கின்

Botanical Name- Draconitum Polyphyllum

Family- Araceae

இரண்டும் ஓராண்டு வளரக்கூடிய செடியாகும். கருணைக்கிழங்கு நில மட்டத்திற்கு கீழ் அடர்த்தியாகப் பரவிக் காணப்படும். கிழங்கின் விட்டம் 20-28 சென்றிமீற்றராகக் காணப்படும். குமிழ்வடிவாக இருக்கும்.

ஆனால் வீணாலைக் கிழங்கு சிறிய வட்டக் கிழங்காகக் காணப்படும். கருணைக்கிழங்கு தோட்டங்களில் பயிரிட்டு சந்தைப் படுத்தப்படுகிறது. ஆனால் காட்டுக்கருணை அல்லது வீணாலைக்கிழங்கு தானாக முளைத்து வளரக்கூடியது. மழை காலத்தில் இதன் பரம்பல் அதிகமாக இருக்கும். ஆனாலும் இதன் ஒப்பீட்டளவில் வீணாலைக்கிழங்கு மருத்துவ குணங்கள் அதிகம் கொண்டவை. இதனுடைய தண்டும் வேர்க்கிழங்கும் மருத்துவ முக்கியத்துவம் வாய்ந்தவை.

இருவகை கருணைக் கிழங்கிலும் நார்ச்சத்து அதிகம் காணப்படுவதால் இரத்தத்தில் கொலஸ்ட்ரோ லின் அளவைக் கூட்விடாமல் வைத்திருப்பதோடு இரத்தக்குழாய்களில் கொலஸ்ட்ரோல் படிவதையும் கட்டுப் படுத்தும். நீரிழிவு நோயாளிகளும் இதனைப் பயன்படுத்தலாம்.

கிழங்கு வகைகளில் மிகச்சிறந்தது கருணைக் கிழங்கு ஒன்றுதான். "கிழங்கு வகைகளில் கருணையின்றி வேறு புசியேன்" வாரத்தில் இருமுறையாவது உணவுடன் சேர்த்துக் கொள்வது மிகச் சிறப்பாகும். மூலநோய் உள்ளவர்களும் அடிக்கடி கருணைக்கிழங்கை உணவில் சேர்த்துக் கொள்ளல் வேண்டும்.

கருணைக்கிழங்கு வகைகளில் முக்கிய சத்துக்களாக பொட்டாசியம், போலிக் கமிலம், சோடியம், உயிர்ச் சத்து B6, கல்சியம், நார்ச் சத்து என்பன அதிகம் காணப்படுகின்றது.

காட்டுக்கருணை அல்லது வீணாலைக்கிழங்கு தண்டை வற்றல் குழம்பாக வைத்துப் பயன்படுத்தினால் மூலரோகம், குதத்தில் ஏற்படும் பிளவை போன்ற நீங்கும். இன்றும் நெடுந்தீவு மக்களிடையே வீணாலைக்கிழங்கின் பாவனை பொதுவாகவே காணப்படுகின்றது.

மேலும் கருணை வகைகளில் அதன் தோலில் அரிப்பை ஏற்படுத்தும் தன்மை இருப்பதால் கருணைக் கிழங்குகளை தணலில் சுட்டு தோலை நீக்கிப் பயன்படுத்த வேண்டும்.

அதேபோல் காறல் தன்மையை நீக்குவதற்காக பழப்புளி சேர்த்து சமைப்பது சிறந்ததாகும். அத்துடன் வீணாலைக் கிழங்கை குடிநீராகக் காய்ச்சி எடுத்து வர அல்லது கறி சமைத்து சாப்பிட்டாலோ வயிற்று வலி தணியும்.

**100 கிராம் கருணைக்கிழங்கில் உள்ள சத்துக்கள்**


புரதம்-1.4 கிராம்
கொழுப்பு-0.1 கிராம்
நார்ச்சத்து-1.0 கிராம்
காபோவைதரேற்று- 26.0 கிராம்
கல்சியம்-35 மி.கிராம்
பொஸ்பரஸ்-20 மி.கிராம்
இரும்பு-1.3 மி.கிராம்
பொட்டாசியம்-237 மி.கிராம்
போலிக்கமிலம்-17.5 மி.கிராம்
கரோட்டீன்-78 மை.கிராம்
நைதரசன்-0.22 மி.கிராம்
நியாசின்-0.7 மி.கிராம்

கருணைக்கிழங்கு காறும் கருணை, காறாக் கருணை என இரண்டு வகை உண்டு. இதில் காறும் கருணையை பிடி கருணை என்றும் காறாக் கருணையை சேனைக்கிழங்கு என்றும் கூறுவர். காறும் கருணை நீண்ட உருண்டையாக இருக்கும். காறாக் கருணை 1/2 கிலோ- 2 கிலோ வரை எடை உள்ளதாக இருக்கும். இருவகைக் கிழங்குகளும் உணவிற்குப் பயன்படும்.

காறாக்கருணையை மேற்றோல் சீவிவிட்டு குழம்பு, பொரியல், மசியல், கூட்டு, வறுவல் ஆகிய ஏதாவது ஒரு வகையில் உணவில் சேர்த்துச் சாப்பிடலாம்.

காறும் கருணைக் கிழங்கை வேகவைத்து, தோலை உரித்து, புளிசேர்த்துச் சமைக்கலாம். புளி சேர்த்தால் தான் அதிலுள்ள காறல் நீங்கி அரிப்பு இல்லாமல் இருக்கும்.

காறாக்கருணைக்கிழங்கு சமைத்துச்சாப்பிட்டால் ஆசனக்கடுப்பு நீங்கி மலம் சுலபமாக வெளியேறும். சகல விதமான மூலநோய்களையும் குணப்படுத்துவதில்



சேனைக்கிழங்கு எனும் காறாக்கருணையைவிட பிடி கருணைக்கிழங்கு சிறப்பானது. காறும் கருணைக்கிழங்கை சமைத்து உண்பதால் சமிபாடு அதிகரிக்கும். சமிபாட்டு உறுப்பை வலிமைப்படுத்தும். நாட்பட்ட காய்ச்சல், உடல்வலி, பெண்களுக்கு ஏற்படும் வெள்ளை சாய்தல் என்பன தீரும்.

வீணாலைக்கிழங்கு இன்றும் மருத்துவப் பண்புகள் நிறைந்தவை. இதன் மேற்றோலைச் சீவி சிறுசிறு துண்டுகளாக்கிக் கொள்ளவும். இவற்றை வெயிலில் நன்கு உலர்த்தவும். இவ்வாறு உலர்த்திய கிழங்குத் துண்டுகளை தயிரில் ஒருநாள் ஊற வைக்கவும். பின்பு இத் துண்டுகளை பரப்பி வெயிலில் உலர்த்த வேண்டும். இவ்வாறு உலர்ந்த துண்டுகளை மீண்டும் தயிரில் ஒரு நாள் உலரவைக்கவும். இவ்வாறு மூன்று நாட்கள் உலர்த்த வேண்டும். பின்பு இதில் 200 கிராம் எடையுள்ள கிழங்குத் துண்டுகளை இடித்து மாவாக்கி அரித்துக் கொள்ளவும்.

மிளகு, சீரகம், சுக்கு, இந்துப்பு ஆகிய ஒவ்வொன்றும் 30 கிராம் அளவு எடுத்து தனித்தனியே பொடித்து மாவாக்கி அரித்து வைக்கவும். பின்பு வாணலியை அடுப்பிலிட்டு 1/2 லீற்றர் நெய் சேர்த்து 200 கிராம் பனங்கட்டியைச் சேர்த்து இவ்விரண்டும் சேர்ந்து வதங்கும் சமயத்தில் முன்பு பொடித்த கருணைக்கிழங்கு உள்ளிட்ட பல தூள்களையும் கொஞ்சம் கொஞ்சமாகச் சேர்த்து கிளறிக் கொண்டிருக்க வேண்டும்.

நன்றாக வெந்துவரும் சமயம் வாணலியை இறக்கி ஆறவைத்து வாயகன்ற போத்தலில் சேமித்து வைத்துக் காலை, மாலை என 5 கிராம் அளவு சாப்பிட்டு வர வேண்டும். அத்துடன் காரமில்லாத உணவும் உணவில் கீரைகளைச் சேர்த்துக் கொள்வதும் வாழைப்பழம் உணவுக்குப் பின் சாப்பிடுவதும் எல்லாவகை மூலநோய்களும் விரைவில் குணமாக உதவும்.

காறாக்கருணை எனும் சேனைக்கிழங்கை தோல் நீக்கி சிறு துண்டுகளாக மெல்லிதாக நறுக்கி வெயிலில் உலர்த்தவும். நன்கு உலர்ந்ததும் இடித்து சூரணமாக சலித்து வைத்துக் கொள்ள வேண்டும். இதில் 5 கிராம் அளவு காலை, மாலை தொடர்ந்து வெந்நீருடன் சாப்பிட்டு வர வேண்டும். இதனால் இரத்தமூலம் குணமாவதுடன் சமிபாட்டுச் சக்தி சீராகும்.

**கருணைக்கிழங்கு லேகியம் வீட்டில் தயாரிக்கும் முறை**

இதற்கு வீணாலைக்கிழங்கைப் பயன்படுத்தவும். ஒரு கிலோ தோல் நீக்கிய கிழங்கை மெல்லிய வில்லைகளாக நறுக்கிய வில்லைகளை வெயிலில் காய வைக்க வேண்டும். நன்றாகக் காய்ந்ததும் அவற்றை ஒரு மண் பாத்திரத்தில் போட்டு புளித்த மோரை ஊற்றி நன்றாக மூடி வைக்க வேண்டும். மறுநாள் காலையில் மோர் முழுவதையும் வடித்து கிழங்கு வில்லைகளை வெயிலில் காயவைக்க வேண்டும்.

இதேபோல் மூன்று முறை செய்தபின்பு நன்றாக உலர்ந்ததும் உரலில் இட்டு இடித்து மாவாக்கி அரித்து, அதனுடன் மிளகு ஒரு கிராம், இந்துப்பு 100 கிராம், சீரகம் 100 கிராம், சுக்கு 100 கிராம், பனங் கற்கண்டு 500 கிராம், பசு நெய் 250 கிராம்.

இவற்றில் முதல் நான்கு பொருட்களையும் தனித்தனியாக இடித்து அரித்து பின்பு வாணலியை அடுப்பில் வைத்து நெய் ஊற்றி உருகியதும் பனங் கற்கண்டு போட்டு அனைத்துத் தூளையும் போட்டு லேகியப் பதத்தில் இறக்கி 5 கிராம் காலை, மாலை சாப்பிட்டு மோர் அருந்த எல்லாவித மூலநோயும் குணமாகும்.

# நாட்டில் இனங்களுக்கு இடையே நல்லிணக்கம், அமைதி வேண்டி நல்லூரிலிருந்து கதிர்காமத்திற்கு புனித திருத்தல பாதயாத்திரை



படங்கள்:- ஐ.சிவசாந்தன்

(யாழ்ப்பாணம்)

நாட்டில் இனங்களுக்கு இடையே நல்லிணக்கம், அமைதி ஏற்பட இறையருள் வேண்டி கதிர்காமக் கந்தன் ஆலயத்தை நோக்கிய பாதயாத்திரை நல்லூர் கந்தசுவாமி ஆலயத்திலிருந்து ஆரம்பமானது. நல்லூர்க் கந்தசுவாமி ஆலயத்தில் நேற்றுக் காலை 9 மணியளவில் வழிபாடுகளுடன் இந்தப் பாதயாத்திரை ஆரம்பமானது. இலங்கை முதலுதவிச்சங்க இந்து சமயத் தொண்டர் சபை, யாழ்ப்பாணம் சின்மயா மிஷன் ஆகியவற்றின் ஏற்பாட்டில் இந்த யாத்திரை முன்னெடுக்கப்படுகிறது.(இ-7)

### ஓய்வுபெற்ற இராணுவ அதிகாரி

## சுவிஸ் தூதரகம் முன் முன்னெடுத்த உண்ணாவிரதப் போராட்டம் நிறைவு



(கொழும்பு)

சுவிஸ் தூதரகம் முன்பாக ஓய்வுபெற்ற இராணுவ அதிகாரி சட்டத்தரணி அஜித் பிரசன்ன முன்னெடுத்த உண்ணாவிரதப் போராட்டத்தை நேற்று முன்தினம் இரவு கைவிட்டார்.

சுவிஸ் தூதரகத்தின் பெண் பணியாளர் ஒருவர் கடத்தப்பட்டு துன்புறுத்தப்பட்டதாகக் கூறப்படும் சம்பவமானது நாட்டிற்கும் புதிய அரசாங்கத்திற்கும் அவப்பெயரை ஏற்படுத்தும் செயல் எனத் தெரிவித்து ஓய்வுபெற்ற இராணுவ அதிகாரி அஜித் பிரசன்ன கொழும்பிலுள்ள தூதரகத்தின் முன்பு நேற்று முன்தினம் திங்கட்கிழமை காலை உண்ணா விரதப் போராட்டத்தை ஆரம்பித்தார்.

போராட்டத்தில் ஈடுபட்ட அவர், சுவிஸ் தூதரகத்தின் பணியாளர் கடத்தப்பட்டதாகக் கூறப்படும் சம்பவத்தால் நாட்டிற்குப் பெரும் அவப்பெயர் ஏற்பட்டுள்ளது. இவரின் இந்தப் பிரசாரத்தின் காரணமாக சர்வதேசத்தின் மத்தியில் எமது நாட்டின் நற்பெயர் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் இந்தச் சம்பவம் தொடர்பான உண்மைத் தகவல்களை அவர் பொலிஸாருக்கு தெரியப்படுத்த வேண்டும்.

இதுதொடர்பான விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்ட நிலையில் பொலிஸார் பல தகவல்களைப் பெற்றுக் கொண்டுள்ளனர். தொடர்ந்தும் இவர் அமைதியைக் காக்காது உண்மையைத் தெரியப்படுத்த வேண்டும். நாட்டிற்கும் புதிய அரசாங்கத்திற்கும் அவப்பெயரை ஏற்படுத்தும் வகையிலே இந்தச் செயற்பாடு அமையப் பெற்றுள்ளதென் அஜித் பிரசன்ன தெரிவித்தார்.

இந்நிலையில், அத்துரலிய ரத்ன தேரர் மற்றும் ஓய்வு பெற்ற ரியர் அட்மிரல் சரத் வீரசேகரவின் கோரிக்கைக்கு அமைய அவர் தனது போராட்டத்தைக் கைவிட்டார். (இ-7)

## சாவகச்சேரி மீன் சந்தையில் போமலிங் கலந்த கடல் உணவுகள்

### உறுப்பினர்களிடம் மக்கள் முறைப்பாடு

(யாழ்ப்பாணம்)

சாவகச்சேரி மீன் சந்தையில் போமலிங் கலந்த கடல் உணவுகள் விற்கப்படுவதாக சாவகச்சேரி நகரசபை உறுப்பினர்களிடம் நேற்று முன்தினம் திங்கட்கிழமை பொதுமக்கள் முறைப்பாடு செய்தனர்.

மனித உடல்களை பழுதடையாமல் வைத்திருக்கப் பயன்படுத்தப்படும் போமலிங் என்ற இரசாயனச் சேர்க்கையின் வாடை குறித்த சந்தையில் வாங்கும் மீன்களின் பூப்பகுதிகளில் வீசுவதாக உறுப்பினர்களிடம் பொதுமக்கள் முறைப்பாடு செய்தனர்.

இந்த விடயம் தொடர்பில் அப்பகுதிப் பொதுச் சுகாதாரப் பரிசோதகரிடம் எழுத்து மூலம் தெரியப்படுத்தியதாக உறுப்பினர்கள் தெரிவித்தனர்.

இதேவேளை பொதுச் சுகாதாரப் பரிசோதகரைத் தொடர்பு கொண்டு கேட்டபோது அவர் நேற்றுக் கொழும்பில் நிற்பதாகத் தெரிவித்தார். (இ-10)

## சாதாரண தரப் பரீட்சை விடைத்தாள் திருத்தும் பணிகள் இரு கட்டங்களில்

(கொழும்பு)

கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சை விடைத்தாள் திருத்தும் பணிகள் இரண்டு கட்டங்களாக நடைபெறவுள்ளதாக பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்தது. முதலாவது கட்டத் திருத்தப் பணிகள் டிசெம்பர் மாதம் 24 ஆம் திகதி தொடக்கம் ஜனவரி மாதம் 26 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

இரண்டாம் கட்டப் பணிகள் ஜனவரி மாதம் 17 ஆம் திகதி தொடக்கம் ஜனவரி மாதம் 26 ஆம் திகதி வரையும் இடம்பெறவுள்ளது. (இ-7)


## கல்யாணமாலை

### சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
| --- | --- |
| பிறப்பு: 1983 இந்து<br>நட்சத்திரம்: உத்தரம் 4<br>கி.பா: 52 செவ் 8 இல்<br>உயரம்: 5'7"<br>தகைமை/தொழில்AAT, Accountant UK<br>எதிர்பார்ப்பு: A/L, உள்நாடு<br>தொ.இ: B/2845 | பிறப்பு: 1992 இந்து<br>நட்சத்திரம்: மிருகசீரிடம் 2<br>கி.பா: 16 ¾ செவ் 4 இல்<br>உயரம்: 5'1"<br>தகைமை/தொழில்AAT, HND IT, B. Com, Charted Following, Bank Trainee<br>எதிர்பார்ப்பு: அரச தொழில் மட்டும்<br>தொ.இ: G/5113 |
| பிறப்பு: 1980 இந்து<br>நட்சத்திரம்: அனுசம்<br>கி.பா: 36 ½ செவ் 12 இல்<br>உயரம்: 5'7"<br>தகைமை/தொழில்O/L, ஆலய குருக்கள்<br>எதிர்பார்ப்பு: சைவபோசணம், உள்நாடு<br>தொ.இ: B/2849 | பிறப்பு: 1983 இந்து<br>நட்சத்திரம்: திருவாதிரை 1<br>கி.பா: 6 ¾ சூரிசெவ் 9 இல்<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்:B.Sc, முகாமைத்துவ உதவியாளர்<br>எதிர்பார்ப்பு: அரச உத்தியோகம், சைவ போசணம், அசைவமும் புரிந்துணர்வுடன் ஏற்கப்படும்<br>தொ.இ: G/5114 |
| பிறப்பு: 1976 இந்து<br>நட்சத்திரம்: உத்தரம் 1<br>கி.பா: 24 சூரிசெவ் 4 இல்<br>உயரம்: 5'10"<br>தகைமை/தொழில்:B.Sc, M.Sc, Phd, Senior Clinical System Analyst - Canada<br>எதிர்பார்ப்பு: உள்நாடு, வெளிநாடு<br>தொ.இ: B/2856 | பிறப்பு: 1965 இந்து<br>நட்சத்திரம்: மகம் 3<br>கி.பா: 21 ½ உயரம்: 4'9"<br>தகைமை/தொழில்:A/L, ஆசிரியர்<br>எதிர்பார்ப்பு: அரச, தனியார் தொழில் /வெளிநாடு<br>தொ.இ: G/5116 |
| பிறப்பு: 1978 இந்து<br>நட்சத்திரம்: பூசம் 1<br>கி.பா: 46 செவ் 2 இல்<br>உயரம்: 5'9"<br>தகைமை/தொழில்:B.Sc, M.Sc, Analytical Chemist - UK<br>எதிர்பார்ப்பு: உள்நாடு, வெளிநாடு<br>தொ.இ: B/2857 | பிறப்பு: 1971 இந்து<br>நட்சத்திரம்: பூரம் 2<br>கி.பா: 52 செவ் 1 இல் உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்A/L, கூட்டுறவுகணக்காளர்<br>எதிர்பார்ப்பு: உள்நாடு, வெளிநாடு<br>தொ.இ: G/5127 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.

# யாழ்ப்பாணத்தை அனைத்துத் துறைகளிலும் கட்டியெழுப்பி ஊழல் அற்ற நிலைபேறான அபிவிருத்தி ஏற்படுத்தப்படும்

## 452 பயனாளிகளுக்கு உருளைக்கிழங்கு வழங்கும் நிகழ்வில் அங்கஜன் எம்.பி. உறுதி

(யாழ்ப்பாணம்)

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் ஆட்சிக் காலத்தில் யாழ்ப்பாணத்தை அனைத்துத் துறைகளிலும் கட்டியெழுப்பி நிலைபேறான அபிவிருத்தி ஏற்படுத்தப்படும் என ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினரும் யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுத் தலைவருமான அங்கஜன் இராமநாதன் தெரிவித்தார்.

உடுவில் பிரதேச செயலகத்திற்குட்பட்ட கமநலசேவை நிலையத்தால் நேற்று முன்தினம் திங்கட்கிழமை 17 ஆயிரம் ரூபாய் பெறுமதியான உருளைக்கிழங்குப் பெட்டிகளை பயனாளிகளுக்கு மானிய அடிப்படையில் வழங்கும் நிகழ்விலே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், நாட்டின் ஜனாதிபதியாக கோட்டாபய ராஜபக்ஷ பொறுப்பேற்றுள்ள நிலையில் அவரின் வெற்றியில் தமிழ் மக்கள் பங்களிப்புச் செய்தும் செய்யாமலும் இருந்துள்ளனர்.

எது எவ்வாறாக இருந்தாலும் நாட்டின் தலைவராகவும் அனைத்து இன மக்களின் தலைவராகவும் ஜனாதிபதி கோட்டாபய காணப்படுகிறார்.


நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தல் தமிழ் மக்கள் மத்தியில் நல்லதொரு படிப்பினையை வழங்கியுள்ள நிலையில் எமது எதிர்காலச் செயற்பாடுகளை முன்னெடுப்பதற்கு தெற்குடன் இணைந்த அரசியலே தேவையாகவுள்ளது.

நாட்டின் ஜனாதிபதியாக கோட்டாபய சிங்களப் பெரும்பான்மை வாக்குகளால் தெரிவு செய்யப்பட்ட போதும் வடக்குக் கிழக்குத் தமிழ் மக்களின் வாக்குகளும் அவருக்காக அளிக்கப்பட்டன.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் ஜனாதிபதித் தேர்தல் காலத்தில் முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவை தமிழர் மத்தியில் ஜனநாயகவாதியாகவும் தற்போதைய ஜனாதிபதி கோட்டாபயவை வேண்டத்தகாதவராகவும் சித்தரித்தார்கள்.

கூட்டமைப்பின் சிந்தனை முழுவதும் தனிப்பட்ட அரசியல் ஆதாயங்களைத் தக்க வைத்துக் கொள்வதாகவே அமைந்தது. அதனடிப்படையிலேயே சஜித் பிரேமதாஸவை ஆதரித்தார்களே தவிர மக்களின் எதிர்கால இலக்கை அடைவதற்கில்லை.

இந்நிலையில் எதிர்வரும் பாராளுமன்றத் தேர்தலில் தமிழ் மக்கள் என்னைத் தங்களின் வாக்குப்பலத்தால் அதிகாரமுள்ள பாராளுமன்ற உறுப்பினராகத் தெரிவு செய்ய வேண்டும்.



தற்போது மக்கள் சேவையை வினைத்திறனாகச் செய்வதற்காக ஜனாதிபதியால் யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத் தலைவராக நியமிக்கப்பட்டேன்.

எனவே எனது சேவையை முன்னோக்கிக் கொண்டு செல்வதற்கும் தமிழ் மக்களுடைய பிரச்சினைகள் தொடர்பில் அதிகார வர்க்கத்துடன் ஆளுமையுடன் பேசுவதற்குப் பாராளுமன்றத் தேர்தலில் மக்கள் ஆணையை வழங்குவார்கள் என அவர் மேலும் நம்பிக்கை வெளியிட்டார். (இ-10)

# விசேட தேவையுடையோர் எதிர்கொள்ளும் தடைகள் நீக்கப்பட வேண்டும் - ஜனாதிபதி

(கொழும்பு)

விசேட தேவையுடையவர்களால் நாட்டின் அபிவிருத்திக்கு பெற்றுக்கொடுக்கப்படும் பங்களிப்பை மிகுந்த கௌரவத்துடனும் நன்றியுடனும் நினைவுகூர்ந்த வண்ணமே விசேட தேவையுடையவர்களுடனும் அவர்களது குடும்ப உறவினர்களுடனும் இணைந்து இவ்வருட சர்வதேச விசேட தேவையுடையோர் தினத்தை நாம் கொண்டாடுகின்றோம் என ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்தார்.



விசேட தேவையுடையோர்களின் பங்களிப்பு மற்றும் அவர்களது தலைமைத்துவத்தை மேம்படுத்துவதற்கு 2030 அபிவிருத்தி நிகழ்ச்சி திரலுக்கமைய செயற்படுதல்" 2019ஆம் ஆண்டின் சர்வதேச விசேட தேவையுடையோர் தினத்தின் தொனிப்பொருளாக ஐக்கிய நாடுகள் சபையால் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

கடந்த நவம்பர் 18ஆம் திகதி நான் இந்த நாட்டின் ஜனாதிபதியாகப் பதவியேற்ற கணம் முதல், எமது நாட்டின் அனைத்துப் பிரஜைகளின் வாழ்க்கையும் சுபீட்சமடைய வேண்டும் என்பதே எனதும் எமது அரசாங்கத்தினதும் எதிர்பார்ப்பாகவுள்ளது.

அந்தச் செயற்பாட்டில் "இந்த நாட்டில் வாழும் பலதரப்பட்ட விசேட தேவைகளை உடைய அனைத்து இலங்கையர்களும் பூரணமாக இணைத்துக் கொள்ளப்பட வேண்டும்.


இதன்போது அவர்களது விசேட தேவைகளைப் போன்றே ஆற்றல்களையும் இனங்கண்டு நாட்டின் ஏனைய சாதாரண மக்களை இலக்காகக்கொண்டு மேற்கொள்ளப்படும் அனைத்து நலன்பேணல் மற்றும் அபிவிருத்தி செயற்றிட்டங்களிலும் விசேட தேவையுடையோரின் பங்களிப்பு உறுதிப்படுத்தப்பட வேண்டியதுடன், அவர்களது அந்தப் பங்களிப்பிற்கு தற்போதுள்ள பௌதீக மற்றும் கொள்கை ரீதியான தடைகள் நீக்கப்பட வேண்டுமென்பது எனது எண்ணமாகும்.


விசேட தேவையுடையவர்கள் எதிர்நோக்கும் சவால்களை வெற்றிகொள்வதற்கு தேவையான பாதுகாப்பையும் ஒத்துழைப்பையும் நாம் பெற்றுக் கொடுக்க வேண்டும்.

அனைவரது உரிமைகளும் பாதுகாக்கப்படும் ஒரு சமூகத்திலேயே அனைத்து மக்களும் நன்மைகளைப் பெற்றுக்கொள்வர் என்பது இங்கு வலியுறுத்தப்பட வேண்டிய முக்கிய விடயமாகும்.

எனவே எமது சமூகத்தில் விசேட தேவையுடையவர்களின் பூரண பங்களிப்பை பெற்றுக் கொள்வதற்காக நாம் அனைவரும் எமக்கான செயற்பணிகளை நிறைவேற்ற வேண்டியுள்ளது என்பதைப் புரிந்துகொள்ள வேண்டியது அவசியமாகும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# குளங்களின் வான்கதவுகள் திறப்பு





(ஏறாவூர்)

மட்டக்களப்பு மாவட்டத்தில் பெய்து வருகின்ற கன மழையின் காரணமாக ஏற்படும் வெள்ள நீர் அபாயத்தைக் குறைப்பதற்கு வசதியாக குளங்களின் வான் கதவுகள் திறக்கப்பட்டு மிதமிஞ்சிய நீர் கடலுக்குள் பாய விடப்படுவதாக மாவட்ட நீர்ப்பாசனத் திணைக்களப் பணிப்பாளர் எஸ்.எம்.பி.எம். அஸ்ஹர் தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள பெரிய குளங்களான உன்னிச்சை, நவகிரி, உறுகாமம், கட்டுமுறிவு, வெலிக்காக்கண்டி ஆகிய குளங்களின் வான் கதவுகள் திறக்கப்பட்டுள்ளன.

அதேவேள்ள மட்டக்களப்பை ஊடறுத்துச் செல்லும் புளுகுணாவை குளத்தின் வான் கதவும் திறந்து விடப்பட்டது.

புளுகுணாவைக் குளத்தின் நீர்மட்டம் 29அடிக்கு மேல் உள்ளதனாலும், தொடர்ச்சியாக மழை பெய்துகொண்டிருப்பதனாலும் இந்தக் குளத்தின் வான் கதவுகள் திறக்கப்பட்டன.

தொடர்ந்து காலநிலை சீரடையாமல் இருப்பதால் மாவட்ட இடர் முகாமைத்துவ அலுவலர்களும், நீர்ப்பாசனத் திணைக்களம், பிரதேச செயலகங்கள் ஆகியவற்றின் அதிகாரிகளும் கள நிலைமைகளை அவதானித்து கடமைகளில் ஈடுபட்டுள்ளனர்.

அதேவேளை, கடற்படையினர், விமானப் படையினர், இராணுவத்தினர், விசேட அதிரடிப் படையினர், பொலிஸார் ஆகியோரும் கண்காணிப்பு தயார் நிலைக் கடமைகளில் ஏற்கனவே ஈடுபட்டுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்தனர். (இ-7)

# ரஞ்சனுக்கு எதிரான மனு மீதான விசாரணை ஏப்ரல் 3-ம் திகதிக்கு



(கொழும்பு)

நீதிமன்றத்தை அவமதித்ததாக முன்னாள் இராஜாங்க அமைச்சர் ரஞ்சன் ராமநாயக்கவுக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டிருந்த மனு மீதான விசாரணையை எதிர்வரும் ஏப்ரல் மாதம் 3 ஆம் திகதி பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ள உயர் நீதிமன்றம் தீர்மானித்தது.

உயர்நீதிமன்ற நீதிபதிகளான சிசிரத அப்புரு, பிரியந்த ஜெயவர்த்தன மற்றும் முர்ந்து பெர்னாண்டோ ஆகியோர் முன்னிலையில் நேற்று முன்தினம் குறித்த மனு பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போதே விசாரணைக்கு எடுப்பது குறித்து மூவரடங்கி நீதிபதிகள் குழு மேற்கண்ட அறிவித்தலை விடுத்தது.

சட்டமாதிபருக்கு பதிலாக மேலதிக சொலிசிற்றர் ஜெனரல் ஜனாதிபதி சட்டத்தரணி சஞ்ஜய ராஜபக்ஷவால் இந்தக் குற்றப் பத்திரிகை உயர் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது. (இ-7)



சுகாதார நகர அங்குரார்ப்பண நிகழ்வு அண்மையில் கோப்பாய் தேசிய கல்வியியற் கல்லூரியில் பீடாதிபதி சு.பரமானந்தம் தலைமையில் நடைபெற்றது. இதில் சிரேஷ்ட விரிவுரையாளர் டாக்டர் குமானந்தனர், யாழ்.போதனா வைத்தியசாலை சுகாதாரக்கல்வி பொறுப்பதிகாரி டாக்டர் துவர்ரகா ஆகியோர் கலந்து கொண்டனர்.

# வளர்ச்சி பற்றிய சிந்தனை எதுவுமின்றி கடமைக்காக தயாரிக்கப்பட்ட பட்ஜெட்

## சாவகச்சேரி நகரசபை உறுப்பினர் எதிர்ப்பு

(சாவகச்சேரி)

சாவகச்சேரியின் வளர்ச்சி பற்றிய எதிர்காலச் சிந்தனை எதுவுமின்றி 2020 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்டம் கடமைக்காக தயாரிக்கப்பட்டிருப் பட்டிருப்பதாக சாவகச்சேரி நகரசபையின் தமிழ்த்தேசிய மக்கள் முன்னணி உறுப்பினர் ம.நடனதேவன் சுட்டிக்காட்டினார்.

சாவகச்சேரி நகரசபையில் இடம்பெற்ற வரவு-செலவுத் திட்டத்திற்கான அங்கீகாரத்தை வழங்கும் விசேட அமர்வின் போதே அவர் மேற்கண்டவாறு சுட்டிக்காட்டினார்.

சாவகச்சேரி நகரசபையின் 2020 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்டத்தில் நகரின் கழிவு முகாமைத்துவம் தொடர்பாக எவையும் குறிப்பிடப்பட வில்லை. சாவகச்சேரி நகரசபை கழிவகற்றல் மற்றும் அதனை மீள்சுழற்சிக்கு உட்படுத்தல் போன்ற செயற்பாடுகளில் இடர்பாடுகளை எதிர்கொள்கின்ற போதிலும் அந்த இடர்பாடுகளை நிவர்த்தி செய்யக்கூடிய வழிவகைகள் எவையும் பட்ஜெட்டில் உள்ளடக்கப்படவில்லை. சாவகச்சேரியின் எதிர்காலத்திற்கான பட்ஜெட் இதுவல்ல. பட்ஜெட்டில் சபையின் வருமானத்தை அதிகரிப்பதற்கான வழிவகைகள் எதனையும் முன்வைக்கவில்லை

நகரசபை எல்லைக்குள் முன்னெடுக்கப்பட்ட மலக்கழிவுகளை உரமாக்கும் செயற்றிட்டம் இடைநடுவில் கைவிடப்பட்ட போதிலும் அதனை மீளச் செயற்படுத்த பட்ஜெட்டில் இடமளிக்கப்பட வில்லை. வீதிகள் வேறு வேறு திட்டங்கள் மூலமாகவும் போட முடியும். நகரசபைக்கென நிலையான வருமானத்தை ஈட்ட பட்ஜெட்டில் வழிவகை செய்திருக்க வேண்டும். சபை இல்லாவிட்டாலும் செயலாளர் வீதிகளைப் போட முடியும். கடமைக்காக போலியாக பட்ஜெட் தயாரிக்கப்பட்டுள்ளது. வரவு-செலவுத் திட்டத்தை எதிர்க்க முடியும். ஆனால் எதிர்ப்பதற்கு முன்னணி உறுப்பினர்களுக்கு ஏனைய உறுப்பினர்கள் ஒத்துழைப்பு வழங்கத் தயாராக இல்லை. வீதியும், மின் குமிழும் போடுவது மாத்திரமே சபையின் கடமையில்லை என அவர் மேலும் தெரிவித்தார். (இ-30)

# சுவிஸ் தூதரகப் பெண் பணியாளர் கடத்தப்பட்டமைக்குக் கண்டனம்

(கொழும்பு)

சுவிஸ் தூதரகப் பெண் பணியாளர் கடத்தப்பட்டு எச்சரிக்கை செய்யப்பட்ட விவகாரத்தை வன்மையாகக் கண்டிப்பதாக தமிழ்த் தேசியப் பண்பாட்டுப் பேரவையின் தலைமை ஒருங்கிணைப்பாளர் எஸ்.நிஷாந்தன் தெரிவித்தார்.

நாட்டில் ஏற்பட்ட அரசியல் மாற்றத்தின் பின்னர் குறிப்பாக இலங்கையின் ஏழாவது நிறைவேற்று ஜனாதிபதியாக கோட்டாபய ராஜபக்ஷ பதவியேற்றதன் பின் இவ்வாறான ஒரு முக்கிய தூதரக அதிகாரியைக் கடத்தி எச்சரிக்கை செய்யப்பட்டு விடுவிக்கப்பட்டுள்ளமையானது இலங்கை வாழ் மக்கள் மத்தியிலும் சர்வதேச மட்டத்திலும் பெரும் அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது.

கடந்த மகிந்த ராஜபக்ஷ ஆட்சிக் காலத்திலும் இவ்வாறான சம்பவங்கள் பெருமளவாக நடைபெற்றன.

அவற்றுக்கெல்லாம் இன்னமும் நீதியான ஒரு உள் நாட்டு விசாரணை நடைபெறாத பட்சத்தில் தற்பொழுது மீண்டும் இவ்வாறானதொரு சம்பவம் நடைபெற்றுள்ளமையானது புதிய அரசாங்கம் மீது சர்வதேச மட்டத்தில் நம்பிக்கையில்லாத தன்மையையே நிச்சயம் ஏற்படுத்தியுள்ளதாகவும் அறிய முடிகின்றது.

எனவே இச்சம்பவம் தொடர்பாக நேர்மையான நீதியான விசாரணை ஒன்றை நடத்த வேண்டும் என அந்த அமைப்பு மேலும் தெரிவித்தது. (இ-7)

# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1906

### டயானா

ஓரிடத்தில் நீ காட்டும் கருணை...



கோடி மடங்காய் உன்னிடம் திரும்ப வரும்!

### பாலன்

படிக்க காசில்லாமல் படிக்கிறதை நிறுத்தினவர்கள் நிறையப் பேர்...



ஆனால்...குடிக்க காசில்லாமல் ஒருத்தன் கூட குடியை நிறுத்தினதா சரித்திரமே இல்லை...

### சுலக்சனா

காயப்படுத்தியவர் மறந்து விடலாம்... காயப்பட்டவர்கள் என்றும் மறப்பதில்லை



காயங்களையும் அதன் வலிகளையும்...

### யுவா



வாழ்த்தினாலும் தாழ்த்தினாலும் சிரித்து கொண்டே இரு. காலம் அவர்களுக்கு பதில் சொல்லும்

### தர்ஷி




நாங்கள் உதிரத்தில் கலந்த அண்ணன் தங்கை இல்லை உயிரில் கலந்த பாசமலர்கள்...

### பிரதீப்


ஹலோ... உங்க ஊர்ல மழையா?



எங்க ஊர்ல செம மழை...

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# நோர்வேத் தூதுவர்-ஜனாதிபதி சந்திப்பு



(கொழும்பு)
இலங்கைக்கான நோர்வே நாட்டின் தூதுவர் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவைச் சந்தித்துக் கலந்துரையாடினார்.

குறித்த சந்திப்பு தொடர்பில் இலங்கைக்கான நோர்வே நாட்டின் தூதுவர் தனது டுவிட்டர் பக்கத்தில் குறிப்பிட்டுள்ளதாவது.

இரு நாடுகளுக்குமிடையிலான பரஸ்பர ஒத்துழைப்புக்களை முன்னெடுத்துச் செல்வது குறித்து ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுடன் கலந்துரையாடப்பட்டது.

அத்துடன் கடல் பாதுகாப்பு, மீன்பிடி, தகவல் தொழில்நுட்பம், பசுமை சக்தி, வேலைவாய்ப்பு, பெண்களை வலுப்படுத்தல் மற்றும் நல்லாட்சி போன்றவற்றுக்கான எமது ஒத்துழைப்புக்களை தொடர்ந்தும் வழங்குவோம். எனத் தெரிவிக்கப்பட்டது. (இ-7)

## 2020 ஆம் ஆண்டிற்கான

# வேலணைப் பிரதேசசபை பட்ஜெட் ஏகோபித்த ஆதரவுடன் நிறைவேற்றம்

(யாழ்ப்பாணம்)
வேலணைப் பிரதேச சபையின் 2020 ஆம் ஆண்டிற்கான பட்ஜெட் கடந்த 29 ஆம் திகதி வெள்ளிக்கிழமை சபை உறுப்பினர்கள் 20 பேரின் ஏகோபித்த ஆதரவுடன் நிறைவேற்றப்பட்டது.


2020 ஆம் ஆண்டு சபையால் மொத்த வருமானமாக 71 மில்லியன் 66 ஆயிரத்து 600 ரூபாவும் மொத்தச் செலவீனங்களாக 71 மில்லியன் 65 ஆயிரத்து 600 ரூபாவாகவும் எதிர்பார்க்கப்பட்டது.

மூலதனச் செலவீனமாக 17 மில்லியன் 10 ஆயிரம் ரூபாவும் அதில் 5 இலட்சத்து 50 ஆயிரம் ரூபா சுகாதாரத் தேவைகளுக்காகவும் 16 மில்லியன் 7 இலட்சத்து 60 ஆயிரம் ரூபா பௌதீக அபிவிருத்திகளான வீதி அபிவிருத்தி,மின்சார இணைப்புக்களுக்காக ஒதுக்கப்பட்டது.

குறித்த வரவு-செலவுத் திட்டம் தொடர்பான சபை விவாதம் கடந்த 29 ஆம் திகதி வெள்ளிக்கிழமை வேலணை பிரதேச சபையில் இடம்பெற்றபோது தமிழ்த்தேசியக் கூட்டமைப்பைச் சேர்ந்த 8 உறுப்பினர்கள்,ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியைச் சேர்ந்த 6 உறுப்பினர்கள்,பெரமுனவைச் சேர்ந்த 2 உறுப்பினர்கள், தமிழர் விடுதலைக் கூட்டணி, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி, ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியைச் சேர்ந்த தலா ஒவ்வொரு உறுப்பினர்களும் தமது ஏகோபித்த ஆதரவை வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-10)

# வாழ்த்துப் பதாகையை அகற்றிய ஜனாதிபதி



(கொழும்பு)
ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் வெற்றிக்கு வாழ்த்து தெரிவித்து கட்டுநாயக்க பகுதியில் அமைக்கப்பட்டிருந்த பதாகை ஜனாதிபதியின் ஆலோசனைக்கு அமைய அகற்றப்பட்டது.

ஜனாதிபதியின் வெற்றிக்கு வாழ்த்துத் தெரிவித்து கட்டுநாயக்க விமான நிலையத்திற்கு நுழையும் பகுதியில் பதாகை ஒன்று அமைக்கப்பட்டிருந்தது.

இந்திய விஜயத்தை முடித்துக் கொண்டு கட்டுநாயக்க விமான நிலையம் ஊடாக நாட்டை வந்தடைந்த ஜனாதிபதி இந்தப் பதாகையை அவதானித்தார்.

இதனையடுத்து குறித்த பதாகையை அகற்றுமாறு ஜனாதிபதி உத்தரவிட்டதுடன், அதற்கமைய குறித்த பதாகை நேற்றுக்காலை அகற்றப்பட்டது. (இ-7)

# கஞ்சிபானவின் சிறைக்கூடத்தில் கையடக்க தொலைபேசி மீட்பு

(கொழும்பு)
திட்டமிட்ட குற்றங்களுடன் தொடர்புடையவரான மொஹமட் நஜிம் மொஹமட் இம்ரான் எனப்படும் "கஞ்சிபான இம்ரான்" தடுத்து வைக்கப்பட்டுள்ள பூசா சிறைக்கூடத்திலிருந்து கையடக்க தொலைபேசி மீட்கப்பட்டது.



பூசா சிறையில் நேற்று முன்தினம் மேற்கொள்ளப்பட்ட தேடுதல் நடவடிக்கையின் போதே குறித்த கையடக்க தொலைப்பேசி மீட்கப்பட்டதாக சிறைச்சாலைகள் திணைக்களம் தெரிவித்தது.

மேலும் இச் சம்பவம் குறித்த விசாரணைகளை முன்னெடுப்பதற்காக கையடக்க தொலைபேசியை சிறைச்சாலை தலைமையகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.(இ-7)

# இலஞ்ச ஊழல் வழக்கிலிருந்து விடுதலையானார் பிரியங்கர


(கொழும்பு)
இலஞ்ச ஊழல் குற்றச்சாட்டு தொடர்பில் தாக்கல் செய்யப்பட்டிருந்த வழக்கிலிருந்து முன்னாள் சிவில் விமான சேவைகள் அமைச்சரும் தற்போதைய சுதேச மருத்துவ இராஜாங்க அமைச்சருமான பிரியங்கர ஜயரட்ன விடுதலை செய்யப்பட்டார்.



பிரியங்கர ஜயரட்னவுக்கு எதிராக இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு நேற்று வாபஸ் பெறப்பட்டதையடுத்தே கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி மஞ்சுள திலகரத்ன அவரை விடுதலை செய்தார். (இ-7)

# மலையக மக்களை யாரும் குறைத்து மதிப்பிட வேண்டாம்

## இராதாகிருஷ்ணன் எம்.பி. கூறுகிறார்



(ஹற்றன்)
மலையக மக்களை யாரும் குறைத்து மதிப்பிட வேண்டாமென தமிழ் முற்போக்குக் கூட்டணியின் பிரதித் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான வேலுசாமி இராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.

எதிர்வரும் பொதுத் தேர்தல் தொடர்பில் தெளிவுபடுத்தும் கூட்டம் நேற்று ஹற்றன் மலையக மக்கள் முன்னணி காரியாலய மண்டபத்தில் இடம்பெற்றது.

இதில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், "ஒரு சில அரசியல்வாதிகள் மலையக மக்களை கல்வியறிவு இல்லாதவர்கள் என்று கருதுகின்றார்கள்.

அவர்களுக்கு நான் ஒரு விடயத்தைத் தெளிவாகக் குறிப்பிட விரும்புகின்றேன். மலையக மக்கள் சிந்தித்துச் செயற்படக் கூடியவர்கள். எந்தவொரு தீர்மானத்தையும் சரியாக எடுக்கக் கூடியவர்கள்.

தங்களுடைய சின்னத்தை மிகவும் அழகாக தெரிவுசெய்து வாக்களிப்பதில் மலையக மக்கள் அனைத்துத் தேர்தல்களிலும் சிறப்பாகச் செயற்பட்டு வந்திருக்கின்றார்கள்.

இன்று மலையகத்தில் நிராகரிக்கப்பட்ட வாக்குகளின் விகிதம் பாரியளவில் வீழ்ச்சியடைந்து இருக்கின்றது. எனவே எங்கள் மக்களை யாரும் குறைத்து மதிப்பிட வேண்டாம். அவர்கள் தன்மானத்தைக் காக்க போராடுகின்ற ஒரு சமூகம் என்பதை யாரும் மறந்து விடவேண்டாம்" என மேலும் தெரிவித்தார். (இ-7)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி ரூபா | மருதனார் மடம் ரூபா | சாவகச்சேரி ரூபா | கொடிகாமம் ரூபா | கிளிநொச்சி ரூபா |
|---|---|---|---|---|---|
| கத்தரிக்காய் | 80 | 120 | 100 | 110 | 100 |
| உருளைக்கிழங்கு | 120 | 120 | 120 | 120 | 120 |
| பச்சைமிளகாய் | 250 | 350 | 280 | 140 | 200 |
| தக்காளி | 140 | 120 | 120 | 70 | 120 |
| மரவள்ளிக்கிழங்கு | 100 | 120 | 100 | 70 | 80 |
| கோவா | 100 | 140 | 120 | 80 | 120 |
| கரட் | 250 | 250 | 280 | 210 | 300 |
| பூசணி | 80 | 60 | 50 | 60 | 60 |
| புடோல் | 120 | 80 | 50 | 40 | 80 |
| வாழைக்காய் | 80 | 80 | 80 | 70 | 120 |
| சின்ன வெங்காயம் | 450 | 350 | 350 | 400 | 440 |
| பெரிய வெங்காயம் | 200 | 160 | 140 | 110 | 150 |
| பாகற்காய் | 200 | 160 | 140 | 130 | 200 |
| வெண்டிக்காய் | 80 | 80 | 50 | 70 | 80 |
| கருணைக் கிழங்கு | 80 | 80 | 80 | 70 | 40 |
| பயற்றங்காய் | 140 | 150 | 140 | 130 | 160 |
| லீக்ஸ் | 150 | 220 | 260 | 300 | 320 |
| பீற்றூட் | 180 | 100 | 200 | 60 | 200 |
| கறிமிளகாய் | 250 | 260 | 260 | 210 | 200 |
| முருங்கைக்காய் | 400 | 800 | 450 | — | — |
| போஞ்சி | 140 | 120 | 120 | 100 | 120 |
| கத்தரிதம்புள்ள | 80 | 70 | 80 | 70 | 80 |
| கீரை - 1 பிடி | 40 | 40 | 40 | 50 | 60 |
| தேசிக்காய் | 100 | 160 | 120 | 110 | 100 |
| தேங்காய் (ஒன்று) | 50 | 45 | 35 | 45 | 30-50 |
| இராசவள்ளி | 250 | 400 | 250 | 200 | 250 |
| வெங்காயப்பூ | 350 | — | 400 | — | — |
| முள்ளங்கி | 140 | 100 | 100 | 40 | 120 |
| பொன்னாங்காணி | 40 | 40 | 40 | 30 | 40 |
| வல்லாரை | 15 | 50 | 20 | 30 | 30 |
| ஈரப்பலா | 60 | 120 | 60 | 160 | 60 |




# செல்வம் "சேர்த்த" செல்வம்



"முப்பந்தைந்து வருடங்கள் ஓடியதே தெரியவில்லை. இப்போதுதான் அரசு வேலைக்கு உத்தரவு வந்தாற்போல் இருக்கிறது. அடுத்த வாரம் ஓய்வு பெறப் போகிறேன்!"

இரவில் தூக்கம் பிடிக்காத போது தன் உத்தியோக வாழ்க்கையை அலசிப் பார்த்தான் செல்வம். வேலைக்கு உத்தரவு வந்தபோது "உன் பெயருக்கு ஏற்றாற்போல் நீ இனி செல்வம் தான்" என்றனர் சுற்றி இருந்தவர்கள். சிலர் அப்போதே அவன் மேல் பொறாமை கொள்ள ஆரம்பித்தனர். சரியான வேலை இன்றி தாய், தம்பிகள், தங்கைகள் என்று பெரும் குடும்பத்தை வைத்துத் தத்தளித்துக் கொண்டிருந்தவனுக்கு இப்படி ஒரு வாழ்க்கையா? அவர்கள் "எதிர்பார்த்த" வாழ்க்கை அவனுக்கு வருவதற்கு முன்பே அப்படி ஒரு பொறாமை!

ஆனால் அவன் வாழ்க்கை மற்றவர்கள் பொறாமைப்படும் படி இல்லை. காரணம் அவன் வேலையை வேலையாகச் செய்தான். வியாபாரமாக இல்லை. அவனுக்கு இலஞ்சம் கொடுக்க முயன்றவர்கள் தோல்வி அடைந்தனர். அவன் மேலதிகாரிகளுக்கும் உடன் பணி புரிபவர்களுக்கும் அவன் சங்கடமாக இருந்தான். அதனால் அடிக்கடி இடமாற்றம் செய்யப்பட்டான். ஆனால் செல்வம் அதைப் பொருட்படுத்தவில்லை.' அவன் செய்த வேலைக்குத்தான் மாதா மாதம் சம்பளம் வந்து கொண்டிருந்ததே!

வசதியான வாழ்க்கை வாழலாம் என்று ஆரம்பத்தில் கனவு கண்ட அவன் தம்பி,தங்கைகள் அவன் மனநிலையை உணர்ந்து அடங்கிப் போனார்கள். அவன் அம்மா கூட "பிழைக்கத் தெரியாதவனாக இருக்கிறாயே!" என்று பலமுறை அவனிடம் குறைபட்டுக் கொண்டாலும், "என் மகன் நேர்மையானவன்" என்று பெருமை கொண்டாள்.

தம்பி,தங்கைகளுக்குத் தன் கடமையை முடித்தபோது அவனுக்கு வயது முப்பத்தைந்து ஆகிவிட்டது. இடையில் அவன் தாய் மேற்கொண்ட திருமண முயற்சிகளை அவன் ஊக்குவிக்கவில்லை. முப்பத்தாறு வயதில் வள்ளியைத் திருமணம் செய்து கொண்டான். வறுமையான குடும்பத்திலிருந்து வந்த வள்ளி, அரசு ஊழியரை மணம் செய்து கொண்டு வசதியாக வாழலாம் என்ற கனவுடன் வந்தாள். ஆரம்பத்தில் வாழ்க்கை அவளுக்கு ஏமாற்றம் அளித்தாலும், நல்ல கணவன் கிடைத்தானே என்று ஆறுதல் அடைந்தாள்.

செல்வத்துக்கு மலைப்பாக இருந்தது. சுமாரான வருமானத்தை வைத்துக்கொண்டு எத்தனை செய்து விட்டேன்! தம்பி, தங்கைகள் படிப்பு, திருமணம், மாமன் என்ற முறையில் தங்கைகளின் குழந்தைகளுக்கும் பெரியப்பா என்ற "அந்தஸ்தில்" தம்பி குழந்தைகளுக்கும் செய்த செலவுகள், அம்மாவின் மருத்துவச் செலவு, தனது ஒரே மகளையும் படிக்க வைத்துத் திருமணம் செய்வித்தது. உரிமையுடன் உதவி கேட்ட உறவினர்களுக்கும், "இவனிடம் கேட்கலாமா?" என்று தயங்கிய உறவினர்களுக்கும், நண்பர்களுக்கும் தன் சக்திக்கு மீறிச் செய்த உதவிகள்!

"சொந்த வீடு இல்லை, சேமிப்பு என்று பெரிதாக எதுவும் இல்லை. நான், மனைவி, தொண்ணூறு வயது அம்மா ஆகிய மூவருக்கும் சிறிதாக ஒரு வீட்டை வாடகைக்கு எடுத்துக்கொண்டு வாழ்க்கையை ஓட்ட முடியாதா?"

சாப்பிட உட்கார்ந்தபோது வள்ளி கேட்டாள். "ஏங்க அடுத்த வாரத்திலேயிருந்து நீங்க ரிட்டையர் ஆகப் போறீங்க இல்லே?"

"இனிமேல்வருமானம்போதாதே, என்ன செய்யப் போறீங்க? வேறு எங்கையாவது வேலைக்குப் போகப் போறீங்களா? வேலைக்கு யாரிடமாவது சொல்லி வைச்சிருக்கீங்களா?" என்று கேட்கப் போகிறாளா?

"ஆமாம். அதுக்கு என்ன?" என்றான். அவள் பதிலை ஊகித்ததில் குரலில் கொஞ்சம் எரிச்சல் வெளிப்பட்டது.

"இத்தனை வருஷமா அலுவலகம், குடும்பம்னு பறந்துக்கிட்டிருந்தீங்க. ஒருவேளை கூட நிம்மதியா சாப்பிட்டதில்லை. இனிமேலாவது பொறுமையா, நிம்மதியா சாப்பாட்டை ரசிச்சு சாப்பிடுங்க!"

செல்வத்தின் கண்களில் நீர் தளும்பியது. இன்னும் என்ன சந்தோசம் வேண்டும் வாழ்க்கையில்?

குறள் 44:

பழியஞ்சிப் பாத்தூண் உடைத்தாயின் வாழ்க்கை
வழியெஞ்சல்எஞ்ஞான்றும்இல்.

பொருள்:

பொருள் சேர்க்கும்போது பழிக்கு அஞ்சிச் சேர்த்து, பகிர்ந்து உண்பதை வழியாகக் கொண்டால், அவ்வாழ்க்கையின் ஒழுங்கு எப்போதும் குறைவதில்லை.

## அன்பு தாயின் தாலாட்டு



ஆராரோ ஆராரோ - கண்ணே நீ
ஆராரோ ஆரிரரோ!
ஆராடித்தார் நீ அழுதாய் கண்ணே உனை
அடித்தாரைச் சொல்லி அழு!


மாமி அடித்தாளோ - உன்னை
மல்லியப்பூச் செண்டாலே!
மாமன் அடித்தானோ! - உன்னை
மாலையிடும் கையாலே!

அக்கா அடித்தாளோ - உன்னை
அலரிப்பூச் செண்டாலே!
அடித்தாரைச் சொல்லியழு - அவர்க்கு
ஆக்கினைகள் செய்திடுவேன்!

தொட்டாரைச் சொல்லியழு - அவர்க்குத்
தோள்விலங்கு பூட்டிடுவேன்!

(இத்தாலாட்டின் முடிவில் தூங்காத குழந்தையொன்று தாய்க்குப் பதில் கொடுக்கிறது, கற்பனைதான்.)

யாரும் அடிக்கவில்லை! - என்னை
ஐவிரலும் தீண்டவில்லை!
பசிக்கல்லவோ நான் அழுதேன்! - என்றன்
பாசமுள்ள தாயாரே!



மே.லக்ஷிகா,
தரம் 01, SOS சிறுவர் கிராமம்,
யாழ்.இந்து மகளிர் ஆரம்ப பாடசாலை, சுவாதி இல்லம்.

## பொது அறிவுத் துணுக்குகள்

- கடுமையான வெப்பத்தில் இருந்து பாதுகாத்துக்கொள்ள நீர் யானையின் தோலில் ஒருவித இளஞ்சிவப்பு நிறத்தாலான திரவம் சுரந்து, குளிர்ச்சியை கொடுக்கிறது.
- உண்ணி எனப்படும் தெள்ளுப்பூச்சி, ஓராண்டு வரையிலும் கூட பனிக்கட்டியினுள் உயிருடன் இருந்து, ஐஸ் கரைந்தபின் வெளிவரும் ஆற்றல் கொண்டது.
- உலகில் மிக நீண்ட நாள் வாழும் மிருகம் முதலை. இவை 300 ஆண்டுகள் வரை வாழுகின்றன.
- நத்தைகளால் தொடர்ந்து மூன்று ஆண்டுகள் வரை நித்திரை கொள்ள முடியும்.
- மனிதனுடைய காதுகளால் 130 டெசிபல் அளவுதான் பொறுத்துக்கொள்ள முடியும்.

## பழமொழிகள்

- எருமை வாங்கும் முன்னே நெய் விலை கூறாதே.
- சுண்டைக்காய் கால்பணம், சுமை கூலி முக்கால்பணம்.
- செடியிலே வணங்காதது மரத்திலே வணங்கும்?
- நரிக்கு கொண்டாட்டம் நண்டுக்குத் திண்டாட்டம்.
- அடி மேல் அடி அடித்தால் அம்மியும் நகரும்.
- கூழுக்கு மாங்காய் கொண்டாட்டம், குரங்குக்குத் தேங்காய் கொண்டாட்டம்.
- சித்திரமும் கைப் பழக்கம் செந்தமிழும் நாப்பழக்கம்.

பயம் ஒரு மோசமான உணர்ச்சி. அறிவின் துணையால் அதை வெல்லுங்கள்.

– ஜே.ஸ்டீபன்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

# யாழில் தொடரும் அடைமழையால் 13 வீடுகள் பகுதியளவில் சேதம்!

## 43 பேர் இடம்பெயர்வு

(யாழ்ப்பாணம்)

யாழில் தொடரும் அடை மழையால் 13 குடும்பங்க ளைச் சேர்ந்த 43பேர் பாதிக் கப்பட்டனர்.

இத்தகவலை யாழ். மாவ ட்ட அனர்த்த முகாமைத்து வப் பிரிவு தெரிவித்தது.

குடாநாட்டில் கடந்த 3 நாட்களாக மழையுடன் கூடிய காலநிலை நிலவுகின்றது.

இதன் காரணமாக வேல ணைப் பிரதேச செயலாளர் பிரிவின் கீழுள்ள புங்குடுதீவு கண்ணகி அம்மன் ஆலய த்தை அண்டிய கடற்கரை யோரத்தில் அமைந்திருந்த 7 வாடிகள் சேதமடை ந்ததோடு, 6 படகுகளும் வலைகளும் சேதமடைந் தன.

அத்துடன் மருதங்கேணி பிரதேச செயலாளர் பிரிவில் 3 வீடுகள் பகுதியளவில் சேதமடைந்தமையால் 3 குடும்பங்களைச் சேர்ந்த 9 அங்கத்தவர்களும் சண்டி லிப்பாய் பிரதேச செயலாளர் பிரிவில் 6 வீடுகள் பகுதி யளவில் சேதமடைந்தமை யால் 6 குடும்பங்களைச் சேர்ந்த 20பேரும், நெடு ந்தீவு பிரதேச செயலாளர் பிரிவில் 4 வீடுகள் பகுதிய ளவில் சேதமடைந்த நிலை யில் 4 குடும்பங்களைச் சேர்ந்த 14 பேரும் மொத் தம் 13 வீடுகள் சேதமடைந்த காரணத்தால், 13 குடும்ப ங்களைச் சேர்ந்த 43 பேர் இடம்பெயர்ந்துள்ளதாக மாவ ட்ட அனர்த்த முகாமைத்து வப் பிரிவு தகவல்கள் தெரி விக்கின்றன. (இ-7)

# பாராளுமன்ற அமர்வு ஒத்திவைப்பு; அரசாங்கம் மீது பாரிய சந்தேகம்

## மரிக்கார் எம்.பி. வெளிப்படுத்தல்

(கொழும்பு)

உரிய காரணங்கள் ஏது மின்றி பாராளுமன்றத்தின் அமர்வை ஜனாதிபதி ஒத்தி வைத்தமையானது இடைக் கால அரசாங்கத்தின் மீது பாரிய சந்தேகத்தைத் தோற் றுவித்துள்ளதாக பாராளும ன்ற உறுப்பினர் எஸ்.எம். மரிக்கார் தெரிவித்தார்.

மக்களுக்குச் சேவையாற் றும் விடயங்களுக்கு பாராளு மன்றத்தினுள் இடைக்கால அரசாங்கத்திற்கு முழுமையான ஒத்துழைப்பு வழங்கத் தயார் எனவும் அவர் தெரிவித்தார்.

எதிர்க்கட்சித் தலைவர் விவகாரம் குறித்து தொடர் பேச்சுவார்த்தைகளை முன் னெடுக்க வேண்டிய அவசி யம் கிடையாது என்றும் எழுந்துள்ள சவால்கள் குறி த்து கட்சியின் தலைவரும் சிரேஷ்ட உறுப்பினர்களும் கவனம் செலுத்த வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள ஐக்கிய தேசியக் கட்சியின் தேர்தல் செயற்பாடுகள் ஒழுங்குபடுத் தல் அலுவலகத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை இடம் பெற்ற ஊடகவியலாளர் சந் திப்பில் கலந்து கொண்டு கரு த்துரைக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில், "ஜனாதி பதி கோட்டாபய ராஜபக்ஷ பாராளுமன்றத்தின் அமர்வு களை நிறைவுக்கு கொண்டு வந்து பாராளுமன்ற அம ர்வை அடுத்த மாதம் முதல் வாரத்திற்கு ஒத்திவைத்து வர்த்தமானி வெளியிட்ட மைக்கு எவ்விதமான உரிய காரணங்களும் கிடையாது.

ஜனாதிபதித் தேர்தல் நிறைவு பெற்றதைத் தொடர் ந்து ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்ட கோட்டாபய ராஜ பக்ஷ பாராளுமன்றத்தில் பார ம்பரிய கோட்பாடுகளுக்கு இண ங்க அக்ராசன உரை உள்ளி ட்ட இதர விடயதானங்களை முன்னெடுக்க வேண்டும்.

ஆனால் அவர் மாறுபட்ட விதத்தில் செயற்பட்டுள்ளமை பாரிய சந்தேகத்தைத் தோற் றுவித்துள்ளது" என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# வடக்கில் ஆளுநர், பிரதம செயலர் இல்லை முடங்கும் நிர்வாகச் செயற்பாடுகள்

(யாழ்ப்பாணம்)

வடமாகாணத்தில் ஆளு நர், பிரதம செயலர் இல்லாத காரணத்தால் நிர்வாக விடை யங்களை வினைத்திறனா கச் செயற்படுத்த முடியாத நிலை காணப்படுவதாக தெரி விக்கப்படுகிறது.

புதிய அரசாங்கத்தில் வடக்கு, கிழக்கு தவிர்ந்த ஏனைய மாகாணங்களுக்கு ஆளுநர்களிநியமிக்கப்பட்டனர்.

வடக்கு மாகாணத்தில் உள்ள அமைச்சுக்கள், திணை க்களங்களில் ஏற்படும் நிர் வாக விடயங்களை உரிய முறையில் நடைமுறைப் படுத்துவதற்கு, ஆளுநரின் கையொப்பம் அவசியமாக உள்ள நிலையில் ஆளுந ரின் நியமனம் தள்ளிப் போவது நிர்வாகச் சிக்கல் களை ஏற்படுத்துகிறது.

அது மட்டுமல்லாது வட க்கு மாகாண அமைச்சு க்கள், திணைக்களங்களால் முன்னெடுக்கப்பட்ட வேலைத் திட்டங்களுக்கான கொடுக் கல் வாங்கல்களை மேற் கொள்வதற்கும் நிர்வாக உத்தரவுகளை கண்காணிப் பதற்கும் செயற்படுத்துவத ற்கும் வடக்கு மாகாணப் பிர தம செயலாளர் இலங்கை யில் இல்லாது வெளிநாடு சென்றுள்ளமையால் வினைத் திறனான செயற்பாட்டை முன்னெடுக்க முடியாதுள்ள தாக தெரிவிக்கப்படுகிறது.

ஆகவே குறித்த விடயம் தொடர்பில் உரிய தரப்பினர் காலக்கிரமத்தில் நடவடிக்கை எடுப்பது வடக்கின் நிர்வாகச் செயற்பாடுகளை மீள எழுச்சி பெற வைக்கும் என நம்பப் படுகிறது. (ம-3,10)

## ஈழத் தமிழர்களை இந்தியா காப்பாற்றுமா?

இலங்கையின் ஜனாதிபதியாக கோட்டாபய ராஜபக்ஷ பதவியேற்ற கையோடு இலங் கைக்கு வருகை தந்த இந்திய வெளியுறவு அமைச்சர் ஜெய்சங்கர் ஜனாதிபதியைச் சந்தித் துக் கலந்துரையாடினார்.

இதனைத் தொடர்ந்து ஜனாதிபதி கோட்டா பய ராஜபக்ஷ இந்தியாவுக்குச் சென்று பிரதமர் நரேந்திர மோடியைச் சந்தித்தார்.

இச்சந்திப்பின்போது ஈழத் தமிழர்களின் பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட வேண்டும் எனவும் 13ஆவது திருத்தச்சட்டத்தை அமுல் படுத்துவதன் மூலம் இனப்பிரச்சினைக்கான தீர்வை எட்ட முடியும் என்றும் பிரதமர் மோடி எடுத்துரைத்திருந்தார்.

இதன்போது அமைதிகாத்த ஜனாதிபதி கோட்டாபய; இந்துப் பத்திரிகைக்கு அளித்த செவ்வியில், 13ஆவது திருத்தச் சட்டமூலத்தை முழுமையாக அமுல்படுத்த முடியாது என்றும் குறிப்பாக காணி, பொலிஸ் அதிகாரத்தை வழங்க முடியாது என்றும் கூறியிருந்தார்.

காணி, பொலிஸ் அதிகாரத்தை வழங்க முடியாமைக்கு; சிங்கள மக்களின் எதிர்ப்பே காரணம் என்றும் கோட்டாபய ராஜபக்ஷ சுட்டிக் காட்டியிருந்தார்.

அதாவது காணி, பொலிஸ் அதிகாரத்தை தமிழ் மக்களுக்கு வழங்குவதை சிங்கள மக் கள் எதிர்ப்பார்கள் என்பது ஜனாதிபதி கோட்டா பய முன்வைக்கும் காரணம்.

ஆக, இலங்கையில் தமிழர்களின் உரிமை யும் வாழ்வும் சிங்கள மக்களின் விருப்பத்தைப் பொறுத்தது என்றும் தமிழ் மக்களுக்கு எதைக் கொடுப்பது எதைக் கொடுக்கக்கூடாது என் பதை சிங்கள மக்களே தீர்மானிப்பர் என்பதும் வெளிப்படையாகச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

எனவே இலங்கையில் தமிழ் மக்களின் மனித உரிமைகள் தொடர்பிலோ அவர்களின் இன சுதந்திரம் தொடர்பிலோ எவரும் கதைக்க முடியாது.

மாறாக சிங்கள மக்கள் விரும்பினால் தமிழர்களுக்கு கொடுப்பார்கள். இல்லையேல் இருப்பதோடு தமிழ் மக்கள் தங்கள் காலத் தைக் கழிக்க வேண்டியதுதான் என்ற விடயம் மிகத் தெளிவாகச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இது விடயத்தில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை பாராட்ட வேண்டும்.

ஏனெனில் அங்கொன்றும் இங்கொன்று மாக கதைவிடாமல், பிரதமர் மோடி சொல்வது போல அல்லது இந்தியா நினைப்பது போல எல்லாம் செய்ய முடியாது.

சிங்கள மக்கள் விரும்புவதை மட்டுமே நாம் செய்ய முடியும். சிங்கள மக்கள் விரும்ப வில்லை என்றால் அதை நாங்கள் ஒருபோதும் செய்ய மாட்டோம் என்ற முடிவை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ இந்தியாவில் வைத்து மிகத் தெளிவாகக் கூறியுள்ளார்

இனி இது தொடர்பில் பிரதமர் மோடியின் நிலைப்பாடு என்ன என்பதுதான் நம் கேள்வி.

இந்தியாவை நம்புங்கள். இந்தியா உங் களைக் காப்பாற்றும் என்று தான் அளித்த வாக்குறுதியை பிரதமர் மோடி நிறைவேற்று வாரா? பொறுத்திருந்து பார்க்கலாம்.

பெண்களுக்கெதிரான வன்முறை ஒழிப்பு வாரம்

16 2019

யாழ்.சமூக செயற்பாட்டு மையம்
(கார்த்திகை 25 முதல் மார்கழி 10 வரை)
மாது அடிமை கொள்வதில் மாற்றம் படைப்போம். மாவ ட்டம் எங்கும் மாதர்கள் வலுப்பெற இளைஞர்களாய் பலம் சேர்ப்போம்.

JSAC

## வாழ்வைப் பொன்னாக்கும் வைர வரிகள்

கடவுள் மனிதர்களிடம் இன்னும் நம்பிக்கையை இழக்கவில்லை. ஒவ்வொரு குழந்தையின் பிறப் பும் இதைத்தான் உணர்த்துகிறது.

-ரவீந்திரநாத் தாகூர்

## ஆன்மீகச் சிந்தனைகள்

### நல்ல நூல்களைப் படியுங்கள்

❖ குடும்பத்தினர் ஒன்றுகூடி காலையிலும், மாலை யிலும் கடவுளை வழிபட வேண்டியது அவசியம்.

❖ பிழைகளில் எல்லாம் தலையாய பிழை, அறிவு தரும் நூல்களைப் படிக்காமல் காலத்தை வீணாக்குவதே.

❖ ஒருவன் எவ்வளவு பெரிய அறிஞனாக இருந்தா லும், பக்தி இல்லாவிட்டால், விலங்கு நிலைக்கு தாழ்வான்.

❖ கடவுளை எஜமானராகப் பாவித்து, முகம் சுளிக்காமல் சேவை செய்வதில் ராமபக்தனான அனு மனை, உதாரணமாக எடுத்துக் கொள்ள வேண்டும்.

❖ உண்மையை யாரும் மறைப்பது கூடாது. உண்மை அளவில்லாத நன்மையைத் தரும்.

❖ எந்த பாவத்தைச் செய்தாலும் மனிதனுக்கு மன்னிப்பு உண்டு. ஆனால், நன்றி மறந்த பாவத்தை தெய்வம் கூட மன்னிப்பதில்லை.

❖ வியாதி தீர மருந்து உண்ணும்போது பத்தியம் இருப்பர். அதுபோல, தெய்வீக வாழ்விற்கு ஒழுக்கம் என்னும் பத்தியம் அவசியம்.

❖ வயலில் இட்டவிதை பலமடங்கு பெருகுவது போல, மனிதன் செய்த நல்வினை, தீவினையின் பயன்கள் ஆயிரம் ஆயிரமாகப் பெருகிவரும்.

# அடுத்தாண்டு ஐ.பி.எல்.ஏலம் மொத்த வீரர் விபரம் வெளியீடு



இந்தியாவில் அடுத்தாண்டு நடைபெறவுள்ள ஐ.பி.எல். தொடருக்கான ஏலத்தில் எத்தனை வீரர்கள் பங்கேற்கின்றனர், எந்தெந்த நாடுகளில் இருந்து வீரர்கள் ஏலத்தில் பங்கேற்கிறார்கள் என்ற பட்டியல் வெளியாகியுள்ளது.

இந்தியாவில் ஒவ்வொரு ஆண்டும் நடைபெற்று வரும் உள்ளூர் தொடரான ஐ.பி.எல். தொடர், அடுத்தாண்டு நடைபெறவுள்ளது. இதற்கான ஐ.பி.எல்.ஏலம் வரும் 19 ஆம் திகதி கொல்கத்தாவில் நடைபெறுகிறது.

பொதுவாக ஐ.பி.எல். பெங்களூரில் நடைபெறும். அண்மையில் பி.சி.சி.ஐ. அமைப்பின் தலைவராக கங்குலி பதவியேற்றுள்ள நிலையில், ஏலம் கொல்கத்தாவிற்கு மாற்றப்பட்டுள்ளது. இதற்கான ஏலம் எதிர்வரும் 19 ஆம் திகதி நடைபெறுகிறது

ஐ.பி.எல். 2020 இற்காக ஒவ்வொரு அணிக்கும் 85 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. கடந்த ஏலத்தில் மீதமுள்ள தொகையுடன் கூடுதலாக 3 கோடி ரூபாய் ஒவ்வொரு அணி உரிமையாளரின் இருப்பில் இருக்கும்.

டில்லி அணியிடம் அதிகபட்சமாக, 8.2 கோடி ரூபாய் கையிருப்பில் உள்ளது. அடுத்த இடத்தில் ராஜஸ்தான் ர்ரயல்ஸ் அணி 7.15 கோடி ரூபாய் வைத்துள்ளது.

கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணியிடம் 6.05 கோடி ரூபாயும் மும்பை இந்தியன்ஸ் அணி 3.55 கோடி ரூபாயும் கையிருப்பு உள்ளது. சென்னை சுப்பர் கிங்ஸ் அணியிடம்3.2 கோடி ரூபாய் உள்ளது. பெங்களூர் அணியிடம் 1.80 கோடி ரூபாய், சன்ரைசர்ஸ் ஐதராபாத்திடம் 5.30 கோடி கைவசம் உள்ளது.

இந்த ஆண்டு நடைபெறும் ஏலம்தான் ஏற்கனவே இருக்கும் வீரர்களுக்கான கடைசி ஏலம். 2021 மெகா ஏலத்தில் அனைத்து அணிகளும் கலைக்கப்பட்டு புதிதாக ஏலத்தில் வீரர்கள் தெரிவு செய்யப்படுவார்கள்.

இந்த முறை ஏலத்துக்கு மொத்தம் 971 கிரிக்கெட் வீரர்கள் தங்களைப் பதிவு செய்துள்ளார்கள். இதில் 713 இந்திய வீரர்கள், வெளிநாடுகளில் இருந்து 258 வீரர்களும் தங்களைப் பதிவு செய்துள்ளார்கள்.

ஆப்கானிஸ்தான் (19 வீரர்கள்), அவுஸ்திரேலியா (55 வீரர்கள்), பங்களாதேஷ் (6 வீரர்கள்), இங்கிலாந்து (22 வீரர்கள்), நெதர்லாந்து (1 வீரர்), நியூசிலாந்து (24 வீரர்கள்), தென்னாபிரிக்கா (54 வீரர்கள்), இலங்கை (39 வீரர்கள்), அமெரிக்கா (1 வீரர்), மேற்கிந்தியத்தீவு (34 வீரர்கள்), சிம்பாவே (3 வீரர்கள்) உள்ளனர். (க)

# தெற்காசிய விளையாட்டு போட்டியில் இலங்கைக்கு முதலாவது தங்கம்!




13 ஆவது தெற்காசிய விளையாட்டுப் போட்டிகளில் இலங்கைக்கான முதலாவது தங்கப் பதக்கத்தினை ரனுக பிரபாத் பெற்றுக் கொடுத்துள்ளார்.

நேபாளத்தின் காத்மண்டு நகரில் நடைபெற்று வரும் தெற்காசிய விளையாட்டுப் போட்டியில் 17 தொடக்கம் 23 வயதுக்குட்பட்ட ஆண்களுக்கான டைகொண்டோ போட்டியிலேயே அவர் தங்கப்பதக்கத்தினைப் பெற்றுக் கொண்டார்.


அதேபோல, மகளிர் கராத்தே போட்டியில் ஹன்சிகா ஹேஷானி ஹெட்டியாராய்ச்சி வெண்கலப் பதக்கத்தைப் பெற்றுக்கொண்டார். (க)

அன்பு வாசகர்களே!

உங்கள் பிரதேச விளையாட்டுச் செய்திகளை
Valampurisp@gmail.com அல்லது 076 636 3378 என்னும்
Viber இலக்கத்துக்கு அனுப்பி வையுங்கள்.

உங்களை உலகறியச் செய்ய நாம் தயார்

# ஓட்டம் ஏதும் விட்டுக் கொடுக்காமல் 6 விக்கெட்டுக்களை வீழ்த்திய வீராங்கனை



மாலைதீவுக்கு எதிராக நடைபெற்ற இருபது ஓவர் போட்டியில் நேபாள அணியை சேர்ந்த ஒரு வீராங்கனை ஓட்டம் ஏதும் கொடுக்காமல் 6 விக்கெட்டுகளை வீழ்த்தி சாதனை படைத்துள்ளார். போகாராவில் நடைபெற்ற தெற்காசிய விளையாட்டுப் போட்டிகளின் 20 ஓவர் போட்டியில், நேபாளம் மற்றும் மாலைதீவு பெண்கள் அணிகள் மோதின. இரண்டுமே சிறிய அணிகள் என்பதால் பெரியளவிற்கு முக்கியத்துவம் கொடுக்கப்படவில்லை. ஆனால் யாரும் எதிர்பார்த்திராத அளவிற்கு, இளம் வீராங்கனை ஒருவர் சாதனை படைத்துள்ளார்.

போட்டியில் முதலில் ஆடிய மாலைதீவுகள் பெண்கள் அணி 11 ஓவர்களில் வெறும் 16 ஓட்டங்கள் எடுத்து அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்தது. சிறப்பாக பந்துவீசிய நேபாள வீராங்கனை அஞ்சலி சந்த் ஓட்டம் ஏதும் விட்டு கொடுக்காமல் 2.1 ஓவர்கள் பந்துவீசி 6 விக்கெட்டுக்களை அள்ளினார். இதன்மூலம் மாலைதீவைச் சேர்ந்த மாஸ் எலிசா என்பவரின் சாதனை முறியடிக்கப்பட்டுள்ளது. இந்த ஆண்டின் தொடக்கத்தில் சீனா பெண்களுக்கு எதிராக, சிறப்பாக பந்து வீசிய எலிசா 3 ஓட்டங்களை விட்டுக் கொடுத்து 6 விக்கெட்டுக்களை கைப்பற்றியிருந்தார்.


ஆண்கள் இருபது-20 கிரிக்கெட்டில் சிறந்த பந்துவீச்சு வீரர்களுக்கான சாதனையை இந்தியாவின் தீபக் சாஹர் பெற்றுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

சென்னை சுப்பர் கிங்ஸ் அணியின் வேகப்பந்து வீச்சாளர் நவம்பர் 10 ஆம் திகதி நாக்பூரில் பங்களாதேஷ் அணிக்கெதிராக 3.2 ஓவர்களில் 7 ஓட்டங்கள் கொடுத்து 6 விக்கெட்க்களை வீழ்த்தியிருந்தார்.

அவருக்கு முன்பாக இலங்கையின் சுழற்பந்து வீச்சாளர் அஜந்தா மெண்டிஸ் 8 ஓட்டங்கள் கொடுத்து 6 விக்கெட்டுக்களை வீழ்த்தி சாதனை படைத்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (க)

வலம்புரி SPORTS விளையாட்டுச் செய்திகள்

# நடிகையைக் கரம் பிடித்தார் கிரிக்கெட் வீரர் மனிஷ் பாண்டே



பிரபல இந்திய கிரிக்கெட் வீரர் மனிஷ் பாண்டே, தென்னிந்திய தமிழ் படங்களின் மூலம் பிரபலமான நடிகை அஷ்ரிதா ஷெட்டியை நேற்றுத் திருமணம் செய்துள்ளார். துளு படத்தின் மூலம் அறிமுகமானாலும் உதயம் NH4, ஒரு கன்னியும் மூனு களவாணிகளும் இந்திரஜித் உள்ளிட்ட தமிழ் படங்களின் மூலம் சினிமாவில் பிரபலமானவர் நடிகை அஷ்ரிதா ஷெட்டி(26). இவர் தற்போது "நான் தான் சிவா" என்கிற படத்தில் நடித்து வருகிறார்.

இவரும் இந்திய கிரிக்கெட் வீரரான மனிஷ் பாண்டேவும் நீண்ட நாட்களாகவே காதலித்து வருவதாக பல்வேறு யூகங்கள் இருந்தபோதிலும், ஒருமுறை கூட இருவரும் பொதுவெளியில் தோன்றாததால், உறுதி செய்ய முடியாத செய்தியாகவே இருந்து வந்தது. இந்த நிலையில் இருவருக்கும் தற்போது தென்னிந்திய முறைப்படி திருமணம் நடைபெற்றுள்ளது. (க)

# அமெரிக்க விசா மறுப்பு சிக்கலில் இலங்கை அணி

மேற்கிந்தியத்தீவுகளுக்கு சுற்றுப்பயணம் செய்ய இலங்கை 19 வயதுக்குட்பட்ட கிரிக்கெட் அணியில் தேர்ந்தெடுக்கப்பட்ட ஏழு வீரர்களின் விசாக்களை மறுபரிசீலனை செய்யுமாறு அமெரிக்க தூதரகத்திற்கு வேண்டுகோள் விடுத்துள்ளதாக இலங்கை கிரிக்கெட் அணி தெரிவித்துள்ளது.

ஏழு வீரர்களின் விசாக்கள் அமெரிக்க தூதரகம் நிராகரித்ததால் மேற்கிந்தியத்தீவுகளுக்கான சுற்றுப்பயணம் நெருக்கடியில் உள்ளது.

இலங்கை 19 வயதுக்குட்பட்ட அணி நேற்று முன்தினம் அமெரிக்கா வழியாக மேற்கிந்தியத்தீவுகளுக்கு புறப்படவிருந்தது. ஆனால் விசா பிரச்சினை காரணமாக புறப்படுவது ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

விசா நிராகரிக்கப்பட்டது தொடர்பில் பதிலுக்காக காத்திருக்கும் ஏழு வீரர்கள் குறித்து நாங்கள் அமெரிக்க தூதரகத்திற்கு முறையீடு செய்துள்ளோம் என்று இலங்கை கிரிக்கெட் செயலாளர் மோகன் டி சில்வா தெரிவித்தார்.

நாங்கள் திங்கள் வரை காத்திருப்போம், எந்தவொரு நேர்மறையான பதிலும் இல்லாவிட்டால் நாங்கள் சுற்றுப்பயணத்திலிருந்து விலக வேண்டும்.

19 வயதிற்குட்பட்ட கிரிக்கெட் வீரர்களுக்கு ஜனவரி மாதம் தென்னாபிரிக்காவில் நடைபெறும் 19 வயதுக்குட்பட்ட உலகக் கோப்பைக்கு அவர்களை தயார்படுத்த வலுவான எதிரணியுடன் விளையாட மாற்று ஏற்பாடுகளை செய்ய வேண்டும் என்று அவர் கூறினார்

தொடர்ச்சியான போட்டிகளில் இலங்கை வளர்ந்து வரும் அணிக்கு எதிராக 19 வயதுக்குட்பட்ட அணி களமிறங்கப்படும் என்றும் டி சில்வா கூறினார். (க)

## அல்வாய் வடக்…

தெரிவித்தனர்.

நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை இரவு 8.00 மணியளவில் அல்வாய் வடக்கு, நாவலடி பகுதியில் இரு பகுதியினருக்கு இடையில் கோஷ்டி மோதல் சம்பவம் ஒன்று இடம் பெற்றுள்ளது.

இதனைத் தொடர்ந்து இரு பகுதியினரும் ஒருவருக்கொருவர் மோதிக் கொண்டதாகவும் இதில் கத்திக்குத்துக்கு இலக்கான அதே பகுதியைச் சேர்ந்த ரஞ்சன் சுகந்தன் (வயது - 25), சின்னத்தம்பி கலியுகன் (வயது - 25), துரைசிங்கம் துசேந்தன் ஆகிய மூவரும் படுகாயமடைந்த நிலையில் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இச்சம்பவம் தொடர்பில் பருத்தித்துறை பொலிசார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (ம-3,60)

## இரணைமடுவின்…

இக்குளத்துக்கான நீர்வரத்து தொடர்ச்சியாக வருவதனால் குளத்தின் நீர்மட்டம் அதிகரிக்கக்கூடிய வாய்ப்புக்கள் உள்ளது. (ம-3,10)

## 297 கிலோ பீடி…

மன்னார் இலுப்பைக்கடவாய் - சிப்பியாறு கடற்கரை பகுதியில் நேற்று முன்தினம் மேற்கொள்ளப்பட்ட சோதனையின்போது 8 பொதிகளில் பொதிசெய்யப்பட்ட நிலையில் குறித்த பீடி சுற்றும் இலைகள் கைப்பற்றப்பட்டுள்ளன.

இந்த நிலையில் கைப்பற்றப்பட்ட பீடி சுற்றும் இலைகள், மேலதிக விசாரணைக்காக யாழ்ப்பாணம் சுங்க திணைக்கள காரியாலயத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

இந்த வருடத்தின் இதுவரையான காலப் பகுதியில் கடற்படையினர் மேற்கொண்ட சோதனை நடவடிக்கையில் 51 தொன் பீடி சுற்றும் இலைகள் மீட்கப்பட்டுள்ளதாக கடற்படை ஊடகப் பேச்சாளர் தெரிவித்தார். (ம-3)

## நாடு முழுவதும்…

வரையான மழை வீழ்ச்சி பதிவாகும் என எதிர்வு கூறப்பட்டுள்ளது.

காற்றின் வேகம் திடீரென அதிகரிப்பதால் மீன்பிடிப்பதற்காக கடலுக்குச் செல்லும் மீனவர்கள் எச்சரிக்கையாக இருக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளதாக மீன்பிடித் திணைக்களம் தெரிவித்துள்ளது. (ம-3)

## அச்சுறுத்தலுக்…

பெண் பணியாளர் ஒருவர், அடையாளம் தெரியாத நபர்களால் கடத்தி செல் லப்பட்டு அச்சுறுத்தப் பட்டுள்ளார் என்று சுவிஸ் வெளிவிவகார அமைச்சு தெரிவித்திருந்தது.

மிக மோசமான - ஏற்றுக் கொள்ள முடியாத தாக்குதல் என்று இதனை சுவிஸ் வெளிவிவகார அமைச்சு குறிப்பிட்டது.

இதுதொடர்பில் குற்ற விசாரணைப் பிரிவின் விசாரணைக்கு இலங்கை வெளிவிவகார அமைச்சர் உத்தரவிட்டார்.

எனினும் பாதிக்கப்பட்டதாகத் தெரிவிக்கும் பெண் உத்தியோகத்தர் இன்று வரை குற்ற விசாரணைப் பிரிவுக்கு வாக்குமூலம் வழங்கவில்லை.

சுவிட்சர்லாந்து தூதரகத்தில் பணியாற்றும் இலங்கைப் பெண் பணியாளர் தாக்கப்பட்டதாகக் கூறப்படும் சம்பவத்தின் தொடர் நிகழ்வுகள் மற்றும் காலவரிசை கூறப்படும் பாதிக்கப்பட்டவர் அந்த திகதியில் மேற்கொண்ட நடமாட்டங்களுடன் ஒத்திருக்கவில்லை என்று குற்ற விசாரணைத் திணைக்களத்தின் விசாரணைகளில் அறிய கிடைத்துள்ளது என்று வெளிவிவகார அமைச்சு அறிவித்திருந்தது.

இந்த நிலையில் பாதிக்கப்பட்ட பெண் உத்தியோகத்தரை சுவிட்சர்லாந்துக்கு அனுப்புவதற்கு அந்த நாட்டுத் தூதரகம் நடவடிக்கை எடுத்தது.

அதனைத் தடுக்கும் வகையில் அந்தப் பெண் உத்தியோகத்தர் நாட்டைவிட்டு வெளியேற தடை கோரும் மனுவை கொழும்பு பிரதான நீதவான் நீதிமன்றில் குற்ற விசாரணைப் பிரிவினர் நேற்று முன்வைத்தனர்.

அதனை ஆராய்ந்த நீதவான், சம்பந்தப்பட்ட பெண்ணை வரும் 9ஆம் திகதி வரை நாட்டைவிட்டு வெளியேறத் தடை விதித்து உத்தரவிட்டார். (ம-3)

## பொதுமக்கள்…

முறையிடலாமென அறிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கான அலுவலகம் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

பொதுஜன தொடர்புகள் பிரிவு பிரதமர் மகிந்த ராஜபக்ஷ தலைமையில் நேற்று முற்பகல் திறந்து வைக்கப்பட்டது.

இதன்போது கருத்து தெரிவித்த மகிந்த ராஜபக்ஷ, பொதுமக்களால் முன்வைக்கப்படும் அவர்களின் பிரச்சினைகள் குறித்த அமைச்சுகளுக்கு இந்த பிரிவின் ஊடாக அனுப்பி வைக்கப்படும்.

அதனைத் தொடர்ந்து குறித்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதா என்பது தொடர்பில் இந்த பிரிவால் கண்காணிக்கப்படும் எனவும் பிரதமர் தெரிவித்தார். (ம -3)

## மன்னாரில்…

வாய்க்கிழமை கைது செய்துள்ளது.

மன்னார் சிலாவத்துறை கடற்கரை பகுதியில் நடத்தப்பட்ட சோதனையின்போது சட்டவிரோதமாக பிடிக்கப்பட்ட கடல்அட்டைகளுடன் 6 நபர்கள் கடற்படையால் கைது செய்யப்பட்டனர்.

சிலாவத்துறையில் உள்ள கடற்கரை பகுதியில் மேற்கொள்ளப்பட்ட சோதனையின்போது சந்தேகத்திற்கிடமான படகு பரி சோதிக்கப்பட்டது.

இதன்போது 977 கடல் அட்டைகள் கண்டுபிடிக்கப்பட்டது. கடற்படையினரின் விசாரணையில், மீனவர்கள் சரியான உரிமம் இல்லாமல் கடல்அட்டைகள் பிடித்தமை தெரிய வந்தது.

கைது செய்யப்பட்டவர்கள் 23 மற்றும் 33 வயதுடையவர்கள் எனவும் மன்னார் மற்றும் கொண்டச்சிக்குடாவில் வசிப்பவர்கள் என அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இந்தச் சோதனையின்போது 2 டிங்கிகள், 2 ஓ.பி.எம்.கள், 977 சட்டவிரோதமாக பிடிக்கப்பட்ட கடல்அட்டைகள் ஆகியவற்றை கடற்படையினர் கைப்பற்றியுள்ளனர்.

மேலதிக விசாரணைகளை கடற்படையினர் மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ம-3,285)

## விசாரணைக்குட்…

கையின் தூதுவர் கருணாசேன ஹெட்டியாராச்சியை சுவிட்சர்லாந்திற்கு அழைத்து தமது நாட்டின் நிலைப்பாட்டை தெளிவுபடுத்திய வேளை அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

உடல்நிலை காரணமாக குறிப்பிட்ட பணியாளர் இன்னமும் விசாரணைக்கு உட்படுத்த முடியாதவராக காணப்படுகின்றார் என பாஸ்கல் பெரிஸ்வில் உறுதி செய்தார்.

தனிநபரின் உடல்நிலையே முக்கியமான விடயம் என அவர் வலியுறுத்தினார் என சுவிட்சர்லாந்தின் வெளிவிவகாரத்திற்கான சமஷ்டி திணைக்களம் அறிக்கையொன்றில் தெரிவித்துள்ளது. (ம-3)

## காத்திருக்கி…

தெரிவித்துள்ளது.

கூட்டமைப்பின் பொதுச்செயலாளர் மாவை சேனாதிராசா இதனைத் தெரிவித்துள்ளார்.

அதேநேரம் தமிழினப் பிரச்சினைகள், தேசிய பிரச்சினைகளுக்கான தீர்வு மற்றும் அரிசியல் தீர்வு போன்ற விடயங்களை கிடப்பில் விட முடியாது.

இந்த விடயத்தில் இந்தியாவினால் நிறைவேற்றப்பட வேண்டிய பல பொறுப்புகள் இருக்கின்றன.

எனவே இந்த விடயங்கள் சம்பந்தமாக இந்திய அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தயாராக இருக்கிறது.

அதற்கான அழைப்பு கிடைத்த உடன், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பிரதிநிதிகள் இந்தியாவிற்கு விஜயம் செய்வார்கள் என்றும் மாவை சேனாதிராசா தெரிவித்துள்ளார். (ம-3)

## தனியார் காணி…

சமூக அக்கறை கொண்ட சட்டத்தரணிகளும், அரசியல்வாதிகளும் குறித்த விகாரை கட்டுவதற்கு எதிராக சட்டநடவடிக்கை எடுக்க முன்வர வேண்டும் என்றும் வலி. வடக்கு பிரதேச சபை உறுப்பினர் எஸ்.சஜீவன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

வலி.வடக்கு தையிட்டிப் பகுதியில் தனியாருக்குச் சொந்தமான சுமார் இரண்டு ஏக்கரை ஆக்கிரமித்து புதிய புத்த விகாரை ஒன்றினை அமைக்கும் நடவடிக்கையில் இராணுவத்தினர் ஈடுபட்டு வருகின்றனர்.

குறித்த விடயம் தொடர்பில் வலி.வடக்கு பிரதேச சபைக்கு எழுத்து மூலமான முறைப்பாடுகள் கொடுக்கப்பட்டும் இதுவரை யில் எந்தவிதமான நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை.

ஆட்சி மாற்றத்திற்கு பின்னர் குறித்த விகாரையினை அமைக்கும் நடவடிக்கையில் இராணுவம் மிக மும்முரமாக செயற்பட்டு வருகின்றது.

இதனை சட்டரீதியில் தடுத்து நிறுத்துவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் என பிரதேச மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ம-3)

## ஈரோஸ் அருளர்…

வந்த நிலையில் நேற்று உயிரிழந்தார்.

தமிழ் ஈழ விடுதலைப் போராட்டத்தின் மூத்த போராளி யான அருளர், 77ஆம் ஆண்டு இனக் கலவரத்தினால் பாதிக்கப்பட்ட மக்களை கொழும்பில் தங்க வைத்து, லங்கா ராணி என்ற கப்பலில் வடக்கிற்கு அனுப்பி வைப்பதில் முன்னின்று செயற்பட்டவர். இந்த பின்னணியில் லங்கா ராணி என்ற நாவலை அவர் எழுதியிருந்தார்.

அருளரின் குடும்பத்திற்குச் சொந்தமான கன்னாட்டி பண்ணையில் தமிழீழ போராட்டத்தின் ஆரம்பகர்த்தாக்கள் அனைவரும் தங்கியிருந்ததுடன், பயிற்சியும் பெற்றிருந்தனர். விடுதலைப் புலிகளின் தலைவர் வே. பிரபாகரனும் அந்த பண்ணையில் நீண்டகாலம் தங்கியிருந்தார்.

1980களில் புலம்பெயர்ந்து வெளிநாடு சென்ற அருளர், யுத்தத்தின் பின்னர் நாடு திரும்பி, யாழ்ப்பாணத்தில் வசித்து வந்தார்.

இவரின் அஞ்சலி நிகழ்வுகள் இன்று யாழ்ப்பாணத்தில் நடைபெற்றதன் பின்னர் பூதவுடல் வவுனியாவுக்கு எடுத்துச் செல்லப்படும். (ம-3)

## அரசு அதனை…

சரவை இணைப் பேச்சாளருமான பந்துல குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

பல்கலைக்கழகங்களின் துணைவேந்தர்கள், தகுதிவாய்ந்த அதிகாரி, பீடாதிபதிகள் மற்றும் பதிவாளர் ஆகியோருடன் நேற்று செவ்வாய்க்கிழமை உயர்கல்வி அமைச்சில் இடம்பெற்ற கலந்துரையாடலிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன், நேற்றைய கலந்துரையாடலும் தனிச் சிங்களமொழியிலேயே முன்னெடுக்கப்பட்டது என்று அறியமுடிகிறது. (ம-3)

## தமிழீழ விடு…

செவ்வாய்க்கிழமை தனது தீர்ப்பை வெளியிட்டுள்ள சமஷ்டி நீதிமன்றம் தனது முன்னைய தீர்ப்பை மீண்டும் உறுதிசெய்துள்ளது.

1999 முதல் 2009ஆம் ஆண்டுவரையான காலப்பகுதியில் விடுதலைப்புலிகளுக்கு நிதி சேகரித்ததாக சுவிட்சர்லாந்தின் குற்றவியல் கோவையை மீறியதாக 12 பேருக்கு எதிராக சுவிஸின் சட்டமா அதிபர் அலுவலகம் குற்றச்சாட்டுகளை சுமத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இது குறித்து நேற்று தனது தீர்ப்பை வெளியிட்டுள்ள சமஷ்டி நீதிமன்றம் தனது முன்னைய தீர்ப்பை மீண்டும் உறுதி செய்துள்ளது.

விடுதலைப் புலிகள் அமைப்பினர் பயங்கரவாத செயல்களில் ஈடுபட்டிருந்தாலும் அவர்களது பிரதான நோக்கம் இன சமூகத்திற்கு சுதந்திரத்தை பெற்றுக்கொள்வதே என்பது அங்கீகரிக்கப்பட்டுள்ளதாக நீதிமன்றம் தெரிவித்துள்ளது. (ம-3)


செவன
திகதி 03/12/2019
சீட்டிழுப்பு இலக்கம் 241
Q 06 18 25 36
NATIONAL LOTTERIES BOARD

கொவிசெத உத்தியோகபூர்வ முடிவுகள் NLB
சீட்டிழுப்பு திகதி 03-12-2019
சீட்டிழுப்பு இலக்கம் 2319
வெற்றி இலக்கங்கள்
R 26 33 34 69
தேசிய லொத்தர் சபை

நீரோகா
திகதி 2019/12/03
சீட்டிழுப்பு இலக்கம் 0631
லக்கினம் வெற்றி இலக்கங்கள்
மேஷம் 02 16 37 43

மஹஜன சம்பத
திகதி 2019/12/03
சீட்டிழுப்பு இலக்கம் 4062
G 7 3 5 6 0 6
தேசிய லொத்தர் சபை

ஜயோதா உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் 1626 சீட்டிழுப்பு திகதி 03/12/2019
வெற்றி இலக்கங்கள் 02 07 49 68 J
ரூ. 41,917,456
Tel: 011 4062062 / 0114062062 Web: www.dlb.lk

ராசி அதிர்ஷ்டம்
திகதி 03/12/2019 வெற்றி வாரம் 2696 வர்ணம் சிவப்பு
வெற்றி இலக்கங்கள் கன்னி 15 17 54 55
புதன் கிழமை வெற்றிப் பொதி ரூ. 3,650,936
2019/12/04 ம் திகதி புதன் கிழமை பச்சை நிற டிக்கட்டுக்களாகும்
வெற்றி பெற்ற சீட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்
Web: www.dlb.lk

அத கோடிபதி ADA KOTIPATHI
சீட்டிழுப்பு இல: 810
வர்ணம் : இளநீலம்
சீட்டிழுப்பு திகதி: 2019.12.03
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 69,996,090/-
வெற்றி இலக்கங்கள் 11 31 61 77 F
அபிவிருத்தி லொத்தர் சபை

ஜய
H 02 13 33 56
சீட்டிழுப்பு இல 528
03.12.2019
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 79,995,100
தொ.பே: 0112 333 546/47 Web: www.dlb.lk

# ICT WORLD

கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

**புதிய கல்வியாண்டு - 2020**

தரம் 10, 11 மாணவர்களுக்கான தமிழ், ஆங்கில மொழி மூலமான

**தகவல் தொடர்பாடல் தொழினுட்பவியல் (ICT)**

ஆரம்பம் : 04.12.2019 (இன்று புதன்கிழமை)

மாலை 3.00 மணி - தரம் 10 | மாலை 4.00 மணி - தரம் 11

நவீன கற்பித்தல் முறைகளுடன் கூடிய வகுப்பறை மற்றும் மட்டுப்படுத்தப்பட்ட மாணவர் அனுமதிகள் (1362)

Teacher
S.Umakanthan (BIT - University of Colombo)
ICT ஆசிரியர் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி 0778888604

# காண்டம் பார்த்தல்

உங்கள் வாழ்வில் நடந்த மற்றும் நடக்கப் போகின்ற அனைத்து விடயங்களையும் மிக வும் துல்லியமாக கணித்துத் தருகின்றோம்.

தொடர்பு: 076 835 1932,
021 223 2222 (உரும்பிராய்) (1364)

# வீட்டுப் பணிப்பெண் தேவை

சிறிய அரச உத்தியோகத்தர் குடும்பம் ஒன்றிற்கு வீட்டில் தங்கி நின்று வேலை செய்யக்கூடிய 50 வயதிற்கு மேற்பட்ட நற்பண்புள்ள பணிப் பெண் தேவை. வேலை மிகவும் குறைவு. சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கலாம்.

(1370) தொடர்பு: 077 706 2496

# வலம்புரி

விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532

# கோணேஸ்வரனின் ஜேர்மன் கல்லூரி

ஜேர்மன், சுவிஸ், ஒஸ்ரியா ஆகிய நாடுகளுக்கான A1 டொச் வகுப்புக்கள் புதிய பிரிவுகள் விரைவில் ஆரம்பமாகவுள்ளது. மற்றும் ஜேர்மனியில் வசித்து வந்த ஆசிரியர் **எஸ்.கோணேஸ்வரன்** அவர்களால் இலகுவான வழியில் கற்பிக்கப்படுகிறது.

ஆரியகுளம் சந்தி (புத்தர் விகாரைக்கு எதிரே)
1ம் மாடி, யாழ்ப்பாணம்.

**077 970 7322** (1348)

# K P MATHS CENTER

அல்வாய் மேற்கு, அல்வாய் (பொலிகண்டி)

தரம் 7,8,9,10,11 இற்கான கணித வகுப்புக்கள் ஆரம்பம்

திகதி :- 2019.12.06 (வெள்ளிக்கிழமை)
நேரம் :- முற்பகல் 9.00 (1368)

ஆசிரியர் : திரு.கி.முகுந்தன்

T.P No : 077 711 0555

# Techno World

## தொழில்நுட்பப் பிரிவு

**A/L 2020 Day Class**

ஆரம்பம்

- பொறியியல் தொழில்நுட்பவியல்
- உயிர்முறைமைகள் தொழில்நுட்பவியல்
- தொழில்நுட்பவியலுக்கான விஞ்ஞானம்
- ICT, இலகு கணிதம், விவசாய விஞ்ஞானம், புவியியல், சித்திரம் (C-8415)

06.12.2019 வெள்ளிக்கிழமை காலை 8.30
077 017 5346, 077 170 3549
வெலிங்டன் சந்தி, யாழ்ப்பாணம்.

# நெல்லியடியில்...

வெளிநாடுகளுக்கான துரித தபால் பொதிகள் சேவை

| | |
|---|---|
| லண்டன் - 540/= | கனடா - 950/= |
| ஜேர்மனி - 640/= | நெதர்லாந்து - 690/= |
| இத்தாலி - 690/= | |

சலுகை அட்டை (Discount Card) பெற வேண்டும் எனும் நிபந்தனை இல்லை.

**076 443 1576**



# அருள்

பெற்றோல் செற் எதிரில் பிரதான வீதி, நெல்லியடி. (C-8397)

# வெளிநாடு - உள்நாடுகளுக்கான விரைவுப் பொதிகள் சேவை

WESTERN UNION **070 330 5500** WESTERN UNION

அண்ணா பொதிகள் சேவை

976,கே.கே.எஸ் வீதி,நாச்சிமார் கோவிலடி (C-8404)

021 221 5656 யாழ்ப்பாணம் 077 888 9388

பொதிகள் மற்றும் கடிதங்களை துரிதமாகவும் நம்பிக்கையுடனும்,குறைந்த கட்டணங்களுடனும் அனைத்து நாடுகளுக்கும் மிகக் குறுகிய நாட்களுக்குள் அனுப்பிடவும் எம்மை நாடுங்கள்.

3 - 6 நாட்களுக்குள் உங்கள் கைகளில்

வேலணை – அரியாலை – சங்கானை – சுன்னாகம்
கரணவாய் –மீசாலை–கிளிநொச்சி–கனகராயன்குளம்
முல்லைத்தீவு–மன்னார்–வவுனியா–திருகோணமலை

# Dollars Multi Shop And Dollars Electricals

நத்தார் புதுவருடத்தை முன்னிட்டு LED Bulbs அதிரடி விலைக் குறைப்பு

## Sunk Panel (உள்ளே வெட்டி வைப்பது)

6W Panel Liget - 300/=
12W Panel Liget - 380/=
18W Panel Liget - 480/=

1 வருட உத்தரவாதம்






04.12.2019 தொடக்கம்
05.01.2020 வரை (1357)

## Surface Panel (பிளட்டில் பூட்டுவது)



6W - 380/=
12W - 480/=
18W - 600/=

1 வருட உத்தரவாதம்

கையிருப்பு உள்ளவரை மட்டும்






கிறிஸ்மஸ் சோட்னை Bulbs விலைக்குறைப்பில் விற்பனையாகின்றன

RUNNIY - 200/=

**Dollars Multi Shop**
இல.11, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
(முட்டாஸ் கடைச் சந்தி அருகாமை)
தொடர்புகளுக்கு : 077 063 2559

**Dolars Electricals**
No.244, K.K.S Road, Jaffna.

# நினைவு ஆராதனை, நன்றி வழிபாட்டு அழைப்பு

அமரர்

## புஷ்பராணி சங்கரப்பிள்ளை

(ஓய்வு நிலை மூத்த ஆசிரியர் - யா/உடுத்துறை மகா வித்தியாலயம்)

தோற்றம்
22 * 08 * 1939





கர்த்தருக்குள்
05 * 11 * 2019

05.11.2019 கர்த்தருக்குள் நித்திரையடைந்த எமது தாயாரின் நல்லடக்கம் அவரது குடும்ப பாரம்பரியம் மிக்க யா/உடுத்துறை பரி.மகதலேனால் மரியாள் கல்லறை தோட்டத்தில் 06.11.2019 புதன்கிழமை இடம்பெற்றது.

அன்னாரின் 31ஆம் நாள் நினைவு ஆராதனையும் நன்றி வழிபாடும் இலங்கைத் திருச்சபையினரால் அன்னாரின் மூத்த மகனின் இல்லத்தில் நாளை 05.12.2019 வியாழக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் நடை பெறவுள்ளது.

நிகழ்வில் கலந்து அம்மாவின் நித்திய இளைப்பாறுதலுக்காக பிரார்த்தித்து மதிய போசனத்திலும் நினைவு அன்பளிப்பு நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு எம் உறவுகள், குடும்ப நண்பர்கள், அன்புக்குரியவர்கள் அனைவரையும் தலை தாழ்த்தி இருகரம் கூப்பி வாஞ்சித்து நிற்கின்றோம். தயவு கூர்ந்து இவ்வழைப் பினை ஒவ்வொருவரும் தனித்தனியான அழைப்பாக ஏற்றுக் கொள்ளும்படி மிக மிகப்பணிவாக வேண்டிநிற்கின்றோம்.

சம்பந்தர் கடைச்சந்தி, கரவெட்டி.
077 128 2455 (C-8410)

நன்றிகளுடன்
குடும்பத்தினர்

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 04.12.2019 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.